DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
Ragu Thillainathan Sales Representative homesbyraghu@gmail.com

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East (2nd flr) Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23-8907 The Gore Rd. Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail: raj.p@rogers.com


ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

உதயம் 1555 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday January 23, 2026

# சுவிற்சலாந்தின் டாவோஸ் நகரில் உலகப் பொருளாதார கருத்தரங்கில் அமைதியை விரும்பும் உலகத தலைவர்கள் மத்தியில் ஆணித்தரமான உரையாற்றிய கனடியப் பிரதமர் மார்க் கார்னி!



கடந்த 20ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று சுவிற்சலாந்து தேசத்தின் டாவோஸ் நகரில் இடம்பெற்ற உலகப் பொருளாதார கருத்தரங்கில் அமைதியை விரும்பும் உலகத தலைவர்கள் மத்தியில் ஆணித்தரமான உரையை ஆற்றி கனடியப் பிரதமர் மார்க் கார்னி அவர்கள் பலரது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் பெற்றார் என்றால் அது மிகையாகாது.

அவர் அங்கு தனக்குரிய நேரத்தில் உரையாற்றிய போது கீழ்க் கண்டவாறு ஆரம்பித்தார். உலகத் தலைவர்களும் பொருளாதார ஆலோசகர்களும் அவரது உரையை கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்

உலக ஒழுங்கு தகர்வது குறித்தும், அதாவது நல்லதொரு கதையின் முடிவு குறித்தும், பெரும் சக்திகளுக்கு இடையிலான புவிசார் அரசியல் எந்தக் கட்டுப்பாடுகளும் இன்றியிருக்கும் கொடூரமான யதார்த்தத்தின் ஆரம்பம் பற்றியும் நான் இன்று பேசவுள்ளேன்.

ஆனால், மற்றைய நாடுகள், முக்கியமாகக் கனடா போன்ற இடைநிலை பலம் கொண்ட தேசங்கள் சக்தியற்றவை அல்லவெனவும் நான் கூறுவேன். ஆனால் மனித உரிமைகளை மதிப்பது, நீடித்திருக்கும் அபிவிருத்தி, ஒற்றுமை, இறையாண்மை, உலக நாடுகளின் பிரதேச ஒருமைப்பாடு போன்ற எமது விழுமியங்களை உள்ளடக்கிய புதியதொரு ஒழுங்கைக் கட்டியெழுப்பும் வல்லமை இந்த நாடுகளிடம் உள்ளது.

எனவே சக்தி குறைந்தவர்களில் மத்தியில் இருந்து தான் சக்தியின் நேர்மையான போக்கு ஆரம்பமாகும்.பெரும் சக்திகளுக்கு இடையில் போட்டி நிகழும் ஒரு சகாப்தத்தில் நாம் வாழ்வது நாள்தோறும் எமக்கு நினைவுபடுத்தப்படுகிறது. விதிகளை அடிப்படையாகக் கொண்ட ஒழுங்கு மறைந்துவருகிறது. வலியவர்கள் தம்மாலியன்றதைச் செய்கிறார்கள், பலவீனமானவர்கள் அனுபவிக்க வேண்டியதை அனுபவிக்கிறார்கள்.

அவரது உரையின் முழுமையான வடிவத்தை **www.uthayannews.ca** என்னும் எமது இணையத்தளத்தில் படிக்கலாம்

## UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL 2026

உலகெங்கும் பேசப்பெறும் கனடா உதயன் சர்வதேச விருது விழா 2026
06-06-2026 அன்று கனடா ஸ்காபுறோ நகரில் நடைபெறவுள்ளது. விருது விழா தொடர்பான மேலதிக விபரங்களுக்கு uthayannews@yahoo.com என்னும் மின்னஞ்சல் மூலமாகவோ அன்றி 416 732 1608 அல்லது 647 854 8384 ஆகிய தொலைபேசி இலக்கங்களிலோ தொடர்பு கொள்ளவும்.

# கனடா — கியுபெக் மாகாணத்தில் இயங்கிவரும் "கியுபெக் தமிழ் மரபுத் திங்கள் கூட்டமைப்பு" நடத்திய பிரமாண்டமான " கியுபெக் தமிழ் மரபுத் திங்கள் — 2026



கனடா- கியுபெக் மாகாணத்தில் இயங்கிவரும் "கியுபெக் தமிழ் மரபுத் திங்கள் கூட்டமைப்பு" நடத்திய பிரமாண்டமான " கியுபெக் தமிழ் மரபுத் திங்கள்-2026 இவ்வருட விழாவில் முக்கிய அம்சமாக கனடாவில் உள்ள மூன்று ஊடகங்களைச் சேர்ந்தவர்களுக்கு சிறப்புக் கௌரவம் செய்யும் நிகழ்வும் இடம்பெற்றது ஐயா4யு உரிமையாளர் திரு. பேரின்பநாதன்- தமிழ்வண் தொலைக்காட்சி அதிபர் ஸ்ரீ அவர்கள் மற்றும் மொன்றியால் ஐதமிழ் இணைய ஊடகத்தின் சார்பில் காந்தி அவர்கள் ஆகியோர் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஹரி ஆனந்தசங்கரி அவர்களால் கௌரவிக்கப்பெற்றனர். (தொடர்ச்சி 13ம் பக்கம்)





தமிழில் உரையாடி உங்கள் நெருக்கடியான நேரத்தில் எமது சேவைகளை பூரண திருப்தியுடன் பெற்றுக்கொள்ளுங்கள்
SMART RESTORATION
ARUN ANANTH
24/7 EMERGENCY SERVICES
647-849-4444 (Cell)
1-833-SMART 09 (Office) (76278)
Water and flood services • Mold remediation • Trauma • Sewage cleanup • Fire & smoke • 24/7/365 days
LICENSED INSURED CERTIFIED

GL PRIME LEGAL SERVICES
இலவச சட்ட ஆலோசனை 905 334 6851
Immigration Law | Family Law | Criminal Law
• PR APPLY • SPONSORSHIPS • WORK PERMIT
• SUPER VISA All Other Legal Services
www.glprimelegal.ca ERAA PLAZA Unit #231



# யாழ்ப்பாண முற்றவெளி மைதானத்தில் நடைபெறவுள்ள 16வது சர்வதேச வர்த்தகக் கண்காட்சி!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

வட இலங்கையில் வணிகம், புத்தாக்கம், மற்றும் நிலைபேற்றியலை வலுப்படுத்துகின்ற 16 ஆவது சர்வதேச வர்த்தக கண்காட்சி யாழ். முற்றவெளி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வட இலங்கையின் மிகப் பெரிய மற்றும் மிகவும் ஆதிக்கம் செலுத்தும் பன்முக வர்த்தகக் கண்காட்சியான யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நிகழ்வானது. தொடர்ந்து 16 தடவையாகவும் இடம்பெற ஏற்பாடாமியுள்ளதுடன், 2026 ஜனவரி 23 முதல் 25 வரை யாழ் முற்றவெளி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப்பிராந்தியத்தில் மிகவும் நிலைபெற்றுள்ள வர்த்தக மேடையாக மாறியுள்ள இக்கண்காட்சி வட மாகாணத்தின் மத்தியில் பொருளாதார மேம்பாட்டை முன்னேற்றி, வணிக தொடர்புகளை வளர்த்து. தொழில்நுட்பத்தால் முன்னெடுத்துச் செல்லப்படும் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதில் தொடர்ந்தும் முக்கிய பங்கு வகிக்கும்.

இலங்கையில் கண்காட்சி மற்றும் வர்த்தக நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதில் முன்னிலை வகிக்கும் அதேசமயம், ஜனாதிபதி விருதையும் வென்றுள்ள Lanka Exhibition & Conference Services (LECS) ன் ஏற்பாட்டிலும், யாழ் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் ஒத்துழைப்புடனும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள JITE. நாட்டில் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்ற நிகழ்வுகளில் ஒன்றாக வளர்ச்சி கண்டுள்ளது.

தொழில் நேர்த்தி மற்றும் பல தசாப்தங்கள் நீண்ட தொழில்துறை நிபுணத்துவம் ஆகியவற்றுக்காகப் பெயர்பெற்று விளங்கும் LECS, உச்ச மட்ட பங்கேற்பு, பரந்தளவில் தேசிய தெரிநிலை, மற்றும் யாழ் குடாநாடு எங்கிலும் சீரான வகையில் JITF குறித்த ஊக்குவிப்பு எட்டுவதை உறுதி செய்யும் அதன் வலுவான வலையமைப்பு மற்றும் நன்மதிப்பு ஆகியன மிக வேகமாக வளர்ச்சி கண்டு வருகின்ற வட பிராந்திய சந்தையில் மூலோபாய நுழைவாயிலாக இக்கண்காட்சி திகழ்வதை அங்கீகரித்துள்ள வியாபாரங்கள், முதலீட்டாளர்கள், மற்றும் நிறுவனங்களை தொடர்ந்தும் இந்நிகழ்வு தன்பால் ஈர்த்து வருகின்றது.

வடக்கில் இடம்பெறும் மிகவும் விரிவான மற்றும் பெறுபேறுகளால் முன்னெடுக்கப்படுகின்ற வர்த்தகக் கண்காட்சியாக JITF மிகவும் வலுவாக நிலைபெற்றுள்ளது. இந்த ஸ்தானத்தை 2026 ஆண்டு நிகழ்வும் மீண்டும் வலுப்படுத்தவுள்ளது.

கடந்த ஆண்டு நிகழ்வில் இலங்கையின் அனைத்து பாகங்களிலுமிருந்து 78,452 பார்வையாளர்கள் பங்குபற்றியதுடன் சிரேஷ்ட அதிகாரிகள், வர்த்தகத் துறை தலைவர்கள், தொழில்முயற்சியாளர்கள், மற்றும் முதலீட்டாளர்கள் அடங்கலாக வணிகப் பிரதிநிதிகள் 5,000 பேரும் அழைக்கப்பட்டிருந்தனர். வர்த்தகப் பரிமாற்றம் மற்றும் சந்தை ஆய்வு ஆகியவற்றுக்கான முதன்மையான மேடை என்ற இக்கண்காட்சியின் அந்தஸ்தை மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையான வரவுகள் பிரதிபலிக்கின்றன.

பலவகைப்பட்ட கைத்தொழில் துறைகள் மத்தியில் விரிவான தயாரிப்புக்கள் சேவைகள், மற்றும் நவீன தொழில்நுட்பங்களைக் கொண்ட 400 கரும் மேற்பட்ட கண்காட்சிக்கூடங்களை இக்கண்காட்சி நிகழ்வு கொண்டிருக்கும் இலங்கை மிகவும் பிரகாசமான வாய்ப்புடன் சீராக விஸ்தரிப்படைந்து வருகின்ற பிராந்தியப் பொருளாதாரங்களில் ஒன்றின் அனுபவங்களை ஆராய விரும்புகின்ற உற்பத்தியாளர்கள்.

சேவை வழங்குநர்கள் விநியோகத்தர்கள் ஏற்றுமதியாளர்கள் மற்றும் புத்தாக்குநர்கள் போன்ற தரப்பினரை இந்நிகழ்வின் பல்வகைப்பட்ட இறக்குமதியாளர்கள், கண்காட்சியாளர்கள் தளம் வெகுவாக ஈர்க்கின்றது.

# நல்லூர் பிரதேச சபையின் உப அலுவலகங்களை தலைமை அலுவலகத்துடன் இணைத்தல்

உள்ளூராட்சி மன்றங்களின் ஆளணி மீளாய்வு தொடர்பாக திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கு அமைவாகவும் தேவையற்ற நிர்வாக செலவுகளை குறைத்து நல்லூர் பிரதேச சபையின் ஆளணிகளை ஒருங்கிணைத்து பொதுமக்களுக்கு வீண் அலைச்சல் அற்ற வினைத்திறனான சேவையினை ஒரே கூரையின் கீழ் வழங்கும் பொருட்டும் நல்லூர் பிரதேச சபையின் நல்லூர் மற்றும் கொக்குவில் உப அலுவலகங்கள் நல்லூர் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்துடன் இணைக்கப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப.மயூரன் தெரிவித்துள்ளார்.

ஊடக அறிக்கை மூலமாக இதனை தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, இதன் பிரகாரம் எதிர்வரும் 09.02.2026 திங்கட்கிழமை முதல் நல்லூர் உப அலுவலகம் தலைமை அலுவலகத்துடன் இணைக்கப்படும். அதே போல் இவ் வருட நடுப்பகுதியில் கொக்குவில் உப அலுவலகம் தலைமை அலுவலகத்துடன் இணைக்கப்படும்.

குறித்த உப அலுவலகங்கள் தலைமை அலுவலகத்துடன் இணைக்கப்பட்ட பிற்பாடு சோலை வரி மற்றும் வருமானப் பகுதி, கட்டுமானத்திற்கான அனுமதி வழங்கும் பகுதி, பொதுமக்கள் முறைப்பாட்டுப் பகுதி போன்ற புதிய கிளைகள் தலைமை அலுவலகத்தில் உருவாக்கப்படும்.

அத்துடன் உப அலுவலகங்கள் ஆயுள்வேத வைத்தியசாலைகளாகவும், மற்றும் சபையின் சுயவருமானத் தினை அதிகரிக்கும் வகையிலும் வேலைவாய்பினை உருவாக்கும் வகையிலும் சுயதொழில் ஊக்குவிப்பு தொழில் மையங்களுக்காவும் மாற்றப்படுவதோடு செயலமர்வுகளுக்கு வாடகைக்கு கொடுப்பதற்கும் பயன்படுத்தப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# பிரித்தானியா வாழ் புலம்பெயர் தமிழர்கள் யாழ்ப்பாணத்தில் முதலீடுகளை மேற்கொள்வார்கள் என பிரித்தானிய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு!






பிரித்தானிய உயர்ஸ்தானிகர் கௌரவ ஆன்ட்ரு பற்றிக் (Andrew Patrick), யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிர-தீபனை 21ம் திகதி செவ்வாய்கிழமை அன்றைய தினம் (21.01.2026) காலை 08.15 மணிக்கு அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

இச் சந்திப்பில் உயர்ஸ்தானிகர் டித்வா புயல் தாக்கத்தின் பாதிப்புக்கள் தொடர்பாக வினாவிய போது, டித்வா புயல் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 20023 குடும்பங்கள் பாதிக்கப்பட்டதாகவும், வீடுகளை சுத்தம் செய்வதற்காக 13168 குடும்பங்களுக்கு 25000 ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டதாகவும், பாதிக்கப்பட்ட 15260 பாடசாலை மாணவர்களுக்கு 15000 ரூபா வீதம் பாடசாலை உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக வழங்கி தொடர்ச்சியான கல்விக்கு உறுதுணையாகவிருந்ததாகவும், மேலும், சேதமடைந்த வீதிகள் உள்ளிட்டவற்றை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இதன் போது கருத்து தெரிவித்த உயர்ஸ்தானிகர், டித்வா புயல் பாதிப்புக்குள்ளானவர்களுக்கான நிதியினை அரசாங்கத்திற்கு வழங்கி செஞ்சிலுவை சங்கத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தி வருவதாகவும், டித்வா புயலுக்குப் பின்னரான அரசாங்கத்தின் செயற்பாடுகளை அவதானித்தவகையில் சிறப்பான முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்தார்.

மேலும், யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள இளைஞர் யுவதிக-ளின் வேலைவாய்ப்பு மிகவும் அத்தியாவசியமாகவுள்ளதாகவும், தகவல் தொழில்நுட்பம் உற்பத்தித் திறன் ஆகியவற்றில் எமது இளைஞர் யுவதிகள் திறமை பெற்றுள்ளதாகவும், பொருத்தமான வேலைவாய்ப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தினால் மாவட்டம் மற்றும் நாடு பொருளாதார ரீதியாக அபிவிருத்தி அடையும் எனவும் தெரிவித்தார்.

இதன் போது கருத்து தெரிவித்த பிரித்தானிய உயர்ஸ்தானிகர், பிரித்தானியாவில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் யாழ்ப்பாணத்தில் முதல-ீடுகளை மேற்கொள்வார்கள் என தாம் நம்புவதாகவும் தெரிவித்து, மாவட்டத்தின் தற்போதைய சமூக பொருளாதார முன்னேற்ற நிலைமைகள், காங்கேசன்துறை முதலீட்டு வலயம், முதலீட்டு வாய்ப்புக்கள் போன்ற விடயங்களை அரசாங்க அதிபரிடம் கேட்டறிந்து கொண்டனர்.

இச் சந்திப்பில் பிரித்தானிய உயர்ஸ்தானியகத்தின் அரசியலுக்கான இரண்டாம் செயலாளர் திரு. இராமன் செட்டியார் அவர்களும், அரசியலுக்கான அலுவலர் ஃபாறா பிர்தௌஸ் அவர்களும் உடனிருந்தார்கள்.

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com




# உதயன் கதிரோட்டம்

## வடக்கில், தமிழ்த் தேசிய அரசியலில் நேர்மையுடனும் நிதானத்துடனும் பயணிக்கும் தலைவர்கள் இல்லாத வரையும், அநுர போன்ற தென்னிலங்கைத் தலைவர்களை வடக்கின் மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்பதை தவிர்க்க முடியாது!

இலங்கையில் தமிழ்த் தலைவர்களின் மேலாதிக்கத்தில் வடக்கு மக்கள் அரசியலோடு பயணிக்கத் தொடங்கி தற்போது சுமார் 75 ஆண்டுகள் கழிந்தோடி விட்டன. இதுவரையிலும் வடக்கின் தமிழர்களின் வாக்குகளைச் சுமந்த வண்ணம் பாராளுமன்ற அரசியலை நடத்தி வந்த நூற்றுக்கணக்கான தமிழ் அரசியல்வாதிகளை கோசங்களை எழுப்பிய வண்ணமும். தமக்கு வாக்களித்தவர்களுக்கு கூட பொய்யான வாக்குறுதிகளை வழங்கிவிட்டு கொழும்பு வாசிகளாக மாறி தங்கள் குடும்ப நலன்களை மாத்திரம் கவனித்துக் கொண்டு காலத்தைக் கடத்தியவர்களாகவும் இருந்துள்ளார்.

மேலும் எமது கடந்த காலத் தலைவர்களில் எமது மக்கள் பாராளுமன்றத்திற்கு வாக்களித்து அனுப்பியவர்களி தொண்ணூறு சதவீதமானவர்கள் சட்டத்தரணிகளாகவே அரசியலுக்குள் நுழைந்தவர்கள். அவர்கள் நீதி மன்றங்களில் பொய் பேசுகின்றவர்கள் என்பதைத் தெரிந்து கொண்டு அவர்களை பாராளுமன்றத்திற்கும் அனுப்பியவர்கள் எமது தமிழ் மக்கள்.

மொத்தத்தில் எமது தமிழ் மக்கள் இன்னும் அரசியல். சமூக. பொருளாதாரத் தளங்களில் முன்னேற்றங்களைக் அடையாமல் நடுத்தர மற்றும் வறிய குடும்பச் சூழலோடுதான் வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். மறுபக்கத்தில் எமது தமிழ்ச் சமூகத்தில் அரசியல்வாதிகள் பலரும் உயர் அரசாங்க அதிகாரிகளும் வர்த்தகர்களுமே வசதிகளோடு வாழும் மக்களாகத் தென்படுகின்றார்கள். மற்றவர்கள் வறுமை என்னும் கொடிய மிருகம் துரத்திக் கொண்டே இருக்கின்றது. சாதாரண ஆசிரியர்கள் மற்றும் நடுத்தர அரச பதவிகளை வகிப்பவர்கள் கூட வாழ்க்கையை நடத்துவதில் தினந்தோறும் சிரமங்களை சந்தித்த வண்ணமே வாழ்க்கையை நடத்துகின்றார்கள்.

இவற்றை நாம் ஏன் இங்கு குறிப்பிட்டுச் சொல்லுகின்றோம் என்றால், அதற்கு காரணம் உள்ளது. அதாவது. அரசியலும் அரசியல் தலைவர்களும் அந்த தேசத்தின் அல்லது மாகாணத்தின் மக்களுக்காக அரசியல் தாங்கள் சார்ந்திருக்கும் பதவிகளைப் பயன்படுத்த வேண்டும். ஆனால் எமது நாட்டில் அப்படியல்ல நிலைமை.

தமிழ் அரசியல்வாதிகளும் தென்னிலங்கை அரசியல் தலைவர்களும் ஏன்.

மலையக அரசியல் தலைவர்களும் தங்கள் பொருளாதார வளத்தையும் குடும்பத்தின் மேன்மையையும் உயர்த்துவதிலேதான் கவனமாக இருந்துள்ளார்கள். இது உண்மை என்று நிரூபிக்க பல அரசியல்வாதிகளை உதாரணமாக எடுக்கலாம். மலையத்தில் தொண்டமானையும் தென்னிலங்கையில் மகிந்த ராஜபக்ச சகோதரர்களின் குடும்ப பரம்பரையையும் வடக்கில் மாவை சேனாதிராஜா போன்றவர்களையும் உதாரணமாக எடுக்கலாம்.

ஆரம்ப காலத்தில் தமிழரசுக் கட்சி முழு நேர ஊழியராக சம்பளம் பெற்று தனது அரசியலையும் வாழ்க்கையையும் நடத்திய மாவை சேனாதிராஜா அவர்கள் இறக்கும் போது ஒரு செல்வந்தராகவே இவ்வுலக வாழ்க்கையை விட்ட நீங்கிச் சென்றார். அவர் எவ்வாறு ஒரு செல்வந்தர் ஆனார் என்பதை விசாரிக்க தமிழ் மக்களே ஒரு விசாரணைக் குழவை அமைக்க வேண்டும். இந்த சந்தேகம் பல தமிழ் அரசியவாதிகள் மீதும் எம் மககளுக்கு இருப்பது தவிர்க்க முடியாததாக உள்ளது.

மாவை சேனாதிராஜா போன்ற அரசியல்வாதிகள் தமிழ்நாட்டின் கருணாநிதி குடும்ப அரசியலை கவனித்து விட்டு அதுபோன்ற அரசியல் பரம்பரை ஒன்றை நிறுவிட முயன்றார்கள். மாவை சேனாதிராஜா அவர்களுக்கு வடக்கு மாகாண முதலமைச்சராக வரவேண்டும் என்ற "வேட்கை" கடைசி வரையிலும் இருந்தது. அதனாலேயே தனது புதல்வரை அரசியலுக்குள் கொண்டுவர முயற்சி செய்தார். இவ்வாறே, எமது மாகாண அரசியலும் கீழ் நோக்கிச் சென்றது.

மாகாண நிர்வாகத்தின் மூலம் மக்களுக்கு சேவை செய்வோம் என்று கூறி முதலமைச்சர் பதவியிலும் அமைச்சர் பதவியிலும் அமர்ந்தவர்கள் அவ்வாறு மக்கள் பணி செய்யாமல் அதிகார துஸ்பிரயோகங்களிலும் ஊழல்களிலும் கவனம் செலுத்தினார்கள். சில வடக்கு மாகாண அமைச்சர்கள் கூட ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகினார்கள். காற்றாலை ஒப்பந்தங்கள் மற்றும் சீனித் தொழிற்சாலை ஒப்பந்தங்களின் போது சில அமைச்சர்கள் பேரம் பேசி நின்றார்கள். மக்கள் பணிகளை அவர்கள் மறந்து போய் தங்களை "வளர்த்துக் கொள்ள தங்கள் பதவிக் காலங்களை பயன்படுத்தினார்கள்.

இவ்வாறான காரணங்களினால் தான் தற்போது எமது வடக்குத் தமிழர்கள் அநுர குமார போன்ற ஜனாதிபதியையும் அவரது அமைச்சர்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் யாழ்ப்பணைத்தில் வரவேற்கின்றார்கள். எமது தாய்மார்கள் அவர்களை வணங்குகின்றார்கள்.. காரணம் அவர்கள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வான் வழியாக வருவதிலலை. அங்கிருந்து சாதாரணமான வாகங்களில் வீதிகளின் ஊடாக பயணிக்கின்றார்கள். மக்களை நேரடியாகச் சந்திக்கின்றார்கள்.

(அவசியம் கருதி இவ்வாரக் கதிரோட்டம் அடுத்த வாரமும் தொடரும்)

## பெண் பராமரிப்பாளர் தேவை

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீட்டிற்கு திரும்பியிருக்கும் வயதான அம்மாவை வீட்டிற்கு வந்து பராமரித்துக் கொள்ளக்கூடிய பெண் உதவியாளர் தேவை. தொடர்பு: பாலா மாஸ்டர் 416-418-8425

## மணமகன் தேவை

கனடாவில் நிரந்தர குடியுரிமை உள்ள, அரசாங்கத்தில் பணி புரியும் இந்து மத மணப்பெண்ணுக்கு படித்த, குணமுள்ள மணமகன் தேவை. தொடர்பு: 647-533-6564 647-859-4888

## Condo Townhouse for Rent

**2+1 bedrooms - New Condo Townhouse for rent.**
**Close to bus stop, school and shopping. Available immediately.**
**Call 647-201-8784**

## Accommodation Available

**One bedroom available. Only for female.** பெண்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். **Highway 27 and Hwy 7 area : Woodbridge**
**Close to Brampton and Maple. Contact 416 428 2141**

## HELP WANTED

**Workers needed for renovation company. Must have experience in one of the following:**

- **Drywall Installation**
- **Painting**
- **Hardwood Installation**
- **Bathroom Reno**
- **Kitchen Reno**

**Call - Siva 416-706-8160**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# சண்டிலிப்பாய் பிரதேசத்தில் "டித்வா" புயலினால் பாதிப்புற்ற மத வழிபாட்டு தலங்களுக்கான காசோலை வழங்கல்!





அண்மையில் ஏற்பட்ட "டித்வா" புயலினால் பாதிக்கப்பட்ட, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட மாதகல் பாணாகவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயம் மற்றும் மாதகல் நுணசை முருகமூர்த்தி ஆலயம் ஆகியவற்றுக்கு காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

அந்த ஆலயங்களை மீளமைக்கும் பொருட்டு திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட இருபத்தையாயிரம் [25,000] ரூபாவுக்கான காசோலைகளை சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி ஆலய நிர்வாக சபையினரிடம் 22ம் திகதி வியாழக்கிழமை அன்று கையளித்தார்.

# வேலணை பிரதேச சபைக்கு உரித்தான காணியை கையகப்படுத்த இடமளிக்க முடியாது என வேலணை தவிசாளர் காட்டம்!



வேலணை பிரதேச சபைக்கு உரித்தான மண்டைதீவு சுற்றுச்சூழல் பூங்காவுக்கென ஒதுக்கப்பட்டிருந்த ஒரு தொகுதியான சுமார் 2.5 ஏக்கர் காணியை சர்வதேச கிரிக்கெற் மைதானத்தின் தேவை கருதி கையகப்படுத்த யாழ். மாவட்ட செயலகத்தால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை ஏற்க முடியாதென தெரிவித்துள்ள வேலணை பிரதேச சபை, மத்திய அரசின் தூதுவராக செயற்படும் மாவட்ட செயலகத்தின் இந்த செயற்பாடு உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தை கேள்விக்குள்ளாக்கி இருப்பதாகவும் குற்றம் சாட்டியுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் வேலணை பிரதேச சபைக்கு 15.01.2026 ஆம் நாளன்று தீர்மானம் எடுக்கப்பட்டதாக கூறி யாழ். மாவட்ட செயலகத்தால் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில், 15.01.2026 ஆம் தியதியன்று மாவட்ட செயலகத்தில் நடத்த கலந்துரையாடலின் பிரகாரம் தங்களுக்கு வழங்கப்பட்ட வேலணை பிரதேச செயலகத்துக்குட்பட்ட மண்டைதீவு கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் மண்டைதீவு சுற்றுச்சூழல் பூங்காவுக்கென ஒதுக்கப்பட்டிருந்த சுமார் 2.5 ஏக்கர் அரச காணியை இலங்கை கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபை கோரி வருவதால் குறித்த காணியில் எதிர்வரும் காலங்களில் எதுவித அபிவிருத்தி நடவடிக்கைதையும் மேற்கொள்ள வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளதாக அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் சபைக்கு தவிசாளர் தெரியப்படுத்தி கருத்துக் கூறுகையில், வேலணை பிரதேச சபையானது ஒரு வருமானம் குறைந்த சபையாக இருக்கின்றது. நாம் சர்வதேச மைதானத்தை வரவேற்கின்றோம். அதே நேரம் எம்மிடம் இருக்கும் வழங்கள் முழுவதையும் கிரிக்கெற் கட்டுப்பாட்டு சபையிடம் கொடுக்க முடியாது.

குறித்த காணி மைதானம் அமையும் சூழலில் இருப்பதால் அக்காணியில் பிரதேச சபை எதிர்காலத்தில் தனக்கான பெரும் வருமானம் ஈட்டும் வளமாக பயன்படுத்த முடியும்.

இதே நேரம் மைதானத்துக்கு தேவையான காணி ஏற்கனவே ஒதுக்கப்பட்டு வேலைத்திட்டமும் நடைபெறுகின்றது.

இந்நிலையில் ஆடம்பர விடுதிகள் மற்றம் பராமரிப்பு குடியிருப்புக்கள் உள்ளிட்ட இதர நோக்கங்களுக்காகவே காணி கோரப்படுகின்றது.

ஒரு வருமானம் குறைந்த பிரதேச சபையாக இருக்கும் எமது சபை எதிர்காலத்தில் அந்த நிலப்பரப்பை மையமாக வைத்தே பாரியளவு வருமானத்தை ஏற்படுத்திகல்க் கொள்க முடியும். எனவே இந்த செயலை ஏற்க முடிதாது என்றும் தெரிவித்தார்.

இது எமக்குரிய காணி. எதிர்காலத்தில் பிரதேசத்டமதின் வருமான ஈட்டலுக்குரிய மூலதனமாக இருக்கின்றது. எனவே வேலணை பிரதேச சபைக்கு உரித்தான காணி என்பதால் சபையின் எதிர்காக நலன்கருதி எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் குறுத்த காணியை நாம் வேறு ஒருவருக்கு வழங்கும் நிலையில் நாம் இல்லை. அது பிரேரணையாக முன்மொழிந்து சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றார்.

# வடமராட்சி கிழக்கில் அரசால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் தொடர்பான விபரங்கள் இல்லை — பிரதேச செயலகம்!



வன ஜீவராசிகள், வன பாதுகாப்பு, காரையோர பாதுகாப்பு திணைக்களங்கள் ஆகியவற்றால் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் தொடர்பான விபரம் எதுவும் இல்லை என வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் தகவல் வழங்கியுள்ளது.

காணி உரிமைக்கான மக்கள் இயக்க தலைவர் இ. முரளிதரனால் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்திடம் கோரிய தகவலிற்கு அவர்கள் வழங்கிய பதிலிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

பல ஏக்கர் தனியார் காணிகள் உட்பட அரச காணிகளும் வன ஜீவராசிகள் திணைக்களம், வன பாதுகாப்பு திணைக்களம், கரையோர பாதுகாப்பு திணைக்களம் ஆகியவற்றால் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் சட்ட முரணாக கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவற்றை விடுவிக்குமாறு மக்களால் பல தடவைகள் ஒருங்கிணைப்பு கூட்டம் உட்பட பல கூட்டங்களில் கோரிக்கை விடுக்கபட்டிருந்தது.

இவ்வாறான சூழ்நிலையில் வன ஜீவராசிகள் திணைக்களத்தால் அபகரிக்கப்பட்ட காணிகள் தொடர்பான விபரம் இல்லை என குறிப்பிடப்படுவது வியப்பாகவுள்ளதாக காணி உரிமைக்கான மக்கள் இயக்க தலைவர் இ. முரளிதரன் குறிப்பிட்டுள்ளார்.

# நெடுந்தீவுக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை அண்மைக்காலமாக அதிகரிப்பு!



நெடுந்தீவுக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது. எனவே, அப்பிரதேச மக்கள் மற்றும் சுற்றுலாவிகளின் நலன் கருதி, நெடுந்தீவு இறங்குதுறையைப் புனரமைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. இதற்கு நெதர்லாந்து அரசாங்கம் தனது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கோரிக்கை விடுத்தார்.

வடக்கு மாகாண ஆளுநருக்கும், இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதுவர் வீபே டி போர் (Wiebe de Boer) அவர்களுக்கும் இடையிலான உத்தியோகபூர்வச் சந்திப்பு, ஆளுநர் செயலகத்தில் 21ம் திகதி புதன்கிழமை (21.01.2026) மாலை 6.00 மணியளவில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன.

நெதர்லாந்து அரசாங்கத்தின் நிதியுதவியில் கடந்த காலத்தில் புனரமைக்கப்பட்ட யாழ்ப்பாணக் கோட்டைக்கு, தற்போது வருகை தரும் சுற்றுலாவிகளை விடவும் அதிகளவானவர்களை ஈர்க்க வேண்டும் எனத் தூதுவர் விருப்பம் வெளியிட்டார். இதற்குப் பதிலளித்த ஆளுநர், "உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் யாழ்ப்பாணக் கோட்டையை மையப்படுத்திய சுற்றுலா மேம்பாட்டுக்கான விசேட அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன" என்பதைச் சுட்டிக்காட்டினார்.

நெதர்லாந்து அரசாங்கத்தின் நிதியுதவியுடன் வடக்கு மாகாணத்தில் (கிளிநொச்சி, வவுனியா, மாங்குளம், பருத்தித்துறை ஆகிய இடங்களில்) அமைக்கப்பட்டுள்ள 4 மருத்துவமனைகளில், கிளிநொச்சி மருத்துவமனைக்குத் தான் நேரில் சென்று பார்வையிட்டதாகத் தூதுவர் குறிப்பிட்டார். அம்மருத்துவமனைகளை முழு அளவில் இயங்கச் செய்வதற்குத் தடையாக உள்ள சவால்கள் குறித்தும் அவர் ஆளுநரிடம் கேட்டறிந்து கொண்டார்.

"வடக்கு முதலீட்டு உச்சிமாநாட்டில்" தான் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவித்த தூதுவர், கொழும்பிலிருந்து வடக்கை நோக்கி முதலீட்டாளர்கள் நகர்ந்துள்ளமை ஒரு சிறப்பான மாற்றம் எனக் குறிப்பிட்டார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஆளுநர், "தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் வடக்கில் முதலீட்டுக்கான மிகச் சாதகமான சூழல் நிலவுகின்றது. எமது மாகாணத்திலிருந்து விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடை உற்பத்திப் பொருட்கள் மூலப்பொருட்களாகவே வெளியே கொண்டு செல்லப்படுகின்ற. இவற்றை இங்கேயே பெறுமதிசேர் பொருட்களாக (Value Added Products) மாற்றுவதற்கான தொழிற்சாலைகளே எமக்கு அவசியமாகின்றன" என வலியுறுத்தினார்.

மேலும், பனைசார் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி வாய்ப்புகள் குறித்தும், குறிப்பாகப் பனையிலிருந்து புத்தாக்க முயற்சியாக யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படும் வைன் (Wine) உற்பத்தி குறித்தும் ஆளுநர் எடுத்துரைத்தார். இம்முயற்சிகள் எதிர்காலத்தில் மாகாணப் பொருளாதாரத்தில் நேரான தாக்கத்தை ஏற்படுத்தும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

அண்மையில் வீசிய "டித்வா" (Ditwa) புயலால் வடக்கில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும் தூதுவர் கேட்டறிந்து கொண்டார். அத்துடன், மாகாண நிர்வாகச் செயற்பாடுகள், மாகாண சபைத் தேர்தல், போதைப்பொருள் பாவனை விவகாரம் மற்றும் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

மேலும், பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் ஆகியவற்றின் அபிவிருத்தி தொடர்பில், மாண்புமிகு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் உறுதியளித்துள்ளமை வடக்கின் அபிவிருத்திக்குச் சாதகமான சமிக்ஞை எனவும் தூதுவர் சுட்டிக்காட்டினார்.

இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், ஆளுநரின் இணைப்புச் செயலாளர்கள் மற்றும் நெதர்லாந்துத் தூதரகத்தின் சிரேஷ்ட அரசியல் ஆலோசகர், கலாசார ஆலோசகர் ஆகியோர் பங்கேற்றனர்.

கனடிய செய்திகள் Canadian News

# கனடாவில் நிதித்துறை சார்ந்த ஆலோசனைகள் வழங்கும் நிறுவனத்தை நடத்திவரும் வெற்றியாளரான திருமதி. ஷர்மிலி தங்கராஜா



இவ் உலகத்தில் பல விதமான பரிணாமங்களை ஒரு பெண் அடைகிறாள். வாழ்க்கையில் சவால்களையும் இன்னல்களையும் எதிர்த்து சாதனைகள் பல படைத்து கொண்டிருக்கும் உறுதியான மனமும் உயர்வான எண்ணமும் கொண்ட பல பெண்கள் இருக்கிறார்கள்.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரின் பெண்கள் நடத்த வந்தோம்" என்ற பாரதியின் வரிக்கேற்ற ஒரு புதுமைப் பெண் பற்றிய தகவல்களை இவ்வாரத்தின் "கனடா உதயன்" பத்திரிகை வாயிலாக உங்களோடு நாங்கள் பகிர்ந்து கொள்கின்றோம்.

திருமதி. ஷர்மிலி தங்கராஜா யாழ்ப்பாணம் உடுப்பிட்டியில் பிறந்தவர். அவரது ஆரம்ப கல்வியை யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் கற்றவர். தன்னுடைய பதின்ம வயதிலேயே கனடாவிற்கு அவரது பெற்றோருடன் குடியேறி-னர். அதன் பின்னராக இவருடைய பாடசாலைக்கல்வியை மீண்டும் கனடாவில் தொடர்ந்தார். அவரது மேற்படிப்பாக Accounting finance என்னும் தறையை தேர்வு செய்து அதில் பட்டம் பெற்றார்.

கடந்த ஐந்து வருடங்களாக கணக்கியல் நிதி தொடர்பான Shilo Financial Accounting & Business Professional Services என்ற நிறுவனத்தை சொந்தமாக நடத்தி வருகின்றார். அந்தளவில் இந்த துறை சார்ந்தும் இந்த துறையை இவர் தெரிவு செய்தற்கான காரணம் என பல விடயங்களை அவர் எம்மோடு பகிர்ந்து கொண்டார்.

**1. கடந்த ஐந்து வருடமாக சொந்தமாக ஒரு நிறுவனத்தை நடத்தி வருகின்றீர்கள் இந்த துறையில் உங்கள் ஆரம்பம் பற்றி கூற முடியுமா?**

என்னுடைய 25 ஆவது வயதில் இந்த துறையில் என்னுடைய பணியை ஆரம்பித்தேன். நிறைய போட்டிகள் சவால்கள் காணப்பட்டன. ஒவ்வொரு நாளும் புது அனுபவங்களை பெற முடிந்தது. 20 வருடங்கள் பல நிறுவனங்களில் பணி புரிந்து இந்த துறை சார்ந்த அறிவை பெற்று கொண்டதன் ஊடாக கடந்த ஐந்து வருடமாக எனது சொந்த நிறுவனமான Shilo Financial Accounting & Business Professional Services யை வெற்றிகரமாக நடத்தி வருகின்றேன்.

**2. இந்த துறையை நீங்க தேர்வு செய்தற்கான காரணம் என்ன?**

வியாபாரத்தில் எனக்கு அதிக ஆர்வம். புது புது மனிதர்களை சந்திக்க மற்றும் அவர்களோடு உரையாடுவது எனக்கு மிகவும் பிடிக்கும். எப்பவும் புதிதாக கற்றுக்கொள்ள விருப்பம். எப்பொழுதும் நான் சோர்வடைய மாட்டேன். சவால்களை சந்திக்க பிடிக்கும் இவ்வாறான காரணங்கள் தான் என்னை இந்த துறையை தேர்வு செய்ய வைத்தது.

**3. இந்த துறையில் நீங்கள் கண்ட சவால்கள் என்ன அதை எவ்வாறு எதிர் கொண்டீர்கள்?**

எல்லாத் துறைகள் போன்று இந்த துறையிலும் ஆண்களே அதிகமாக காணப்படுகின்றார்கள். இது பெரும் சவாலாகவே காணப்பட்டது. நிறைய போட்டிகள் இருக்கும். ஒரு நல்ல நிலைக்கு வருவது கடினமாகவே இருந்தது. எவ்வளவு அறிவாக வேலை செய்தாலும் அதிக உழைப்பை கொடுக்க வேண்டியதாகவே இருந்தது. இருந்தும் அயராது உழைத்து பல அனுபவத்தை பெற்று இன்று இவ்வாறாக இருக்கின்றேன்.

**4. உங்களுடைய நிறுவனத்தின் ஊடாக உங்களின் வடிக்கையார்களுக்கும் இந்த சமூகத்திற்கு எவ்வாறான நன்மைகள் கிடைக்க பெறுகின்றன?**

என்னுடைய வாடிக்கையாளர்கள் எனது குடும்ப உறுப்பினர்கள் மாதிரி அவர்களுக்கு சரியான தகவல்களை வழங்க வேண்டியது எனது கடமை. முதலில் வியாபாரம் சார்ந்த உண்மை தன்மைகளை எங்களுடைய வாடிக்கையாளர்களுக்கு நாங்கள் தெளிவுபடுத்துவோம். நிதி முகாமைத்துவம் வியாபாரத்திற்கு மிக முக்கியமானது அதனால் நிதி தொடர்பான பல அறிவுரைகளை வழங்குவோம் பின்னர் ஒரு தொழிலை எவ்வாறு எப்படி ஆரம்பிப்பது எப்படி வியாபாரத்தில் வருமானத்தை அடுத்த படிக்குப்பிக்கொண்டு செல்வது போன்ற அவர்களின் எதிர்கால கனவுகளிற்கு வழிகாட்டியாக நாங்கள் செயற்படுகின்றோம். எனவே எனது வாடிக்கையாளர்கள் வெற்றி பெரும் போது நானும் வெற்றி பெறுவேன்.

**5. உங்களுடைய குடும்பம் மற்றும் தொழில் இரண்டையும் எவ்வாறு சமநிலையாக பேண முடிகிறது?**

என்னுடைய கணவரும் இதே துறையில் தன பணி புரிகின்றார் அதனால் எங்களால் புரிந்துணர்வோடு பணியாற்ற முடிகிறது . எனக்கு இரண்டு பிள்ளைகள் நாங்கள் இருவரும் பனி புரிவதால் எங்களுக்கு உதவிக்கு ஆட்களை நியமித்து இருக்கின்றோம் அவர்கள் எங்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கின்றார்கள்.

**6. உங்களை போன்று சாதிக்க நினைக்கும் பெண்களுக்கு நீங்கள் சொல்லும் விடயம் என்ன?**

Don't Give Up. எப்பொழுதும் உறுதியாக இருங்கள். உங்களுடைய துறையையும் உங்களுடைய சொந்த விடயங்களையும் பிரித்தறிய தெரிய வேண்டும். உங்களுடைய தொழில் சார்ந்த தொடர்பாடல்களை அதிகரித்து கொள்ளுங்கள். மக்களை அதிகமாக சந்தியுங்கள் புதிய அனுபவம் பெருகும். தைரியமாக உங்களுடைய துறையில் வெற்றி நடை போடுங்கள்.

நன்றி ஷர்மிலி தங்கராஜா உங்கள் மென்மேலும் வெற்றி பெற உதயன் பத்திரிகையின் சார்பாக வாழ்த்துக்கள்.

***- நேர்காணல்: சாலினி பிள்ளை***



Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்
Dr. Pushpa.V & Associates
Dentist
New Patients Welcome
Open 7 Days a week
Sunday by Appointment only
சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்
We are accepting CDCP insurance.
Scarborough
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
416-289-7187
Markham
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
905-201-8900

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாகாணமட்டத்தில் மதத் தலைவர்களை அரசாங்க பொறிமுறையுடன் இணைந்து நடத்துதல் தொடர்பான கலந்துரையாடல்!

பு. கஜிந்தன்



மாகாணமட்டத்தில் மதத் தலைவர்களை அரசாங்க பொறிமுறையுடன் இணைந்து நடாத்தும் உள்வாங்குதல், நல்லிணக்கம் மற்றும் சமூக நீதி குறித்த அனுபவப் பகிர்வு கலந்துரையாடலானது 22ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

சொண்ட் நிறுவனம் மற்றும் தேசிய சமாதானப் பேரவை ஆகியவற்றின் இணை அனுசரணையில் இந்த நிகழ்வானது நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து சொண்ட் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் செந்தூர்ராஜாவினால் கருத்துரை வழங்கப்பட்டது.

சொண்ட் நிறுவனத்தின் நிறைவேற்று குழு பணிப்பாளர் செந்தூர்ராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சர்வ மத குருக்கள், சமூகமட்ட அமைப்பினர், சொண்ட் நிறுவனத்தினர், தேசிய சமாதானப் பேரவையினர் கலந்துகொண்டனர்.

# முன்னரைப் போன்று கலுவங்கேணி எரிபொருள் நிரப்பு நிலையத்தையும் செயலிழக்கச் செய்ய எம்.பிக்கள் ஹிஸ்புல்லா, சாணக்கியன் ஆகியோர் முயற்சி

இலங்கை செய்திகள் Sri Lanka News

கனகராசா சரவணன்

## ஈ.பி.டி.பி. கட்சியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அந்தனிசில் ராஜ்குமார் "அடித்துக்" கூறுகின்றார்!



காத்தான்குடியில் உள்ள மீனவர்களுக்கான எரிபொருள் நிரப்பு நிலையத்தை செயலிழக்க வைத்து அதனை ஹோட்டலாகியது போல கல்லாற்றில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் செயலிழந்து கிடப்பதை போல இயங்கிவரும் கலுவங்கேணி மண்ணெண்னை எரிபொருள் நிரப்பு நிலையத்தையும் செயலிழக்க வைத்து மூடவைத்து மீனவர்களின் வாழ்வாதாரத்தை இல்லாமல் செய்யும் செயற்பாட்டினை நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா சாணக்கியன் ஏ.எல்.எம். ஹிஸ்புல்லா ஆகியோர் முயற்சி செய்து வருகின்றனர் என ஈ.பி.டி.பி. கட்சியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அந்தனிசில் ராஜ்குமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வொய்ஸ் ஒப் மீடியா கற்கை நிலையத்தில் 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு குற்றச்சாட்டு தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ச காலத்தில் தேசத்துக்கு மகுடம் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் மீனவர்களின் வளர்ச்சிக்காக 9 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் வழங்கப்பட்டது இதில் 7 எரிபொருள் நிலையங்கள் மூடப்பட்டது அதன் பொருட்கள் திருடப்பட்டு செயலிழந்து மீண்டும் உருவாக்க முடியாத நிலையில் கிடக்கின்றது.

இந்த நிலையில் கலுவங்கேணியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் மூடப்பட்டுள்ள நிலையில் இருப்பதை அறிந்து நான் 30 இலச்சத்துக்கு மேற்பட்ட பணத்தை செலவு செய்து மீனவர் சங்கத்திடம் இருந்து 5 வருட குத்தகைக்கு பெற்று அந்த எரிபொருள் நிலையத்தை மீள் இயக்கத்துக்கு கொண்டுவந்து இயக்கி வருகின்றேன்.

நான்கு ஆண்டுகள் எந்தவிதமான பிரச்சனையும் இன்றி நான் செயற்படுத்தி வந்தேன் இந்த நிலையில் இரா.சாணக்கியன் இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை அவரது பினாமிகளுக்கு எடுத்துக் கொடுக்கும் முயற்சியை கடந்த 2025 ம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறார்.

இதன் ஒரு கட்டமாக அபிவிருத்தி குழு கூட்டங்களில் பொய் தகவல்களை கொடுத்து அரசாங்கத்தை இக்கட்டான நிலைக்கு தள்ளபார்க்கின்றார். அதேவேளை அபிவிருத்தி குழு கூட்டத்தில் இரா. சாணக்கியன் முயலை கொண்டு சென்று அதற்கு 3 கால் என்று சொன்னால் அங்குள்ள உறுப்பினர்கள் அனைவரும் 3 கால் என தெரிவிக்க கூடாது அதனை விசாரணை செய்ய வேண்டும்.

இயங்கிவந்த கலுவங்கேணி மண்ணெண்ணையை எரிபொருள் நிரப்பு நிலையத்தை இரா. சாணக்கியன் தனது அதிகாரத்தை வைத்து அப்போதைய கடற்தொழில் திணைக்கள மாவட்ட பணிப்பாளரான குரூஸ் உடந்தையாக செயற்பட்டு கடந்த வருடம் 7ம் மாதம் மண்ணெண்ணை விநியோகத்தை துண்டித்தார்.

அது மட்டுமல்ல அவர் தொடர்ச்சியாக அபிவிருத்தி குழு கூட்டத்தில் தவறான தகவல்களை வழங்கி வந்தார் இது தொடர்பாக ஜனாதிபதியின் செயலாளர் கடற்றொழில் அமைச்சர் மற்றும் கடற்றொழில் நீரியல் வளத்துறை பணிப்பாளர் உட்பட்டவர்களுக்கு அறிவித்தேன் அவர்கள் அது தொடர்பாக எல்லா ஆவணங்களை பார்வையிட்டு மீண்டும் ஒரு வருடத்துக்கு குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை இயக்குமாறு கடற்றொழில் நீரியல் வள பணிப்பாளர் ஜெனரல் கடித மூலம் எனக்கு அறிவித்திருந்தார்.

இதனடிப்படையில் எதிர் வரும் மே மாதம் 10ம் திகதிவரை செயல்படுத்த அனுமதியளித்துள்ள நிலையில் எனது உடன்படிக்கை முடிவடைய முன்னர் சாணக்கியன் அவரது பினாமிக்கு எடுத்து கொடுப்பதற்காக தொடர்ச்சியாக என் மீது பொய் குற்றச்சாட்டுக்களை சுமத்தி எனது மண்ணெண்ணை விநியோகத்தை துண்டித்துள்ளார்கள்.

அதை தெளிவுபடுத்த அரசாங்க அதிபரிடம் சென்று ஆவணங்களுடன் தெரிவித்தபோது அவர் தெரிவித்தார் அது கடற்றொழில் பணிப்பாளர் எடுக்க வேண்டிய முடிவில் தான் தங்கியுள்ளது எனக்கு ஆவணங்களை பார்க்க வேண்டிய தேவை இல்லை என அவர் எனக்கு பதில் தந்தார். எனவே சாணக்கியன் தொடர்ச்சியாக பொய் குற்றச்சாட்டு சுமத்தி வந்தால் அது தொடர்பாக உண்மை தன்மையை ஆராய வேண்டியது அரசாங்க அதிபரின் கடமை ஆனால் அவர் பொறுப்பற்ற விதத்தில் பதில் கூறியது கவலையான விடயம்.

இந்த நிலையில் எனது மண்ணெண்னை விநியோகத்தை துண்டித்தது மட்டுமல்ல என் மீது பொய் குற்றச்சாட்டு சுத்தி வந்து கொண்டிருக்கிறார். எனவே எனக்கு குத்தகை ஒப்பந்தம் எதிர்வரும் மே 10ம் திகதி முடிவுறுகிறது அதன் பின்னர் சாணக்கியன் தான் நினைத்த மாதிரி அவரது பினாமிக்கு கொடுக்க முடியாது இது அரசாங்கத்துக்கு சொந்தமான கட்டிடம் இது பகிரங்க ஏலத்தில் விடப்பட்ட வேண்டும்.

அதற்கா இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவை நாடவுள்ளோம் அதேவேளை தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு உடன் தொடர்பு கொண்டு அதன் உண்மை தன்மையை கூறியுள்ளேன் அவர் ஆவணங்களை காரியாலயத்திற்கு கொண்டுவருமாறும் அதனை பரிசீலித்து அதன் அடிப்படையில் அடுத்த அபிவிருத்தி குழு கூட்டத்தில் உண்மை தன்மையை வெளிப்படுத்துவதாக வாக்குறுதி அளித்துள்ளார்.

அதேவேளை காத்தான்குடியில் இருக்கும் மண்ணெண்ணெய் டீசல் இரண்டும் இருக்கும் எரிபொருள் நிரப்பு நிலையத்தை ஹொட்டலாக மாற்றிவிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லா இயங்கிவரும் கலுவங்கேணி எரிபொருள் நிரப்பு நிலையத்தையும் அவ்வாறு செய்ய திட்டமிடுகின்றாரா?

அதேபோல சாணக்கியனின் பட்டிருப்பு தேர்தல் தொகுதியில் உள்ள கல்லாற்றில் மீனவர்களுக்காக அமைக்கப்பட்டிருக்கும் எரிபொருள் நிரப்பு நிலையம் செயலிழந்து ள்ளதுடன் அதன் இயந்திரங்கள் திருடிச் செல்லப்பட்டு அழிந்து பொயுள்ளதுடன் அது மதுபானம் அருந்துபவர்கள் இடமாக காட்சியளிக்கிறது.

இவ்வாறு செயலிழந்து அழிந்து போயுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தை இயங்க வைத்து மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கு வலுச்சேர்க்காமல் என் மீது கொண்ட அரசியல் காழ்ப்புணர்ச்சி மற்றும் நான் சாணக்கியனுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்த காரணத்தினால் என்னை பழிவாங்க வேண்டும் என நான் இயக்கிவரும் கலுவங்கேணி எரிபொருள் நிரப்பு நிலையம் தொடர்பாக பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்தி அதனை மூடவைத்து அதன் மூலம் மீனவர்களுக்கு வரும் வருமானத்தை இல்லாமல் செய்யும் செயற்பாட்டினை இந்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் செய்து வருகின்றனர் என அவர் தெரிவித்தார்.



# கனடாவில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பெற்ற "தைப்பொங்கல்" நூல் வெளியீடு

**- சுலோச்சனா அருண்**



சென்ற ஞாயிற்றுக்கிழமை 18-1-2026 அன்று கனடா எத்தோபிகோவில் உள்ள திஸ்டில் நகரமண்டபத்தில் கிராமத்து வதனம் தமிழ் பெண்கள் அமைப்பினரின் ஏற்பாட்டில் தைப்பொங்கல், மரபுத்திங்கள், மற்றும் நூல் வெளியீட்டு நிகழ்வுகள் இடம் பெற்றன.

மங்கள விளக்கேற்றி, தமிழ்தாய் வாழ்த்து, கனடா தேசியப்பண் ஆகியன இசைக்கப்பெற்றன. அமைதி வணக்கத்தைத் தொடர்ந்து கிராமத்து வதனம் தமிழ் பெண்கள் அமைப்பின் பாடலுக்கு, நடன ஆசிரியர் திருமதி. தயாளினி ஜீனராஜின் மாணவிகளின் நடனம் இடம் பெற்றது. இந்தப் பாடலை அகணி சுரேஸ் எழுத, சி. சுதர்சன் இசையமைக்க, மயூரதி தேவதாஸ் பாடியிருந்தார். அடுத்து திருமதி. கலைமகள் புஸ்பநாதனின் வரவேற்பு உரை இடம் பெற்றது.

நூல் வெளியீட்டு நிகழ்வில் கனடாவில் இருந்து வெளிவரும் இளையதலை முறையினருக்கான, எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களை முதன்மை ஆசிரியராகக் கொண்ட "வதனம்" எட்டாவது இதழும், திருமதி. கமலவதனா சுந்தா எழுதிய சிறுவர்களுக்கான "தைப்பொங்கல்" நூலும் வெளியிட்டு வைக்கப்பெற்றன.

தைப்பொங்கல் சிறுவர் நூல் வெளியீட்டு நிகழ்வில் அறிமுக உரையைக் குடும்ப பல்வைத்தியர் திருமதி. சுமதி செல்வா அவர்களும், ஆய்வுரையை கனடா, அண்ணாமலைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் முனைவர் வாசுகி நகுலராஜா அவர்களும், ஏற்புரையை நூல் ஆசிரியர் கமலவதனா சுந்தா அவர்களும் நிகழ்த்தினார்கள். தைப்பொங்கல் பற்றிய சிறுவர்களுக்கு ஏற்ற அழகிய வண்ணப்படங்களுடன் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் இந்த நூல் வெளியிடப் பெற்றது. மரபுத் திங்கள் மாதம் என்பதால், எமது கலாச்சாரத்தை ஏனைய இனத்தவர்களும் புரிந்து கொள்ளும் வகையில் தமிழ் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழியும் இந்த நூலில் இடம் பெற்றது. இதற்கான வண்ணப்படங்களை ஓவியர் பிரவாகினி தர்மலிங்கம் வரைந்திருந்தார். ஜே.ஜே பிரின்ரேஸ் அச்சடித்த இந்த நூலின் வடிவமைப்பை நவீனி இராசையா மற்றும் பிரவீனி இராசையா செய்திருந்தனர்.

வதனம் இதழ் வெளியீட்டின் போது அறிமுக உரையை கிராமத்து வதனம் பெண்கள் அமைப்பின் நிறுவுனர் கமலவதனா சுந்தா அவர்களும், ஆய்வுரையை விரிவுரையாளர் நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு அவர்களும், வெளியீட்டுரையை குரு அரவிந்தன் அவர்களும் நிகழ்த்தினார்கள்.

குரு அரவிந்தன் அவர்கள் தனது உரையில் "மூன்றாவது ஆண்டில் இளைய தலைமுறையினருக்கான வதனம் இதழ் கால்பதிக்கிறது என்றும், 50 கனடா தமிழ் பெண்கள் ஒன்று சேர்ந்து தாங்கள் வாழ்ந்த ஊர்பற்றி எழுதிய தொகுப்பு மார்ச் மாதம் கிராமத்து வதனம் தமிழ் பெண்கள் அமைப்பினரால் வெளியிட இருப்பதாகவும், இது ஒரு சாதனை படைக்கும் நூலாக வெளிவர இருப்பதாகவும்" குறிப்பிட்டார்.





இளைய தலைமுறையினரின் ஆக்கங்கள் தமிழில் இடம் பெற்ற இந்த வதனம் மலரின் இணை ஆசிரியராக பூமிகா அன்புதாசன் பணியாற்றினார். புலம்பெயர்ந்த மண்ணில் தமிழ் மொழி நிலைத்து நிற்க வேண்டுமானால், இளையதலை முறையினருக்கு ஊடகத்துறையில் பயிற்சி கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இதுவரை எட்டு இணை ஆசிரியர்கள் எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களால் பயிற்றப்பட்டிருந்தனர். இந்த நிகழ்வின் போது கவிநயா விஜயதர்சன், தருண் செல்வம், அர்ச்சயா மோகன்குமார், நஸ்வியா சற்குணராசா, ஆகாஸ் ஞானவேலு, அபிராம் பிரதீபன், கீசன் தயாளன், பூமிகா அன்புதாசன் ஆகிய இணையாசிரியர்கள் அனைவரும் சபையோருக்கு அறிமுகம் செய்யப்பட்டுப் பூச்செண்டு கொடுக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர். இவர்களில் இருவர் இம்முறை பல்கலைக்கழக அனுமதி பெற்று பல்கலைக் கழகம் சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

அங்கு பொங்கல் பற்றிய சிறுவர் பாடல், காவடி ஆட்டம், நடனம், பேச்சு, கராட்டி போன்ற நிகழ்வுகள் இடம் பெற்றன. காப்பாளர் நவா கருணரட்ணராஜா, கவிஞர் அகணி சுரேஸ் ஆகியோரின் உரையைத் தொடர்ந்து மேரி தயாளனின் நன்றியுரை இடம் பெற்றது. இளைய தலைமுறையினரான கவிநயா விஜயதர்சன், தருண் செல்வன் ஆகியோர் நிகழ்ச்சியைச் சிறப்பாகக் கொண்டு நடத்தினார்கள்.

கனடா கிராமத்துவதனம் பெண்கள் அமைப்பினர், கனடா தமிழ் எழுத்தாளர் இணைய அங்கத்தவர்கள், கனடா கவிஞர் கழக அங்கத்தவர்கள், ரொறன்ரோ கல்விச்சபை, அறிவக ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள், அரசியல் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர். பார்வையார்களுக்கு இனிப்புப் பொங்கலும், சிற்றுண்டியும் வழங்கப்பட்டது.


## Thana Insurance Inc

### T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

### PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

### NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

### 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker



THANA INSURANCE Inc.

Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

கனடிய செய்திகள்
Canadian News

# ஸ்கார்பரோ – அஜின்கோர்ட் நாடாளுமன்ற உறுப்பினர் ஜீன் யிப் ஏற்பாடு செய்த "குற்றங்களைத் தடுக்கும் உத்திகள் மற்றும் நடவடிக்கைகள்" தொடர்பான கருத்தரங்கு!



## Community Town Hall, focused on crime and public safety, hosted by Scarborough Agincourt Member of Parliament Hon. Jean Yip

Residents of Scarborough Agincourt gathered Tuesday, the 20th, evening for a Community Town Hall focused on crime and public safety, as federal officials and senior Toronto Police Leaders addressed concerns ranging from neighborhood violence to organized crime. The Combatting Crime Town Hall, held at the Stephen Leacock Community Recreation Centre, brought together elected representatives, law enforcement officials, and local residents for a two hour discussion aimed at strengthening trust, accountability, and collaboration around community safety.

Hosted by Scarborough Agincourt Member of Parliament Hon.Jean Yip, the event was framed as an opportunity for residents to speak directly with decision makers about the realities they face in their neighborhoods. Yip emphasized the importance of listening to community voices and ensuring that public safety strategies reflect the lived experiences of residents. The town hall was part of a broader effort to create dialogue between government, police, and the public at a time when concerns about crime and safety remain prominent across the city.

The evening featured a keynote appearance by Hon.Ruby Sahota, Canada's Secretary of State for Combatting Crime, whose participation highlighted the federal government's role in addressing crime through legislation, prevention strategies, and coordination with local and provincial partners. Sahota spoke about the importance of balancing enforcement with prevention, as well as the need for community engagement in shaping effective crime policy. Her presence underscored the federal commitment to supporting local communities dealing with complex and evolving public safety challenges.

Senior Leadership from the Toronto Police Service played a central role in the discussion, offering residents insight into policing priorities and crime trends affecting Scarborough. Superintendent LeeAnn Papizewski, Unit Commander of 42 Division, and Superintendent Donovan Locke, Unit Commander of 33 Division, addressed local concerns and outlined how their divisions are responding to issues such as violent crime, neighbourhood safety, and community trust. Both emphasized the importance of community partnerships and proactive policing in addressing crime at the division level.

The conversation extended beyond local policing with the participation of Superintendent Ryan Forde, Unit Commander of Organized Crime Enforcement. Forde spoke about the broader impact of organized and complex criminal networks on communities, noting that many local crime issues are connected to larger, city wide and national trends. His remarks provided context on how organized crime investigations intersect with everyday community safety concerns, reinforcing the need for coordinated enforcement efforts.

Adding a frontline perspective to the panel was Clayton Campbell, President of the Toronto Police Association. Campbell discussed the challenges faced by officers on the ground, including staffing pressures, resource demands, and the need for public trust. His participation highlighted the human side of policing and the importance of supporting officers while also addressing community expectations around accountability and transparency.

Throughout the evening, residents were encouraged to ask questions and share their perspectives, reinforcing the town hall's emphasis on dialogue rather than one way communication. Topics raised by attendees reflected a mix of local concerns and broader anxieties about crime, policing effectiveness, and public confidence in institutions. Speakers repeatedly stressed that community input plays a critical role in shaping practical solutions and guiding future policy decisions.

The event concluded with a call for continued engagement between residents, elected officials, and law enforcement. Organizers emphasized that the feedback gathered during the town hall would help inform ongoing efforts to improve safety in Scarborough Agincourt. As the discussion made clear, combating crime remains a shared responsibility, one that depends on cooperation, transparency, and sustained dialogue between communities and those tasked with protecting them.

---

20ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை ஸ்கார்பரோ அஜின்கோர்ட் தொகுதியில் வசிக்கும் மக்கள் குற்றம் மற்றும் பொதுப் பாதுகாப்பை மையமாகக் கொண்ட ஒரு சமூக நகர கருத்தரங்களில் ஒன்றாகக் கூடினர், கனடாவின் மத்திய பாராளுமன்ற உறுப்பினர்களும் அதிகாரிகளும் மூத்த டொராண்டோ காவல்துறைத் தலைவர்களும் சுற்றுப்புற வன்முறை முதல் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம் வரையிலான கவலைகளைப் பற்றி விவாதித்தனர். மேற்படி முக்கியமான கருத்தரங்கும் ஸ்காபுறேபாவில் உள்ள ஸ்டீபன் லீகாக் சமூக பொழுதுபோக்கு மையத்தில் நடைபெற்றது. அங்கு குற்றத்தை எதிர்த்துப்போராடும் முறைகள் பற்றியும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், சட்ட அமலாக்க அதிகாரிகள் மற்றும் உள்ளூர்வாசிகளை ஒன்றிணைத்து, சமூகப் பாதுகாப்பைச் சுற்றியுள்ள நம்பிக்கை, பொறுப்புக்கூறல் மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில் இரண்டு மணி நேர கலந்துரையாடலாக நடத்தியது.

ஸ்கார்பரோ அஜின்கோர்ட் நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ ஜீன் யிப் தொகுத்து வழங்கிய இந்த நிகழ்வில் குடியிருப்பாளர்கள் தங்கள் சுற்றுப்புறங்களில் எதிர்கொள்ளும் யதார்த்தங்கள் குறித்து முடிவெடுப்பவர்களுடன் நேரடியாகப் பேசுவதற்கான வாய்ப்பாக வடிவமைக்கப்பட்டது. சமூகக் குரல்களைக் கேட்பதன் முக்கியத்துவத்தையும், பொதுப் பாதுகாப்பு உத்திகள் குடியிருப் பாளர்களின் வாழ்ந்த அனுபவங்களை பிரதிபலிப்பதை உறுதி செய்வதையும் யிப் வலியுறுத்தினார். நகரம் முழுவதும் குற்றம் மற்றும் பாதுகாப்பு குறித்த கவலைகள் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் நேரத்தில், அரசாங்கம், காவல்துறை மற்றும் பொதுமக்களுக்கு இடையே உரையாடலை உருவாக்குவதற்கான பரந்த முயற்சியின் ஒரு பகுதியாக டவுன்ஹால் இருந்தது.

அன்றைய மாலையில் குற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கான மத்திய அரசாங்கத்தின் செயலாளர் ரூபி சஹோட்டா முக்கிய உரையாற்றினார், சட்டம், தடுப்பு உத்திகள் மற்றும் உள்ளூர் மற்றும் மாகாண கூட்டாளர்களுடன் ஒருங்கிணைப்பு மூலம் குற்றத்தை நிவர்த்தி செய்வதில் மத்திய அரசின் பங்கை அவரது பங்கேற்பு எடுத்துக்காட்டியது. தடுப்புடன் அமலாக்கத்தை சமநிலைப் படுத்துவதன் முக்கியத்துவம் மற்றும் பயனுள்ள குற்றக் கொள்கையை வடிவமைப்பதில் சமூக ஈடுபாட்டின் அவசியம் குறித்து சஹோட்டா பேசினார். சிக்கலான மற்றும் வளர்ந்து வரும் பொது பாதுகாப்பு சவால்களைக் கையாளும் உள்ளூர் சமூகங்களை ஆதரிப்பதற்கான கூட்டாட்சி உறுதிப்பாட்டை அவரது இருப்பு அடிக்கோடிட்டுக் காட்டியது.

மேலும், ரொறன்ரோ காவல் சேவை திணைக்களத்தின் மூத்த தலைமை, ஸ்கார்பரோவை பாதிக்கும் காவல் முன்னுரிமைகள் மற்றும் குற்றப் போக்குகள் குறித்து குடியிருப்பாளர்களுக்கு நுண்ணறிவை வழங்கியது. 42 பிரிவின் குற்றவியல் பகுதியின் தலைமைக் கண்காணிப்பாளர் லீஆன் பாபிசெவ்ஸ்கி மற்றும் 33 பிரிவின் பிரிவுத் தலைமைக் கண்காணிப்பாளர் டோனோவன் லாக் ஆகியோர் உள்ளூர் கவலைகளை நிவர்த்தி செய்து, வன்முறைக் குற்றங்கள் மற்றும், சுற்றுப்புற பாதுகாப்பு மற்றும் சமூக நம்பிக்கை போன்ற பிரச்சினைகளுக்கு தங்கள் பிரிவுகள் எவ்வாறு பதிலளிக்கின்றன என்பதை கோடிட்டுக் காட்டினர். பிரிவு மட்டத்தில் குற்றங்களை நிவர்த்தி செய்வதில் சமூக கூட்டாண்மை மற்றும் முன்முயற்சியுடன் கூடிய காவல் பணியின் முக்கியத்துவத்தை இருவரும் வலியுறுத்தினர்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற அமலாக்கப் பிரிவுத் தலைமைக் கண்காணிப்பாளர் ரியான் ஃபோர்டின் பங்கேற்புடன் உள்ளூர் காவல் பணிக்கு அப்பால் உரையாடல் நீண்டது. சமூகங்களில் ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் சிக்கலான குற்றவியல் வலையமைப்புகளின் பரந்த தாக்கத்தைப் பற்றி ஃபோர்டு பேசினார், பல உள்ளூர் குற்றப் பிரச்சினைகள் பெரிய, நகர அளவிலான மற்றும் தேசிய போக்குகளுடன் இணைக்கப்பட்டுள்ளன என்பதைக் குறிப்பிட்டார். ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற விசாரணைகள் அன்றாட சமூக பாதுகாப்பு கவலைகளுடன் எவ்வாறு குறுக்கிடுகின்றன என்பதற்கான சூழலை அவரது கருத்துக்கள் வழங்கின, ஒருங்கிணைந்த அமலாக்க முயற்சிகளின் தேவையை வலுப்படுத்தின.

மேலும். காவல்துறையின் காவலர்கள் சங்கத்தின் தலைவர் கிளேட்டன் கேம்பல் குழுவில் ஒரு முன்னணிக் கண்ணோட்டத்தைச் தனது உரையில் சேர்த்துக் கொண்டார் அவற்றில். பணியாளர் அழுத்தங்கள், வளக் கோரிக்கைகள் மற்றும் பொது நம்பிக்கையின் தேவை உள்ளிட்ட களத்தில் அதிகாரிகள் எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றி கேம்பல் விபரித்தார். அவரது பங்கேற்பு காவல் பணியின் மனிதாபிமானப் பக்கத்தையும் அதிகாரிகளை ஆதரிப்பதன் முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டியது, அதே நேரத்தில் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மையைச் சுற்றியுள்ள சமூக எதிர்பார்ப்புகளையும் நிவர்த்தி செய்தது.

அன்றைய மாலை முழுவதும், கேள்விகளைக் கேட்கவும், தங்கள் கண்ணோட்டங்களைப் பகிர்ந்து கொள்ளவும் குடியிருப்பாளர்கள் ஊக்குவிக்கப் பட்டனர், இது ஒரு வழித் தொடர்பை விட உரையாடலில் டவுன் ஹாலின் முக்கியத்துவத்தை வலுப்படுத்தியது. பங்கேற்பாளர்களால் எழுப்பப்பட்ட தலைப்புகள் உள்ளூர் கவலைகள் மற்றும் குற்றம், காவல் பணியின் செயல்திறன் மற்றும் நிறுவனங்களில் பொதுமக்களின் நம்பிக்கை பற்றிய பரந்த கவலைகளின் கலவையை பிரதிபலித்தன. நடைமுறை தீர்வுகளை வடிவமைப்பதிலும் எதிர்கால கொள்கை முடிவுகளை வழிநடத்துவதிலும் சமூக உள்ளீடு முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை பேச்சாளர்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினர்.

குடியிருப்பாளர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் மற்றும் சட்ட அமலாக்கத்திற்கு இடையே தொடர்ச்சியான ஈடுபாட்டிற்கான அழைப்போடு நிகழ்வு முடிந்தது. ஸ்கார்பரோ அஜின்கோர்ட்டில் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான தொடர்ச்சியான முயற்சிகளைத் தெரிவிக்க நகர சமூகக் கலந்துரையாடலின் போது சேகரிக்கப்பட்ட கருத்துகள் உதவும் என்று ஏற்பாட்டாளர்கள் வலியுறுத்தினர். கலந்துரையாடல் தெளிவுபடுத்தியது போல், குற்றங்களை எதிர்த்துப் போராடுவது என்பது ஒரு பகிரப்பட்ட பொறுப்பாகும், இது சமூகங்களுக்கும் அவற்றைப் பாதுகாக்கும் பணியில் உள்ளவர்களுக்கும் இடையிலான ஒத்துழைப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் நீடித்த உரையாடலைப் பொறுத்தது என்ற பொதுவான ஒரு பார்வையை இந்த கலந்துரையாடலின் மூலம் விதைக்க முடிந்தது என்றால் அது மிகையாகாது.



*- UTHAYAN LJI Journalist Ganesh -*

உலக செய்திகள்
World News



# ஈரானை தாக்கினால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் — அமெரிக்காவுக்கு ரஷியா எச்சரிக்கை

ஈரான் நாட்டில் பணவீக்கம் அதிகரித்து, அத்தியாவசிய பொருட்களின் விலைவாசி உயர்ந்துள்ளது. இதனால் அரசுக்கு எதிராக அதிருப்தி அடைந்துள்ள மக்கள் தீவிர போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஈரானின் 31 மாகாணங்களில் 100 நகரங்களில் அரசுக்கு எதிரான போராட்டம் தீவிரமடைந்து வருகிறது. 17-வது நாளாக இன்றும் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு உள்ளனர். போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர். அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகி இருக்க கூடும் என அமெரிக்காவை அடிப்படையாக கொண்ட மனித உரிமைகள் அமைப்பு ஒன்று அதிர்ச்சி தகவலை தெரிவித்து உள்ளது. போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 10 ஆயிரத்திற்கும் கூடுதலானோர் அரசால் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

வன்முறையை தடுக்கும் நோக்கில், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இணையதள சேவையை அரசு முடக்கி வைத்து உள்ளது. சில அரசு ஊடகங்கள் மட்டுமே செயல்பட அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. இந்த சூழலில், ஈரானை மீண்டும் சிறந்த நாடாக மாற்றுவேன் என அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் கூறி வருகிறார். போராடும் மக்கள் பாதிக்கப்பட்டால், ஈரான் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார். எனினும், உங்களுடைய சொந்த விவகாரங்களில் கவனம் செலுத்துங்கள் என ஈரான் தலைவர் காமேனி கூறினார். இதனை தொடர்ந்து, ஈரானுடன் ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் நாடுகளின் வர்த்தகம் பாதிக்கப்படும் வகையில், அந்நாட்டுடன் வர்த்தகம் செய்து, அமெரிக்காவுடனும் வர்த்தகம் செய்யும் நாடுகளுக்கு 25 சதவீத வரி விதிக்கப் படுகிறது. இது உடனடியாக அமலுக்கு வருகிறது. இந்த உத்தரவு இறுதியானது என டிரம்ப் கூறினார். இதற்கு சீனா நேரிடையாக எதிர்ப்பை வெளிப்படுத்தியது.

இந்நிலையில் ஈரான் மீது தாக்குதல் நடத்தும் அமெரிக்காவின் முடிவை குறிப்பிட்டு, ரஷிய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், மத்திய கிழக்கு பகுதியில் தற்போதுள்ள நிலைமை மற்றும் உலகளாவிய சர்வதேச பாதுகாப்பு ஆகியவற்றை அமெரிக்கா கவனத்தில் கொள்ள வேண்டும். இதனால், பேரிடரை எதிர்கொள்ள கூடிய விளைவுகளை பற்றியும் அமெரிக்கா அறிந்திருக்க வேண்டும். ஈரான் மீது புதிதாக ராணுவ தாக்குதல்களை நடத்துவோம் என மிரட்டல் விடுப்பது ஏற்று கொள்ள முடியாதது. ஈரானின் உள்நாட்டு அரசியலில், வெளிநாட்டு தலையீடு என்பது ஏற்கத்தக்கதல்ல என்று கண்டனம் தெரிவித்து உள்ளது. ஈரானில், 2 வாரத்திற்கும் மேலாக நடந்து வரும் அரசுக்கு எதிரான போராட்டத்தில் 2 ஆயிரம் பேர் கொல்லப்பட்ட சூழலில், நீங்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுங்கள். உங்களுக்கு உதவி வந்து கொண்டிருக்கிறது என டிரம்ப் உறுதியாக கூறினார். எனினும், ஈரான் பாதுகாப்பு மந்திரி அஜீஸ் நசீர்ஜதே கூறும்போது, எங்களுக்கு எதிரான எந்தவித தாக்குதலுக்கும் நாங்கள் கடுமையான பதிலடி கொடுப்போம். எங்களை யாரும் மிரட்டுவதற்கு நாங்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். இந்த பகுதியிலுள்ள அமெரிக்காவின் அனைத்து படை தளங்களையும் தாக்குவோம் என்றும் கூறினார்.

# வெனிசுலாவில் சிறை பிடிக்கப்பட்ட 50— க்கும் மேற்பட்ட அமெரிக்கர்கள் விடுவிப்பு



வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவை போதை பொருள் பயங்கரவாதி என்றும் அந்நாட்டில் இருந்து அமெரிக்காவுக்குள் அபாயகர போதை பொருட்கள் கடத்தப் படுகின்றன என்றும் டிரம்ப் கடுமையான குற்றச்சாட்டுகளை கூறினார். இந்த நிலையில், நிக்கோலஸ் மதுரோவும், அவருடைய மனைவி சிலியா புளோரசும் அமெரிக்க ராணுவ வீரர்களால் இந்த மாத தொடக்கத்தில், கைது செய்யப்பட்டு வெனிசுலாவில் இருந்து நாடு கடத்தப்பட்டனர். இதனை தொடர்ந்து, நிக்கோலஸ், அவருடைய மனைவி புளோரஸ் மீது நியூயார்க் நகரில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டு உள்ளது. அவர்கள் விரைவில் அமெரிக்க நீதிமன்றங்களில், அமெரிக்க மண்ணில், அமெரிக்க நீதியை பெறுவார்கள் என அமெரிக்க அட்டர்னி ஜெனரல் பமீலா போண்டி கூறினார்.

இது உலக நாடுகளால் பரபரப்பாக பார்க்கப்படுகிறது. எண்ணெய் வளத்திற்காக வெனிசுலா குறி வைக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டும் டிரம்புக்கு எதிராக எழுந்தது. வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ கைது செய்யப்பட்ட பின்னர், இந்த மாத தொடக்கத்தில், நாட்டின் தற்காலிக ஜனாதிபதியாக டெல்சி எலோய்னா ரோட்ரிக்ஸ் முறைப்படி பதவியேற்று கொண்டார். இந்நிலையில், வெனிசுலாவில் சிறை பிடிக்கப்பட்ட 50-க்கும் மேற்பட்ட அமெரிக்கர்கள் விடுவிக்கப்பட்டு உள்ளனர். இதுபற்றி அமெரிக்க வெளியுறவு துறை வெளியிட்டு உள்ள செய்தியில், வெனிசுலாவில் சிறை பிடிக்கப்பட்ட எண்ணற்ற அமெரிக்கர்கள் விடுவிக்கப்பட்டு உள்ளனர். இந்த முடிவை நாங்கள் வரவேற்கிறோம். வெனிசுலாவின் இடைக்கால அதிகாரிகள் சரியான திசையை நோக்கி எடுத்த முக்கிய முடிவாகும் என தெரிவித்து உள்ளது. மதுரோ நாடு கடத்தப்பட்ட பின்னர், அமைதி ஏற்படுவதற்காக, குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வெனிசுலா மற்றும் வெளிநாட்டு கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என அந்நாட்டு நாடாளுமன்ற தலைவர் ரோட்ரிக்ஸ் கடந்த வாரம் கூறினார். இந்த சூழலில் இந்த கைதிகளின் விடுவிப்பு நிகழ்ந்துள்ளது. இதுபற்றி வெனிசுலாவில் உள்ள மனித உரிமைகள் அமைப்பான போரோ பீனல் வெளியிட்ட செய்தியில், அரசியல் காரணங்களுக்காக பிடிபட்ட 56 கைதிகள் விடுதலை செய்யப்பட்டு உள்ளனர் என தெரிவித்தது. எனினும், வெனிசுலா அரசு 400 பேரை விடுவித்து இருக்கிறோம் என தெரிவித்து உள்ளது. ஆனால், விடுவிப்புக்கான சான்றுகளையோ அல்லது எப்போது விடுவித்தது என்பது பற்றிய தகவலையோ வெளியிடவில்லை. விடுதலை செய்யப்பட்டவர்களின் அடையாளமும் வெளியாகவில்லை. இதனால், அவர்கள் அரசியல் காரணங்களுக்காக அல்லது பிற அரசியல் காரணங்களுக்காக கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவர்களா? என்ற விவரம் தெரியவில்லை. கடந்த ஜூலையில், வெனிசுலா சிறையில் அடைக்கப்பட்டு இருந்த 10 அமெரிக்கர்கள் விடுவிக்கப்பட்டனர்.



# அரசுக்கு எதிராக போராட தூண்டி விடுகிறார் டிரம்ப் — ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலுக்கு ஈரான் கடிதம்

ஈரான் நாட்டில் அரசுக்கு எதிரான மக்கள் போராட்டம் தீவிரமடைந்து உள்ளது. இதில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகி இருக்க கூடும் என அமெரிக்காவை அடிப்படையாக கொண்ட மனித உரிமைகள் அமைப்பு அதிர்ச்சி தகவலை தெரிவித்து உள்ளது. போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 10 ஆயிரத்திற்கும் கூடுதலானோர் அரசால் கைது செய்யப்பட்டு உள்ளனர். இந்நிலையில், வன்முறையை தடுக்கும் நோக்கில், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இணையதள சேவையை அரசு முடக்கி வைத்து உள்ளது. சில அரசு ஊடகங்கள் மட்டுமே செயல்பட அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. இந்த சூழலில், ஈரானை மீண்டும் சிறந்த நாடாக மாற்றுவேன் என அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் கூறி வருகிறார். போராடும் மக்கள் பாதிக்கப்பட்டால், ஈரான் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ராணுவம் பாயும் என்றும் கூறினார். எனினும் பதிலுக்கு, உங்களுடைய சொந்த விவகாரங்களில் கவனம் செலுத்துங்கள் என ஈரான் தலைவர் காமேனி கூறினார்.

ஈரானில், 2 வாரத்திற்கும் மேலாக நடந்து வரும் அரசுக்கு எதிரான போராட்டத்தில் 2 ஆயிரம் பேர் கொல்லப்பட்ட சூழலில், நீங்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுங்கள். உங்களுக்கு உதவி வந்து கொண்டிருக்கிறது என டிரம்ப் கூறியது சர்ச்சையானது. இதுதொடர்பாக, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் மற்றும் ஐ.நா. பொது செயலாளருக்கு ஈரான் முறைப்படி கடிதம் வழியே வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது. அதில், அமெரிக்கா வன்முறையை தூண்டி விடுவதுடன், ஈரானின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுகிறது. ராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என மிரட்டுகிறது என அமெரிக்காவுக்கு எதிராக கடுமையான குற்றச்சாட்டுகளை தெரிவித்து உள்ளது. டிரம்ப்பின் பேச்சுகள் ஈரானில் போராட்டம் தீவிரமடைய வழிவகுத்து உள்ளது. அது ஈரானின் இறையாண்மை மற்றும் தேச பாதுகாப்புக்கு ஒரு வெளிப்படையான அச்சுறுத்தலாக உள்ளது என்றும் கடிதத்தில் தெரிவித்து உள்ளது. ஏற்கனவே ஈரானை நேரடியாக தாக்காமல் ஈரானுடன் ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் நாடுகளின் வர்த்தகம் பாதிக்கப்படும் வகையில், அந்நாட்டுடன் வர்த்தகம் செய்து, அமெரிக்காவுடனும் வர்த்தகம் செய்யும் நாடுகளுக்கு 25 சதவீத வரி விதிக்கப்படுகிறது. இது உடனடியாக அமலுக்கு வருகிறது. இந்த உத்தரவு இறுதியானது என டிரம்ப் கூறி பரபரப்பு ஏற்படுத்தினார். இந்நிலையில், ஈரானில் வன்முறையை தூண்டி, பரவ செய்யும் வகையில் அவர் பேசியது மற்றொரு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ஈரானில் தொடரும் போராட்டம் — 2,571 பேர் உயிரிழப்பு



ஈரானில் பொருளாதார நெருக்கடி மற்றும் விலைவாசி உயர்வு காரணமாக, அரசு மற்றும் உச்ச தலைவர் அயத்துல்லா அலி கமேனிக்கு எதிராக போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அங்கு கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேலாக போராட்டங்கள் தொடர்ந்து தீவிரமடைந்து வருகின்றன. போராட்டங்களை ஒடுக்க பாதுகாப்புப் படையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இதன் காரணமாக ஈரானின் பல பகுதிகளில் வன்முறை சம்பவங்கள் ஏற்பட்டுள்ளன. போராட்டங்கள் பரவுவதைத் தடுக்கும் வகையில் செல்போன் மற்றும் இணைய சேவைகள் முடக்கப்பட்டுள்ளன. இருப்பினும், போராட்டங்கள் கட்டுக்குள் வரவில்லை. இதற்கிடையே, போராட்டம் மற்றும் வன்முறைகளில் பலியானவர்களின் எண்ணிக்கை 2,571 ஆக உயர்ந்துள்ளது. உயிரிழந்தவர்களில் 2,403 பேர் போராட்டக்காரர்கள் என்றும், 147 பேர் அரசாங்கத்துடன் தொடர்புடையவர்கள் என்றும் ஈரானிய செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

மேலும், 18,100-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டால், ஈரான் விவகாரத்தில் தலையிடுவோம் என்றும், ராணுவ நடவடிக்கையை சந்திக்க நேரிடும் என்றும் அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது. மேலும், ஈரானில் போராடும் மக்களுக்கு உதவ தயாராக இருப்பதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.



# வடக்கில் அனுர: தேசிய மக்கள் சக்தியின் வியூகம் என்ன?

**தமிழ்த் தேசிய தரப்புகள் குறிப்பாக மேற்கண்ட மீம்ஸ்களை உருவாக்கும் தரப்புகளும் உட்பட பெரும்பாலானவர்கள், ஒருவர் மற்றவரை அல்லது ஒரு கட்சி மற்ற கட்சியை வில்லன் ஆக்கி துரோகி ஆக்கி ஒருவர் மற்றவர் மீது மலத்தை அள்ளி வீசும் போது. இரண்டு தரப்பிலும் மலம்படுகிறது. இரண்டு தரப்புமே நாறுகின்றது. இதனால் தமிழ்த் தேசியப் பரப்பில் யாருமே கதாநாயகராக எழ முடியவில்லை. இந்த வெற்றிடத்திற்குள் அனுர ஒரு கதாநாயகராக இறக்கப்படுகிறார்.**

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

யாழ்ப்பாணத்துக்கு வந்த அனுர குமார காலால் நடந்தார் கைகளால் உணவை எடுத்தார் வாயால் சாப்பிட்டார் கண்களால் பார்த்தார் வாயால் சிரித்தார்...

என்று சமூக வலைத்தளங்களில் அரசியல் விமர்சன மீம்ஸ்கள் உலாவுகின்றன. ஏன் இந்த மீம்ஸ் என்றால், ஜனாதிபதியின் ஒவ்வொரு அசைவையும் அசாதாரணமானதாக, அபூர்வமானதாக, எளிமையானதாகச் சித்திரித்து, அவருடைய ஊடகப்பிரிவு குறிப்பாக டிஜிட்டல் புரோமோஷன் அணி கவர்ச்சியான காணொளிகளாக கவர்ச்சியான காணொளிகளாக வெளியிட்டு வருகிறது. ரிக்ரொக் தலைமுறையின் ஒருபகுதி அதனை ஆர்வத்தோடும் எதிர்பார்ப்போடும் பார்க்கின்றது.

அனுரவை கதாநாயகராக கட்டமைக்கும் காணொளிகள் அரசாங்கத்தின் திட்டமிட்ட பிரச்சார விளம்பரங்கள் தான். எல்லாரும் செய்வதைத்தான் அனுரவும் செய்கிறார். ஆனால் அவருடைய ஊடகப் பிரச்சார அணி அதனை ஒரு செயற்கரிய செயலாக சித்திரிக்கின்றது. அதைத்தான் மேற்கண்டவாறு தமிழ் தேசிய ஆர்வலர்கள் மீம்ஸ் ஆக்கி விமர்சிக்கிறார்கள். தமிழ்த் தேசிய தரப்புகள் குறிப்பாக மேற்கண்ட மீம்ஸ்களை உருவாக்கும் தரப்புகளும் உட்பட பெரும்பாலானவர்கள், ஒருவர் மற்றவரை அல்லது ஒரு கட்சி மற்ற கட்சியை வில்லன் ஆக்கி துரோகி ஆக்கி ஒருவர் மற்றவர் மீது மலத்தை அள்ளி வீசும் போது. இரண்டு தரப்பிலும் மலம்படுகிறது. இரண்டு தரப்புமே நாறுகின்றது. இதனால் தமிழ்த் தேசியப் பரப்பில் யாருமே கதாநாயகராக எழ முடியவில்லை. இந்த வெற்றிடத்திற்குள் அனுர ஒரு கதாநாயகராக இறக்கப்படுகிறார். தமிழ் திரை நாயகர்களின் எழுச்சியான பாடல்களின் பின்னணியில் அவர் நாயக நடை போடுகிறார். இது தமிழ்த் தேசியக் கட்சிகள் விட்ட வெற்றிடத்தை அரசாங்கம் திட்டமிட்டு நிரப்பும் ஒரு பிரச்சார உத்தி ஆகும்.

ஆனால் இது தனிய ஒரு பிரச்சார உத்தி மட்டுமல்ல, அதைவிட ஆழமான ஆபத்தான ஓர் அரசியல் வியூகம் அங்கே உண்டு.அனுர கடந்த வாரம், யாழ்ப்பாணத்தில் வைத்து பின்வருமாறு கூறினார். முன்னர் வடமாகாணத்துக்கு தனி ஆட்சி தேவை என்று வடமகாண மக்கள் கூறினார்கள்.. ஆனால் முதன் முதலாக யாழ் மக்கள் இன்று எங்களுடைய ஆட்சியை தங்களுடைய ஆட்சி என்று நம்புகிறார்கள்.

அவர் பயன்படுத்திய சொற்களுக்கு அரசியல் பரிமாணம் உண்டு என்று எடுத்துக் கொண்டால், அவர் தமிழ் மக்களின் போராட்டத்தை வடக்குக்குள் மட்டும் சுருக்குகிறார். அது வடக்கின் பிரச்சினை என்று காட்டப் பார்க்கிறார். கிழக்கில் அந்தப் பிரச்சினை இல்லை என்றும் அங்கே பொருள் கொள்ளலாம்.

அவர் மட்டுமல்ல கோத்தபாய ராஜபக்சவும் இனப்பிரச்சினையை வடக்குக்கு மட்டுமான பிரச்சினையாக,ஒரு பொருளாதாரப் பிரச்சினையாகச் சுருக்கப் பார்த்தார். இது ஒரு தெளிவான நிகழ்ச்சி நிரல்.கிழக்கில் பிரச்சினை இல்லை என்று காட்டுவது. அல்லது வடக்கை மட்டும் ஃபோக்கஸ் பண்ணுவதன்மூலம் வடக்கையும் கிழக்கையும் தெளிவாகப் பிரிப்பது.

இங்கு மேலும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒரு விடயம் உண்டு. ஒரு ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின் குறுகிய காலகட்டத்துள் வடக்கிற்கு அதிகம் வருகை தந்தவர் அனுரதான். அது மட்டுமல்ல அவருடைய வருகைகளின்போது அவரை நோக்கித் திட்டமிட்டு மக்கள் குவிக்கப்படுகிறார்கள். அது தானாகத் திரண்ட கூட்டம் என்று அவருடைய ஊடகப்பிரிவு சொல்லலாம். ஆனால் அரச பேருந்துகள் அதற்குப் பயன்படுத்தப்படுகின்றன என்பது பொங்கல் விழாவின்போது அவதானிக்கப்பட்டது. ஆனால் இதேயளவு கவனக்குவிப்பு கிழக்கை நோக்கி இல்லை. வடக்கோடு ஒப்பிடுகையில் கிழக்கில் "செல்பி அரசியல்" பெரிய அளவில் இல்லை.

கடந்த வாரம் பொங்கல் விழாவில் அனுரா பின்வருமாறும் பேசினார்... "பார்க்காத பழகாத எங்களை நம்பினீர்கள். உங்களை நாங்கள் கைவிட மாட்டோம்" இது கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி பெற்ற வெற்றியை அவர்களே எதிர்பார்க்கவில்லை என்பதைக் காட்டுகிறது. அது எதிர்பாராமல் கிடைத்த வெற்றி. ஆனால் உள்ளூராட்சி சபைகளில் அவர்கள் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. தமிழரசுக் கட்சி குறிப்பாக சுமந்திரன் கடுமையாக உழைத்து தேசிய மக்கள் சக்தியின் வெற்றியின் பருமனைக் குறைத்தார். ஆனால் மாகாண சபையில் மீண்டும் தன் மேலாண்மையை நிலைநாட்ட வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தி கருதுகின்றது. அதை நோக்கி அவர்கள் ஏற்கனவே உழைக்கத் தொடங்கி விட்டார்கள்.



ஜனாதிபதியும் அமைச்சர்களும் வடக்கை நோக்கி அதிகமாக வருவது அந்த நோக்கத்தோடுதான். ஜனாதிபதியை தமிழ் மக்கள் மத்தியில் ஒரு கதாநாயகனாகக் கட்டியெழுப்புவதும் அந்த நோக்கத்தோடுதான். தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இடையே காணப்படும் பிடுங்குப்பாடு அரசாங்கத்துக்கு அனுகூலமானது. தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இடையில் காணப்படும் முரண்பாடுகளையும் குறிப்பாக தமிழரசுக் கட்சிக்குள் காணப்படும் குழு மோதல்களையும் சுட்டிக்காட்டி அமைச்சர் சந்திரசேகரன் அண்மைக் காலங்களில் பேசி வருகிறார். அதற்கு சிவஞானம் பதில் சொல்லுகிறார். சிவஞானத்தின் பதில் ஒலிவாங்கிகளுக்கு முன்னுக்கு கூறப்படுவதாக இருக்கக் கூடாது. அது செயலில் காட்டப்பட வேண்டும்.

அடுத்த மாகாண சபைத் தேர்தலை ஆகக் கூடிய விரைவில் வைப்பதை இந்தியா விடும்புகிறது என்பது எல்லாருக்கும் தெரிகிறது. எனவே மாக-ாண சபைத் தேர்தலில் தன்னுடைய வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கம் கடுமையாக உழைக்கின்றது. ஏற்கனவே கிராம மட்டங்களில் அவர்கள் உருவாக்கி வரும் "பிரஜா சக்தி" என்ற கட்டமைப்புக்கு அவர்கள் வறுமை ஒழிப்பு என்ற கவர்ச்சியான நிறத்தைப் பூசலாம். ஆனால் நடைமுறையில் அது பிரதேச சபைகளுக்குச் சமாந்தரமானது. பிர-தேச அதிகாரங்களைக் கவரும் நோக்கிலானது. அதைவிட முக்கியமாக அரச கட்டமைப்பு ஒன்றுக்கூடாக, அரச வளங்களைப் பயன்படுத்தி ஆளுங்கட்சியின் அடிமட்ட வலையமைப்பைப் பலப்படுத்தும் கட்சி அரசியல் உள்நோக்கம் அங்கே உண்டு என்று சந்தேகிக்கப்படுகிறது.

அதுதொடர்பாக அண்மையில் நல்லூர், திவ்வியஜீவன சங்க மண்டபத்தில் நடந்த கருத்தரங்கில் ஐங்கரநேசசன் பேசுகிறார், பிரஜா சக்திக்கு எதிராகத் தான் நீதிமன்றம் செல்லப் போவதாக சுமந்திரனும் கூறியிருக்கிறார்.

அதாவது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அடுத்த மாகாண சபையை இலக்கு வைத்து இயங்குகின்றது. ஆனால் வடக்கை அவர்கள் குறிவைப்பது அதற்காக மட்டும் அல்ல. அது அதைவிட ஆழமானது. வடக்கை வென்றெடுத்தால், கிழக்கு தானாக விழுந்து விடும் என்று அவர்கள் நம்புகிறார்கள். வடக்குத்தான் பிரச்சனை. எனவே அங்கே அடிக்க வேண்டும். அங்கே வெல்ல வேண்டும். என்று அவர்கள் திட்டமிடுகிறார்கள்.

இது ஒருவிதத்தில் முதலாம் கட்ட ஈழப்போரின் போது ஜெயவர்த்தன வகுத்த வியூகத்தின் மறுவளமான வடிவம் ஆகும். ஜெயவர்த்தனாவின் தளபதியாக இருந்த சிறில் ரணதூங்க ஒரு நேர்காணலில் கூறியதுபோல, வடக்குக் கிழக்கு இணைப்பைத் துண்டித்து விட்டால், அதாவது வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் பிரதேசத்தை குடியேற்றங்களின் மூலம் துண்டித்து விட்டால், தாயகக் கோட்பாடு புவியியல் ரீதியாக சிதைக்கப்படும். அடுத்ததாக கிழக்கை படை நடவடிக்கைகள் மற்றும் திட்டமிட்ட அரச குடியேற்றங்களின் மூலம் அபகரித்தால், தாயகம் நடைமுறையில் பலவீனமடைந்துவிடும். கிழக்கை வென்றெடுத்தால், வடக்கு மட்டும் தாயகமாக நின்று பிடிக்காது என்று ஜெயவர்த்தன கணக்குப் போட்டார்.

இப்பொழுது தேசிய மக்கள் சக்தியானது அந்த வியூகத்தின் அடுத்த கட்டத்தைப் பரிசோதிக்கின்றதா? வடக்கை வீழ்த்தினால், கிழக்கு தானாக விழுந்துவிடும் என்று அவர்கள் நம்புகிறார்கள். ஏற்கனவே ஒரு வழக்கின்மூலம் வடக்கையும் கிழக்கையும் சட்டரீதியாகப் பிரித்தது ஜேவிபி என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். எனவே வடக்கு-கிழக்கு அதாவது தாயகத்தைத் துண்டாடும் வியூகம் இதில் உண்டு. இந்த வியூகத்தை எதிர்கொள்ள வேண்டும். வழக்குப் போடுவதால் மட்டும் ஜேவிபியின் பிரஜா சக்தியைத் தோற்கடித்து விட முடியாது.மாறாக தமிழ்த் தேசியத் தரப்புகள் தங்களுக்கு இடையே குறைந்தபட்சம் தேர்தல்கால தந்திரோபாய ஐக்கியத்தையாவது உருவாக்கத்தவறினால், அவர்கள் தேசிய மக்கள் சக்தியின் வியூகத்தை வழிகளை இலகுவாக்கிக் கொடுக்கிறார்கள் என்றுதான் பொருள்.

---

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடதய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

# அநுரவின் 'யாழ்பாண பொங்கல்' பேச்சு தமிழர்களுக்கு எதை உணர்த்துகிறது? தமிழர் அரசியல் திசைமாறி அமானுசியம் ஆகிறதா?



**தமிழினத்தின் அடிப்படை உரிமைகளை அதிகார பரவலாக்கத்தை இன்னும் பாராமுகத்துடன் தான் இன்றைய அரசுகளும் கையாளுகின்றன என்பதும் தமிழ் தேசிய அரசியல் வாதிகளினால் வெறுப்படைந்த மக்கள் அலைகளுள் கட்டுண்டு போகிறார்கள். ஆக எம் உரிமைகளை வென்றெடுக்கும் நீண்ட நெடிய போராட்டத்தில் புதிய தமிழ்தேசிய அரசியல் வீறுகொண்டெழவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.**

---

இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி மதிப்பிற்குரிய அனுரகுமார திசாநாயக்க அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்ததும், அங்கு பெரும் மக்கள் மத்தியிலே பொங்கல் விழாவில் ஈடுபட்டு மகிழ்ந்ததும், பின்னர் போதை ஒழிப்பு செயல்திட்ட நிகழ்வில் ஆற்றிய உரை தொடர்பாகவும், எதிர்காலத்தில எவ்வாறான நிலைப்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் இருக்க வேண்டும் என்பது பற்றியும் இக் கட்டுரையின் வாயிலாக விரிவாக ஆராய்ந்து பார்ப்போம்.

இலங்கையின் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அவர்கள் வடமாகாணத்தின் பொங்கல் நிகழ்வை சிறப்பிக்கும் முகமாக ஜனவரி 15 மற்றும் 16 ஆகிய தினங்களில் யாழ் மண்ணில் கால்பதித்து, தீவகங்கம் மற்றும் வெவ்வேறு இடங்களுக்கு சென்று மக்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டார். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியிலும் போதைக்கு எதிரான முழக்கக் கூட்டத்தத்தில் ஆற்றிய உரை பற்றி தமிழர்கள் மிக நுண்ண்டியமாக ஆராயா வேண்டும்.

அவருடைய உரை இன்றைக்கு சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் பரவலாக பகிரப்பட்டு வருகின்றன.

அதே நேரத்தில், புலம்பெயர் தேசங்களிலும் சிலர் அவற்றை மேலோட்டமாகப் பார்த்து, ஆழமாக புரிந்து கொள்ளாமல் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் பகிர்ந்து வருவதையும் காண முடிகிறது. "ஆஹா, ஓஹோ, இதுவல்லவா" என்ற பார்வையில் சிலர் அதனை அணுகுகின்றனர். ஆனால் தமிழ் மக்களாக நாங்கள் இவ்விடயங்களை மேலோட்டமாக அல்ல, மிக உன்னிப்பாகவும், ஆழமாகவும் ஆராய வேண்டிய கட்டாயத்திலும், பொறுப்புடன் ஆய்வு செய்ய வேண்டிய அவசியத்திலும் இன்று நிற்கிறோம்.

தமிழ் மக்களே என்று விளித்து, ஜனதிபதி அவர்கள் ஆற்றிய உரையில் என்ன கூறியிருந்தார் என்றால் முன்னர் இருந்த ஆட்சிகளில் சிங்களமக்களும், தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் தங்களுடைய அரசு என்று உணரவில்லை. ஆனால் இப்போது எங்களுடைய அரசை அனைத்து மக்களும் தங்களுடைய அரசாக கொண்டாடுகிறார்கள், கொண்டாடி மகிழ்கிறார்கள். மற்றும் இன்னுமொரு விடயத்தை மிகவும் அழுத்தமாக குறிப்பிட்டிருந்தார். அது என்னவென்றால், முன்பு தமிழர்களுக்கு தனியாக ஒரு தேசம் வேண்டும் என்றும், சகல அதிகாரங்களோடு கூடிய ஒரு கட்டமைப்பு தேவை என்றும், (உதாரணமாக சொல்லப்போனால் ஒரு தனியான சமஸ்ட்டி அலகு, தனி நிர்வாக அலகு வேண்டும்) என்ற எண்ணத்தில் இருந்தார்கள்.

ஆனால் இப்போது அவை எதுவும் தேவையில்லை. ஒரே இலங்கையர்கள், ஒரே சட்டம், ஒரே அரசு என்ற கோட்பாட்டை ஏற்றுக்கொண்டு வடமாகாண மக்கள் பயணிக்கிறார்கள் என்று சாரப்பட அவர் அடிக்கோடு இட்டு பேசியிருந்தார். இதைக்கேட்டு பல தமிழர்கள் கைதட்டி, கொண்டாடினர். உடலில் புல்லரிப்பு ஏற்பட்டு மயிர் கூச்செறிந்திருந்தார்கள். ஆம், இதன் பின்னால் இருக்கக்கூடிய ஆபத்துக்களை நாம் தீவிரமாக பார்க்க வேண்டிய அவசியம் உள்ளது.

முன்னர் இருந்த அரசுகளை விட இது எப்படியான ஒரு "சைலன்ற் கில்லர்" ஆக இருக்கிறது. என்பதைக் கவனிக்க வேண்டும். முன்னர் இருந்த அரசுகளாக ரணில், மைத்திரி, கோத்தபாய அரசுகளாக இருக்கட்டும், ஜே.ஆர். ஜெயவர்த்தன, பிரேமதாச போன்றவர்களாக இருக்கட்டும், அவர்கள் யாராக இருந்தாலும் நேரடியாக தமிழ் மக்கள் மீது பிரிவினைவாதத்தை வெளிப்படுத்தினார்கள். அவை எல்லாம் தெரிந்த பூதங்கள். இவர்கள் இவ்வாறுதான் எங்களை ஒடுக்குவார்கள். எங்களுடைய கோரிக்கைகளை நசுக்குவார்கள், தமிழ் மக்களுடைய உரிமைகளையும், சலுகைகளையும் பெறவிடாமல் வழித்துடைப்பார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமாக இருந்தது. அதனால் அந்த அரசுகளுக்கு எதிராக நாம் எதிர்ப்புக்களை வெளிப்படுத்தினோம்.

ஆனால் இப்போது அமைந்துள்ள அரசாங்கம் வேறொரு முகத்துடன் செயல்படுகிறது. அரசு போதை ஒழிப்பில் சிறப்பாக செயற்படுகிறது, மக்களின் நலன்களில் கவனம் செலுத்துகிறது, பொருளாதார கட்டுமானத்தில முன்னேறுகிறது, சர்வதேச நலன்களை கருத்தில் எடுக்கிறது. அதேபோல் இலங்கையை சுற்றுலா துறையிலும், பிற துறைகளிலும் வளர்த்தெடுக்க முயற்சிக்கிறது. முதலீடுகளை ஊக்குவிக்கிறது. இவை அனைத்தையும் நாம் வரவேற்கின்றோம்.ஆனால் அதே நேரத்தில், தமிழ் மக்கள் மீது இருக்கும் பல அடிப்படை கோரிக்கைகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்பதையும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.



கைதட்டி உணர்ச்சி பிரவாகத்துக்குள் மிதப்பதும் அல்லது வெளிப்புறத்தில் காட்டப்படும் கவர்ச்சிகர அரசியல் பேச்சு நகர்வுகளை பார்த்துவிட்டு உணர்ச்சி பிரபாக நிலைக்குள் மூழ்கி விடுவது தமிழர்களுக்கு பெரும் ஆபத்தான நிலை. இப்படியாக எடுபட்டு போகும் தமிழ் மக்கள் தான் மிக அதிக ஆபத்தானவர்கள். இந்த நிலைமையை புரிந்து கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

யாழ்ப்பாணத்தில் அவர் பல விடயங்களை கூறியிருந்தார். அதில் சில உரையாடல்களில் தையிட்டி விகாரை தொடர்பாக சில குழுக்கள் ஒன்று சேர்ந்து, ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்ட விகாரையை முன்னிலைப்படுத்தி இனவாதத்தை பேச முயல்கிறார்கள் என்றும், இப்படிப்பட்ட செயல்கள் உண்மையில் தேவையா என கேள்வி எழுப்பினர். யாழ்ப்பாண மண்ணிலே நின்று கொண்டு இதனை பேசியிருந்தார். நாம் இந்த விடயத்தை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். இந்த உரையில் அவர் எங்கேயாவது இராணுவம் அடாத்தாக பிடித்த தமிழர்கள் காணிகளை விடுவிக்க போகின்றோம் என்றோ, சட்டத்துக்கு புறம்பாக இனிமேல் விகாரைகள் கட்டப்பட மாட்டாது என்றோ, அரசியல் கைதிகள் துரிதமாக விடுவிக்கப்படுவார்கள் என்றோ, இராணுவம் வசமுள்ள பல காணிகள் விடுவிக்கப்பட்டு பொதுமக்கள் பாவனைக்காக கையளிக்கப்படும் என்றோ, இனிமேல் இராணுவ மயமாக்கம் இருக்காது என்றும், பௌத்தர்கள் இல்லாத பகுதிகளில் புதிய பௌத்த மயமாக்கம் இனிமேல் நடைபெறாது என்றும், காணாமல் போனவர்களுக்கு எந்த வகையான செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட போகின்றன என்றோ, இவற்றில் எதையாவது அவர் தெளிவாகப் பேசினாரா என்பதே இங்கே தமிழர்களிடையே எழும் அடிப்படை கேள்வி.

அதைத்தவிர, இந்த நாடு உள்நாட்டு போருக்கு உள்ளானமைக்கும், இன முரண்பாடுகளுக்குமான ஒரு முடிவாக "ஒரே இலங்கையர்கள்" என்ற அடிப்படையில் தமிழர்களுக்கு எந்த அரசியல் தீர்வை நாம் தயாரித்துக் வருகிறோம், ஆட்சி அதிகாரங்களை பரவல்க்கி பகிர்வோம், அதற்கு எந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம் என்பது பற்றி அவர் மூச்சு கூட விடவில்லை.

இத்தனைக்கும் மத்தியில் கைதட்டி, புகளாங்கிதம் அடைந்து மகிழ்கின்ற அத்தனை கோடி தமிழர்களும், உலகம் எங்கும் பரந்து வாழ்கின்ற ஒவ்வொரு தமிழனும், இந்த நிலையை உள்ளாந்தமாகவும் ஆத்மார்த்தமாகவும் நின்று சிந்தித்து பார்க்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். எங்களுடைய உரிமைப் போராட்டத்தில் பலவற்றை இழதோம். இருக்கட்டும், ஆனால் காணிகளை எப்படி விடுவிப்பது, தமிழர்களுக்கான தீர்வை வழங்கும் ஒரு புதிய அரசியலமைப்பை இன்று பாராளுமன்றத்தில் மூன்று இரண்டுபெரும்பான்மையோடு நீங்கள் ஏன் இன்னும் உருவாக்கக் பாடுபடவில்லை. எல்லா முன்னாள் ஆட்சியாளர்களுக்கும் கண்ணுக்குள் விரல் விட்டு ஆட்டும் உங்களால் முடியாதா உந்த பெரும்பாண்மை பலத்தோடு புதிய அரசியலமைப்பை தமிழர்களுக்கு வழங்குவதற்கு?. அதை பற்றிய எந்தவித பேச்சுக்களும் இல்லை. ஆட்சி அமைந்து ஒன்றரை வருடம் ஆகப்போகின்றது. தமிழர் தீர்வு விடயத்தில் எவ்வித முயற்சியோ அல்லது முன்னேற்பாடுகளோ உள்ளதாக தெரியவில்லை. ஆனால் அவரின் உரை எவ்வாறு அமைந்திருந்தது என்றால் "முன்னர் தமிழர்களுக்கு தனியான நிர்வாகம் தேவை என் கேட்கப்பட்டிருந்தது ஆனால் இப்பொழுது தேவையில்லை எல்லாம் ஒரே அரசாக ஆட்சியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தமிழர்களால் கொண்டாடப் படுகிறது" என்ற அரத்தத்தில் தான் அமைந்த்திருந்தது அவரது உரைப்பகுதி.

இந்த விடயம் மிக ஆபத்தான விடயம்.

இதுவே "சைலன்ட் கில்லர்ஸ்" என்ற வகையில், மெதுவாக விடுதலையும் சுயநிர்ணயமும் வேண்டி நிற்கும் மக்களின் மனங்களை ஆக்கிரமித்து, எந்த தீர்வும் தேவையில்லை என்பதற்கான அரசியல் சூழ்நிலை உருவாக்கப் படுவதாகும். 35 ஆண்டுகளுக்கு மேலாக உரிமைக்காக நிகழ்ந்த ஆயுதக் போராட்டமும் வீணானது, முள்ளி வாய்க்காலில் அத்தனை இனப்படுகொலையைச் சந்தித்த அனைத்தும் வீணானது என்று சின்ன வார்த்தைகள், செயல் மாயங்கள் மூலம் பூசி மெழுகி, நவீனஇளைஞர் யுவதிகளை கவர்ந்து கொண்டிருக்கும் ஒரு அரசியல் திட்டம் மிக நுணுக்கமாகவும், லாவகமாகவும், ராஜதந்திரமாகவும் அரங்கேற்றப்படுகின்றது. இது தமிழ்த் தேசிய அரசியல் பரப்புக்குள் நிகழும் மிகப் பெரிய ஆபத்தான நிலையாகும்.

அவர்களுக்கு சார்பான அமைச்சர்கள், எம்பிக்கள் மற்றும் வேறு நபர்கள் மூலம் தமிழ் தேசியத்தை மெதுவாக அழிக்கும் முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதே சமயம் மக்கள் கவனத்தை வேறு திசைக்கு திருப்பும் நடவடிக்கைகளும் நிகழ்த்தப்படுகின்றன. இந்த நிகழ்வுகள் தமிழர்களுக்கு மிகப் பெரிய ஆபத்தான மற்றும் நுணுக்கமான அரசியல் சூழல் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி அவர்கள் போதைக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். இது வடமாகாணத்திற்கு தேவையானது. எமக்கு அதற்கு மாற்று கருத்து இல்லை. அவருக்கு முழு ஒத்துழைப்பு அளிக்கிறோம். பல்வேறு திட்டங்களுக்கு நாங்கள் ஒத்துழைப்போம். ஆனால், போதையை ஒழிப்பதை மட்டும் முன்னிறுத்தி, மற்ற முக்கியமான தமழர் அடிப்படை பிரச்சனைகள், சுயநிர்ணய கோரிக்கைகள் மற்றும் காணாமல் போனவர்கள் விவகாரங்கள், அரசியல் கைதிகள் விடுதலை என்பன புறக்கணிக்கப்படுகின்றன. மொத்தத்தில், இந்த நடவடிக்கைகள் ஒரு நுணுக்கமான, ஆபத்தான அரசியல் திட்டமாக தமிழர் தேசிய உரிமைகள் மீது செயல்படுகின்றன. ஒவ்வொரு தமிழ் குடிமகனும் இவற்றை துல்லியமாக ஆராய்ந்து, உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியம்.

ஜனாதிபதி வருகையின் போது, தமிழ் பேசும் நபர்களை ஒருங்கிணைத்து, அவர்களை புதிய அரசியல் நிகழ்வுகளில் இணைத்து, சிலர் பிரச்சாரக் கூட்டாளர்களாக மாறுகின்றனர்.

(தொடர்ச்சி 14 பக்கம்)


PRIVATE LENDERS -
FOR MORE FLEXIBLE
MORTGAGE OPTIONS
With the ever-changing market and a stricter mortgage stress test, many Canadians are finding it harder to qualify for a mortgage and are turning to alternative solutions. Private lenders are more flexible with required qualifications than traditional lenders. If you are looking to buy a home or refinance, a private mortgage is an option!*
Self-Employed
Purchasing
New To Canada
Refinancing
Investing In Real Estate
Consolidating Debt
... and more!
CONTACT ME TODAY FOR DETAILS
Tharsika Tharmakulasingam
Mortgage Agent Level 2
T: (647) 409-8059
ttharmakul@akal.ca
https://www.mortgagealliance.com/TharsikaTharmakulasingam
238 Britannia Road E, Mississauga, ON L4Z 1S6
AKAL
MORTGAGES
MORTGAGE ALLIANCE


உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?
Legalize your basement now!
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets
Coverall Group Inc.
Contact: Siva 416-706-8160


Carefirst Family Health Team
Carefirst
Family Health Team
Accepting New Patients
புதிய நோயாளர்கள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்
• அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
• உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
• நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
• நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.
அவர் விபரம்:
டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)
டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.
உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.
Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam
Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca
11/24
Steeles Ave.
Kennedy Road
McNicoll Ave.
Silver Star Blvd.
Midland Ave
N
Finch Ave.


Mayor Brown & Councillors invite you to
EXPERIENCE BRAMPTON
Celebrate Tamil Heritage Month
Saturday, January 31
Ken Whillans Square & City Hall Atrium
3 pm Community Flag Raising
3:30 pm Reception
Enjoy musical and dance performances and free traditional cuisine as we celebrate Tamil Heritage Month, in partnership with the Brampton Tamil Association and Brampton Tamil Seniors Association.
Generously sponsored by Algoma UNIVERSITY
BRAMPTON
brampton.ca/events

# கனடா – கியுபெக் மாகாணத்தில் இயங்கிவரும் "கியுபெக் தமிழ் மரபுத் திங்கள் கூட்டமைப்பு" நடத்திய பிரமாண்டமான " கியுபெக் தமிழ் மரபுத் திங்கள் – 2026





மொன்றியால் கலைஞர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் உட்பட நூற்றுக்கணக்கானவர்களுடன். உலகெங்கும் புகழுடன் பேசப்பெறும் "ராப்" பாடகர் வாகீசன் இராசையா, அவரது மேடைச் சகாக்களான அட்விக் மற்றும் திசோன் கலந்து சிறப்பித்த தமிழர் விழா

--------------------------------------------------------

கனடா- கியுபெக் மாகாணத்தில் இயங்கிவரும் "கியுபெக் தமிழ் மரபுத் திங்கள் கூட்டமைப்பு" நடத்திய பிரமாண்டமான " கியுபெக் தமிழ் மரபுத் திங்கள்-2026 அங்குள்ள 50 இற்கும் அதிகமான தமிழர் அமைப்புக்கள் இணைந்து நடத்திய தமிழர் விழா கடந்த 18-01-2026 ஞாயிற்றுக்கிழமையன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

பல மொன்றியால் அமைப்புக்கள் இணைந்து உள்ளூர்க் கலைஞர்களும் மொன்றியால் அரசியல் பிரமுகர்களும் அவர்களில் ஒருவராக முதற்தடவையாக நகரசபை அங்கத்தவராக தேர்ந்தெடுக்கப்பெற்ற மெலனி தியாகராஜா உட்பட பல பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்

அத்துடன் ரொறன்ரோவிலிருந்து அரசியல் தலைவர்களும் குறிப்பாக தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களான அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி மற்றும் யுனிற்றா நாதன் ஆகியோரும் மற்றும் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் அரி அரன் அவர்கள் தலைமையில் இயக்குனர் சபை உறுப்பினர்கள் பலர் மற்றும் கனடா உதயன் பிரதம ஆசிரியர் வர்த்தகப் பிரமுகர்கள் சங்கர் நல்லதம்பி மற்றும் "விஜயா நகை மாளிகை" உரிமையாளர் ரூபன் அவர்கள் ஆகியோரும் ஸ்காபுறோ தமிழ்ச் சமூக மையத்தின் நிதி சேகரிப்புக் குழுவின் சார்பில் குபேஸ் நவரட்னம ஆகியோர் உட்பட பலர் ரொறன்ரோ மாநகரிலிருந்து கலந்து சிறப்பித்தனர்.

கனடா- கியுபெக் மாகாணத்தில் இயங்கிவரும் "கியுபெக் தமிழ் மரபுத் திங்கள் கூட்டமைப்பு" நடத்திய பிரமாண்டமான " கியுபெக் தமிழ் மரபுத் திங்கள்-2026 இவ்வருட விழாவில் முக்கிய அம்சமாக கனடாவில் உள்ள மூன்று ஊடகங்களைச் சேர்ந்தவர்களுக்கு சிறப்புக் கௌரவம் செய்யும் நிகழ்வும் இடம்பெற்றது ஐயா4யு உரிமையாளர் திரு. பேரின்பநாதன்- தமிழ்வண் தொலைக்காட்சி அதிபர் ஸ்ரீ அவர்கள் மற்றும் மொன்றியால் ஐதமிழ் இணைய ஊடகத்தின் சார்பில் காந்தி அவர்கள் ஆகியோர் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஹரி ஆனந்தசங்கரி அவர்களால் கௌரவிக்கப்பெற்றனர்.

மேற்படி விழாவில் கியுபெக் மாகாணத்தைச் சேர்ந்த மத்திய-மாகாண மற்றும் உள்ளாட்சி அரசுகள் சா ர்பாக தேர்ந்தெடுக்கப்பெற்ற அமைச்சர்கள் மற்றும் அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

--தகவர் சத்தியன்- படங்கள் -ஐயா4யு

# முதல் தடவையாக, இலங்கையின் வடக்கு மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 98 சதவீதத்துக்கும் அதிகமான நிதி செலவு செய்யப்பெற்றது!

2025ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில், 98 சதவீதத்துக்கும் அதிகமான நிதியைத் வினைத்திறனாகச் செலவு செய்து, இலங்கையின் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் வடக்கு மாகாண சபை முதலிடத்தைப் பிடித்துள்ளதாக வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) ஆர்.சிவரூபன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தலைமையில், மாகாண பிரதம செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாணப் பணிப்பாளர்கள், ஆணையாளர் அன்று காலை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்த ஆளுநர், 2025ஆம் ஆண்டில் மாகாணத்தின் நிதி முன்னேற்றத்தில் மிகச் சிறப்பான நிலையை அடைவதற்கு அர்ப்பணிப்புடன் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் தனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர், கடந்த 2024ஆம் ஆண்டு எமது மாகாணத்துக்கு 4 பில்லியன் ரூபாவும், 2025ஆம் ஆண்டு 8 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்ட நிலையில், இம்முறை 2026ஆம் ஆண்டுக்காக அண்ணளவாக 10 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நிதி ஆணைக்குழுவும் ஜனவரி மாதத்திலிருந்தே எமது திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

எமக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் ஊடாகச் செயற்படுத்த முடியாத மேலதிகத் திட்டங்களுக்குரிய நிதியை, மத்திய அரசின் நிரல் அமைச்சுக்களிடம் கோருவதற்கு எமக்கு வாய்ப்புள்ளது. குறிப்பாக, மாகாண சபைகளுக்கு நிரல் அமைச்சுக்களின் நிதியை ஒதுக்கீடு செய்யுமாறு மாண்புமிகு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அவர்களும் பணிப்புரை விடுத்துள்ளார். எனவே, இவ்வாண்டில் எம்மால் முன்னரை விடக் கூடுதலான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியும் என நான் உறுதியாக நம்புகின்றேன்.

எமது மாகாணத்தில் சில குறிப்பிட்ட பிரதேசங்கள்த் தொடர்ச்சியாக வெள்ளப் பாதிப்புகளை எதிர்கொண்டு வருகின்றன. அந்த மக்கள் ஒவ்வொரு தடவையும் பாதிக்கப்படுவதை நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. எனவே, அவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ள பிரதேசங்களில் எதிர்காலத்தில் வெள்ளப் பாதிப்பை முற்றாக இல்லாதொழிப்பது அல்லது குறைப்பது எவ்வாறு என்பது தொடர்பில் இவ்வாண்டில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

சொல்வது சுலபம் ஆனால், அதனைச் நடைமுறைப்படுத்துவது கடினம். நாம் இங்கிருந்து கொள்கைகளை வகுத்தாலும், அதனைத் களத்தில் செயற்படுத்துபவர்கள் நீங்களே. அந்தச் செயற்பாடுகளின்போது நீங்கள் பெற்ற அனுபவங்களே எதிர்கால வெற்றிக்கு வழிவகுக்கும்.

பிரதம செயலாளர் முதல் கள உத்தியோகத்தர்கள் வரை அனைவரினதும் கூட்டு முயற்சியாலேயே இம்முறை எம்மால் நிதிப் பயன்பாட்டில் தேசிய ரீதியில் சிறப்பான அடைவை எட்ட முடிந்துள்ளது. இருப்பினும், நாம் வெறும் நிதிப் புள்ளிவிவரங்களை மட்டும் பார்க்காமல், இத்திட்டங்கள் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன என்பதை நிச்சயம் ஆய்வு செய்ய வேண்டும், என்றார் ஆளுநர்.





பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) ஆர்.சிவரூபன் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் நூறு சதவீதக் கட்டு நிதியையும் நாம் திறைசேரியிடமிருந்து பெற்றுள்ளோம். கடந்த 30ஆம் திகதி நள்ளிரவு வரையில் 98 சதவீதத்துக்கும் அதிகமான நிதியைச் செலவு செய்துள்ளோம். பௌதீக முன்னேற்றத்தைப் பொறுத்தவரையில் நாம் 100 சதவீத இலக்கை எட்டியுள்ளோம். இந்த அடைவின் மூலம் இலங்கையிலுள்ள ஏனைய மாகாணங்களில் நாமே முன்னிலையில் உள்ளோம். இந்த வெற்றியைத் தக்கவைக்க, 2026ஆம் ஆண்டுக்குரிய வேலைத் திட்டங்களில் கொள்வனவு தொடர்பான பணிகளை ஆரம்பத்திலேயே தொடங்குவது சிறப்பாக அமையும், என்றார்.

பிரதம செயலாளர் தனுஜா முருகேசன் அவர்கள் கருத்துரைக்கையில், வடக்கு மாகாணம் இம்முறை "பூச்சிய வரவு - செலவுத் திட்டம்" என்ற மிகச் சிறப்பான நிதி முகாமைத்துவ நிலையை எட்டியுள்ளது. இந்த நிலையை அடைவதற்குப் பங்களிப்புச் செய்த அனைவருக்கும் நன்றிகள். 2026ஆம் ஆண்டுக்கான திட்டங்கள் தொடர்பில் நிதி ஆணைக்குழுவால் வழங்கப்பட்டுள்ள புதிய அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, எமது எதிர்காலச் செயற்பாடுகளை முன்னெடுப்போம், என்றார்.

இந்நிகழ்வில் மாகாணத்தின் உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.




(11 பக்கத் தொடர்ச்சி)

# அநுரவின் 'யாழ்பான பொங்கல்' பேச்சு தமிழர்களுக்கு எதை உணர்த்துகிறது? தமிழர் அரசியல் திசைமாறி அமானுசியம் ஆகிறதா?

---

இவர்கள் தமிழ் தேசிய அரசியலின் அடிப்படை விடயங்களை புரிந்து கொள்ளாதவர்கள், ஆனால் சமூக ஊடாகங்களில் தொடர்ந்து பரப்பப்படுகின்ற தகவல்கள் மூலம், நிகழ்வுகளை மக்கள் முன்னிலையில் காட்டுகின்றனர். எனினும், ஜனாதிபதி மக்களோடு நேரில் பழகுவது வரவேற்கப்பட வேண்டியது, நாங்கள் அவரை புதிய அரசியல் நகர்புள்ள ஜனாதிபதியாக கருதுகிறோம். ஆனால், இதற்கிடையில் தமிழர்களின் உரிமைகள், சுயநிர்ணயக் கோரிக்கைகள் மற்றும் அரசியல் கைதிகள் விடுயலை, காணமல் போனோர்களது நிலை, காணி விடுவிப்பு புறக்கணிக்கப்படப் கூடாது. இந்த உண்மையை தமிழ் மக்கள் முழுமையாக புரிந்து கொள்ள வேண்டும், மேலும் புலம்பெயர் தமிழரும் இதனை நுணுக்கமாக புரிய வேண்டும்.

முதலில் அநுர அவர்கள் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட முன்னர், அவர் எந்தக் கருத்துக்களை தெரிவித்தார், எவ்வாறு செயல்பட்டார் என்பதையும் நாம் ஊடகங்கள் மூலம் ஆராய்ந்து புரிந்து கொள்ள வேண்டும்.

பல ஆண்டுகளுக்கு முன் தனியார் ஊடக நேர்காணல்களில் பங்குபற்றிய அநுர அவர்கள் தமிழர் உரிமைகள் பற்றி கரிசணை கொண்டு கருத்துரைத்திருக்கிறார், காணாமல் போனவர்களின் தாய் தந்தையர்களின் வேதனை எனக்கு தெரியும் அவர்களுக்கு என்ன நடந்தது என சொல்ல வேண்டுமல்லவா. அப்பாவி அரசியல் கைதிகள் விடுதகை செய்ய வேண்டும், தமிழ் மக்கள் சுய உரிமையோடு வாழும் உரிமை உண்டு என்றெல்லாம் அந்த நேர்காணலில் கூறியிருப்பார். ஆனால் இன்றோ அவர் ஜனதிபதியாக ஆட்சி அதிகாரத்துக்கு வந்து, மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வடமாகாணத்துக்கு வந்த பிறகு, அவர் அதுபோன்ற தமிழ் மக்களின் அடிப்படை சித்தாந்தங்கள் பற்றி எந்தவித வார்த்தைகளையும் பயன்படுத்தாமல் செயற்பட்டு வருகிறார். சட்டவிரோதமாக கட்டப்பட்ட தையிட்டி விகாரைக்கு எதிராக நாகதீபத்தினுடைய பிரதான விகாராபதியே எதிர்ப்பு தெரிவித்தாலும், ஜனாதிபதி அவர்கள் அது சிலரின் இனவாத அரசியல் நடவடிக்கை என சொல்லாடுகிறார்.

இவ்வாறு யாரும் தமிழர் அடிப்படை அரசியல் பிரச்சினைகளை பேசினால் தமிழர்களே இன்று என்.பி.பி உறுப்பினர்களாக மாறி அது இனவாதம் என விசம பிரச்சாரம் செய்யும் அரசியல் வக்குரோந்து நிலைக்குள் வந்திருக்கிறோம். சிலர் தமிழ் தேசியம் சம்பந்தமான விவகாரங்களில் பேசினால்,அவர்களை இனவாதம் பேசுகிறார்கள் என முத்திரை பதியப்படுகிறது. முதலாவது கடந்த அனுர அலைக்குள்ளால் வெளிக்கிளம்பிய நவீன தமிழ் தோழர்கள் தமிழ்தேசியம் என்றால் என்ன என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

"தமிழ் தேசியம்" என்பது நமது நில புல எல்லைகளுக்குள் வாழும் தமிழ் பேசும் தேசிய இனத்தின் சுயாதீன, சுயநிர்ணய அதிகாரத்துடன் தங்களை நாங்களே ஆளும் கோட்பாடு. இது இனவாதம் அல்ல. இனவாதம் என்றால் ஒரு இனத்தை பிடுங்கி, அதனுடைய அதிகாரத்தை பிடித்தல் ஆகும். எனவே, தமிழ் தேசிய கோட்பாடு மற்றும் இனவாதங்களின் வித்தியாசங்களை புரிந்து கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் அவர் வழங்கிய வாக்குறுதிகள் எப்படி இருந்தன. என்பதைப் பார்க்கும் போது, சில காணிகள் மற்றும் தெருக்கள் விடுவிக்கப்பட்டிருக்கின்றன. யாழில் ஆற்றிய உரையிலும் கூட சில விடயங்களைப் பற்றி கூறியிருந்தார். நாங்கள் பலாலி விமானத்தை நவீனப்படுத்துவோம். காங்கேசந்துறை துறைமுகத்தையும் மேம்படுத்துவோம் என்று. வளர்ச்சி நிகழட்டும். அதற்கு நாங்கள் எந்தவிதமான தடையும் இல்லையென்று கூறலாம். போதை மாபியாவை ஒழிக்கிறீர்கள் உங்களுடைய செயற்திட்டங்களை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், புதிய தமிழ் தலைமுறை ஆனது வெளி தோற்றங்கள், வெளிப்பாடுகளை, கவர்ச்சிகர அரசியல் வித்தைகளை மட்டும் சமூக ஊடகங்களில் பார்த்து ஈர்க்கப்படுவது போல் இல்லாமல், அவர்களுடைய பெற்றோர்கள், சமூகத்தில் உள்ளவர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் தமிழ் இன வரலாற்றை விளக்கி சொல்ல வேண்டும். அப்போதுதான் உண்மை நிலைத் தெளிவாக தெரியுமென்பது உறுதி.

மாயமான கவர்ச்சிகர பூசிமெழுகுதல்களுக்குள் அகப்பட்டு போகாது எங்களுடைய அடிப்படை கோரிக்கைகள் மற்றும் தமிழர் உரிமைப் போராட்டம் ஏன் நடந்தது, ஏன் இனப்படுகொலைகள் நடந்தன. ஏன் இந்த இனம் முள்ளிவாய்க்கால் வரை சென்றது என்ன தேவை எங்களுடையது ஏன் விடுதலைப்போராட்டம் மௌனிக்கப்பட்டது என்பதையெல்லாம் பற்க்கின்ற மக்களாக இல்லாமல் உணர்கொன்ற மக்களாக இருக்க வேண்டும். புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த உரிமைக்கான போராட்டத்தை உங்கள் பிள்ளைகளுக்கும் அடுத்த தலைமுறைக்கும் கடத்த வேண்டும். இல்லையென்றால், தமிழ் தேசியம் சிதைந்து போய்விடும். இவை மிக நுண்ணியமாகவும், திட்டமிட்ட முறையிலும் நகர்த்தப்பட்டு வருகிறது. என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழர்களின் நீதி, உரிமைகள், மற்றும் காணாமல் போனோர் விசாரணைக்கு இன்னும் முழுமையான தீர்வு காணப்படவில்லை. கடந்த பல வருடங்களாக முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை, அரசியல் கைதிகள் விடுவிப்பு, மற்றும் காணிகள் மீட்புக்கு தமிழர்கள் போராடி வருகின்றனர் தமிழர்களுக்கான நிரந்தர தீர்வு என்ன? என்பது பற்றி எதுவுமே இல்லை!

ஜனாதிபதியின் யாழ் பொங்கல் உரையின் வார்த்தைகள், தமிழர்களுக்கு தனி நிர்வாக கட்டமைவு தேவையிலை அதிகார பரவலாக்கம் தேவையில்லை என்ற கருத்து உட்பொசிந்ததாகத் தான் அமைகிறது.

ஆட்சியாளர்கள் மக்கள் மனதை மயக்குனின்ற "brain wash" விதமாக பேசுகிறார்கள், நடந்து கொள்கிறார்கள். அவர்களுடைய இனிமையான வார்த்தைகளாலும், செயல்களாலும் தமிழ் மக்கள் அடிப்படை அபிலாசைகாலை நீர்த்து போகச்செய்யும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் மக்கள் மனதில் குழப்பம் உருவாகி சரி, தவறு விளங்காமல் உண்மையான நிலைமை மறைமுகமாக்கப்பட்டு, வெளியில் தெரியாமல் போய்விடுகிறது. தமிழர்களின் நீதி போராட்டம், காணிகள் மீட்பு மற்றும் அரசியல் கைதிகள் விடுவிப்பு இன்னும் தொடர்கிறது. மக்களின் உரிமைகள் மறக்கப்பட கூடாது என்றும், சர்வதேச நீதி அரசியலமைப்பினூடான தமிழர்களுக்கான அதிகார பரவலாக்கம் என்பவை தமிழர்களின் வேணவா!

இதில் தமிழ் மக்களையோ அரசையோ மட்டும் குறை கூறி பயனில்லை எமது தமிழ் தேசிய அரசியல்வாதிகள் விட்ட பிழைகளும், நீண்ட தொலைநோக்கு இல்லாத அரசியல் செயற்பாடுகளும் இன்று மக்களை கடுமையான விரக்திக்குள் தள்ளியுள்ளன. அதனால்தான் மக்கள் ஒரு புதிய முகத்தை, புதிய அரசியலை தலைமையை தேட ஆரம்பித்துள்ளனர். தமிழ் இளம் புதிய தலைமுறைக்கு தமிழ் தேசிய அரசியலுக்குள் மேலெழும்புவதற்கும், வரவேற்பு கிடைப்பதற்கும் வாய்ப்புகள் இல்லை. அன்றிருந்த தமிழ் அரசியல் வாதிகளே இன்றும் அதே முகங்கள், அதே கண்கள், அதே சொற்பிரயோகங்கள், அதே காட்சிகளே மேடைகளிலும், ஊடகங்களிலும், அட்டைப்படங்களிம் மீண்டும் மீண்டும் தோன்றுகின்றன. இதனால் மக்கள் ஏற்கனவே இந்த அரசியல் செயற்பாடுகளின் மீது முழுமையாக விரக்தி அடைந்துவிட்டார்கள். ஆகவே அவர்கள் புதிய தலைமுறையினரை தேடுகிறார்கள். உண்மையில் தமிழர் இனப்பற்றுருதியுடன் அரசியல் தொலைநோக்குடன் இயங்கும் ஒரு புதிய தலைமுறை இருந்தால், மக்கள் அவர்களை ஆதரிப்பார்கள்.

ஆனால் இன்றோ தமிழர் மத்தியில் தேவையற்ற அரசியல் அறிவிகளும், சமூகத்துக்கு ஒப்புவையல்லா வார்த்தை பிரயோகமும், அரசியல் அறிவற்ற பேச்சு திறன்கால் அற்ற, இனத்தைப் பற்றி ஆழமாக சிந்திக்காத அரசியல் பிரதிநிதிகள் மட்டுமே உருவாகியுள்ளனர்.

ஒரு பக்கம் இந்திய இழுவைப்படகுகள் வந்து வடமாகாண மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழித்து கொண்டிருக்கின்றன. அதற்கு எந்த தீர்வும் இல்லை. மீனவர்கள் அழுகிறார்கள். சட்டவிரோத விகாரைகள், நில அபகரிப்புகள் என்று பிரச்சனைகள் தொடர்கின்றன. ஆனால் இதற்கெல்லாம் உறுதியான அரசியல் முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

ஜனாதிபதி இனியும் மனம் வைக்கலாம். ஆனால் தமிழ் தேசிய அரசியல்வாதிகள் இன்னும் உறுதியாகவும், பொறுப்புடன் அரசியல் செய்ய வேண்டிய காலம் இது. அத்த்தோடு தமிழ் மக்களும் வெளிக் காட்சிகளையும், வண்ண ஜாலங்களையும், கவர்ச்சி வார்த்தைகளையும் பார்த்து மயங்காதீர்கள். வெளிப்புறத் தோற்றங்கள், இனிமையான பேச்சுகள் மட்டும் கண்டு உங்கள் தமிழ் தேசிய அடையாளத்தை காற்றில் பறக்க விடாதீர்கள். அது போதையை விட கூட அதிக ஆபத்தானது. இனத்தை கூறு போடுவதும், இனப்பற்றையும், இனத்துக்குரிய அங்கீகாரத்தையும் விற்று பிழைப்பதும், எதிர்கால தலைமுறைகளுக்கு செய்யும் மிகப்பெரிய துரோகம். அரசியல் என்பது இன்றைக்கானது அல்ல் அதுவருங்கால தலைமுறைகளுக்காக செய்யப்பட வேண்டிய ஒரு பொறுப்பு வாய்ந்த செயல். அந்த அரசியல் பார்வை தான் இன்று மிகவும் தேவை.

ஆக, தமிழினத்தின் அடிப்படை உரிமைகளை அதிகார பரவலாக்கத்தை இன்னும் பாராமுகத்துடன் தான் இன்றைய அரசுகளும் கையாளுகின்றன என்பதும் தமிழ் தேசிய அரசியல் வாதிகளினால் வெறுப்படைந்த மக்கள் அலைகளுள் கட்டுண்டு போகிறார்கள். ஆக எம் உரிமைகளை வென்றெடுக்கும் நீண்ட நெடிய போராட்டத்தில் புதிய தமிழ்தேசிய அரசியல் வீறுகொண்டெழவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

**நன்றி**
**கு. மதுசுதன்**
**B.Sc(Hons), M.Sc**
**அரசியல் ஆய்வாளர்**
**21.01.2026**



# வடக்கு மக்களின் "ஜனநாயகன்"



**"""நாடும் மக்களும் அநுரவோடு" என்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் கோஷம் தற்போது தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கிலும் நிதர்சனமாகி வருகின்றது ஜனாதிபதி அநுரகுமாரவுடனான தமிழ் மக்களின் நெருக்கம் தனிப்பட்ட ஈர்ப்பு அல்ல. இது ஒரு அரசியல் மாற்றம். அநுரகுமார அரசாங்கத்தினால் தமிழ் மக்களின் முக்கிய பிரச்சினைகள் தீர்க்கப்படாமல், பௌத்த, சிங்கள பேரினவாதம் கட்டுப்படுத்தப்படாமல் இருந்தும் கூட வடக்குத் தமிழ் மக்கள் முண்டியடித்து ஜனாதிபதியை சொந்தம் கொண்டாடுகின்றார்கள் என்றால் எம்மில் என்ன தவறு உள்ளதென்பது தொடர்பில் தமிழ் கட்சிகள் சுயபரிசோதனை செய்ய வேண்டியது கட்டாயம்."**

**கே.பாலா -**

ஜே.வி.பி. - தேசிய மக்கள் ஆகியவற்றின் தலைவரும் ஜனாதிபதியுமான அநுரகுமார திசாநாயக்கவின் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்ட வடக்கு மாகாணத்திற்கான 3 நாள் விஜயமும் அந்த விஜயத்தின்போது அவர் ஆற்றிய உரைகளும் வடக்கு மாகாண தமிழ் மக்களுடன் குறிப்பாக யாழ்ப்பாண மக்களுடன் அவர் நடந்து கொண்ட விதமும் தென்னிலங்கையிலும் வடக்கு மாகாணத்திலும் இரு வேறுபட்ட அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தை 14 ஆம் திகதி வடக்கிற்கான விஜயத்தை மேற்கொண்டு முதலில் மன்னார் மாவட்டத்திற்கு சென்று காற்றாலை மின்திட்டங்களை ஆரம்பித்து வைத்தார். மறுநாள் 15 ஆம் திகதி வேலணை தெற்கு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில் பொங்கல் விழா, மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய பொங்கல் விழா ஆகியவற்றில் பங்கேற்றார். மறுநாள் 16 ஆம் திகதி மீசாலை வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு, கொக்குவில் தொழில்நுட்ப கல்லூரி மைதானத்தில் போதைப்பொருள் ஒழிப்புக்கான தேசிய செயற்பாட்டு நிகழ்வு ஆகியவற்றில் பங்கேற்றார்.

இந்த நிகழ்வுகளில் அவர் பங்கேற்றபோது ஆற்றிய உரைகள், தமிழ் மக்களுடன் நடந்துகொண்ட முறைகளே தென்னிலங்கையிலும் வடக்கு மாகாணத்திலும் இருவேறுபட்ட அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன. இதில் ஜனாதிபதி ஆற்றிய உரைகள் தென்னிலங்கையில் உள்ள, பௌத்த, சிங்கள இனவாதிகளிடம் கடும் விசனத்தையும் ,விமர்சனங்களையும் எதிர்ப்புக்களையும் ஏற்படுத்தி விட்டுள்ள நிலையில் மறுபக்கத்தில் ஜனாதிபதி தமிழ் மக்களுடன் நடந்துகொண்ட விதம், தமிழ் மக்கள் ஜனாதிபதியிடம் காட்டிய அன்பு, ஆதரவு தமிழ் அரசியல்வாதிகளிடம் கலக்கத்தை, எதிர்காலம் பற்றிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதில் முதலாவதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தமிழ் மக்களுக்கு ஆற்றிய உரைகள், பௌத்தத்திற்கும் சிங்களவர்களுக்கும் எதிராக ஜனாதிபதி செயற்படுகின்றார், தமிழ் இனவாதிகளிடம் அடிபணிந்துவிட்டார், பௌத்த மதத்திற்கு துரோகம் செய்து விட்டார், சிங்களவர்களைக் காட்டிக்கொடுத்து விட்டார் என்றெல்லாம் தென்னிலங்கை இனவாதிகளை, எதிர்கட்சிகளை, பிக்குகளை கொதிப்படைய வைத்தது ஏன் என்பதனைப் பார்ப்போம்.

ஜனவரி 16ஆம் திகதி யாழ்ப்பாணம் கொக்குவில் தொழில்நுட்ப கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க உரையாற்றும் போது, "புனிதத் தலங்களை அடிப்படையாகக் கொண்டு மோதல்கள் நிலவுகின்றன, பௌர்ணமி தினங்களில் அநுராதபுரம் ஸ்ரீ மகா போதியையும் கடந்து யாழ்ப்பாணத்திற்கு வருகின்றனர். இங்கு வழிபட வருவதில் வெறுப்புணர்வே, இனவாதமே இருக்கின்றது. இல்லையென்றால் எதற்கு இந்தளவு விகாரைகளையும் கடந்து யாழ்ப்பாணத்திற்கு வழிபட வர வேண்டும்" என்று தையிட்டி திஸ்ஸ விகாரை சர்ச்சையை மையமாக வைத்துக் கூறியிருந்தார். இதுதான் இன்று தென்னிலங்கை இன, மத வாதிகளை கொதிப்படைய வைத்துள்ளது.

ஜனாதிபதியின் இந்த உரையானது வடக்கில் வரலாற்று பௌத்த வணக்கஸ்தலங்களை வழிபட செல்லும் பௌத்த மக்கள் தொடர்பில் தவறான கண்ணோட்டத்தை வடக்கு தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் வகையிலும், வடக்கிற்கு வரும் பௌத்தர்கள் மீது வடக்கு மக்களுக்கு வெறுப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் அமைகின்றது. இதனால் வடக்கிற்கு யாத்திரை செல்லும் பௌத்தர்கள் இடையூறுகளுக்கு உள்ளாகும் அபாயமும் உள்ளது. ஜனாதிபதியின் உரையின் மூலம் வடக்கில் இருந்து இந்து ஆலயங்கள் பலவற்றை கடந்த கதிர்காமத்திற்கு வழிபாட்டுக்காக வரும் தமிழ் மக்கள் தொடர்பிலும் தெற்கு சிங்களவர்கள் மத்தியில் வெறுப்புணர்வையும் ஏற்படுத்தலாம். அத்துடன் தெற்கில் பல்வேறு கத்தோலிக்க தேவாலயங்களை கடந்து வடக்கிலுள்ள தேவாலயங்களுக்கு வழிப்பாட்டுக்கு செல்லும் கத்தோலிக்க மக்கள் மீதும் ஜனாதிபதியின் இந்த கருத்து பிரச்சினைகளை ஏற்படுத்தலாம். இதனால் ஜனாதிபதியின் இந்த கருத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த நாட்டில் பௌத்த, இந்து, இஸ்லாம் மற்றும் கத்தோலிக்கம் உள்ளிட்ட சகல மதக் குழுக்களுக்கு இடையிலும் அமைதியின்மையை ஏற்படுத்தலாம் என்றவாறாக தென்னிலங்கை பௌத்த, சிங்கள இனவாதிகளினால் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

அது மட்டுமன்றி இனங்களுக்கிடையே வெறுப்புணர்வையும் முரண்பாட்டையும் தோற்றுவிக்கும் வகையில் ஜனாதிபதி செயற்படுவதாக கூறி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கு எதிராக குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடொன்றும் செய்யப்பட்டுள்ளது. இதன்படி பதவிக்காலம் முடிவடைந்ததும் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமாரவை கைது செய்து, சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாய சட்டத்தின் கீழ் வழக்கு தொடருமாறு கோரி பிவித்துறு ஹெல உறுமயவின் இளைஞர் அணி செயலாளரான குமார ராஜரத்த என்பவரினாலேயே கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பௌத்த இனவாதிகளின் நோக்கத்தை ஜனாதிபதி அம்பலப்படுத்திவிட்டார் என்பதற்காக தென்னிலங்கை பௌத்த. சிங்கள பேரினவாதிகள் ஜனாதிபதி மீது கொதிப்பில் உள்ளதென்றால் தனது எளிமை, அரவணைப்பு, அன்பின் மூலம் யாழ்ப்பாண மக்களின் - வடக்குமக்களின் "ஜனநாயகன்" ஆக ஜனாதிபதி மாறிவிட்டதனால் வடக்கில் எதிர் காலத்தில் தமது அரசியல் இருப்பு, தமிழ் கட்சிகளின் அரசியல் எதிர்காலம் என்னவாகுமோ என்ற கலக்கத்தில் வடக்கு அரசியல் தரப்புக்கள் உள்ளன.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க நாட்டின் தலைவராக மட்டும் இல்லாமல் மக்களுடன் நெருங்கிப்பழகும் சாதாரண மனிதனாக, ஒரு ஜனநாயகனாக தன்னை நிரூபித்து வருகின்றார். அத்துடன் நாட்டை இதுவரையில் ஆட்சி புரிந்த ஜனாதிபதிகளில் ஒரு திடமான, துணிவான, நேர்மையான, ஒழுக்கமுள்ள, தன் குடும்பத்தை பேரீக்காத, தனது உறவினர்கள், நண்பர்களுக்கு மக்களின் வரிப்பணத்தை செலவளிக்காத அல்லது சூறையாட அனுமதிக்காத, மக்களுடன் மக்களாக தோளில் கைபோட்டு அன்பு பாராட்டும் ஒரு தலைவராக இருப்பதே தமிழ் மக்களை அநுரகுமார திசாநாயக்கவின் பக்கம் திருப்பி வருவதே தமிழ் அரசியல்வாதிகளுக்கு நெருக்கடியை, கலக்கத்தை கொடுத்துள்ளது.

2009 ஆம் ஆண்டின் பின்னர் தமிழினம் தமக்கான தலைமையை இழந்து விட்டது. தற்போதைய தமிழ் அரசியல்வாதிகளோ எந்நேரமும் எதிர்ப்பரசியல் செய்தும், தமக்குளேயே வெட்டுக் குத்துக்களில், குழிபறிப்புகளில் ஈடுபடும், தரம் கெட்ட கேவலமான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்ளும் அரசியல்வாதிகளாகவும் மக்களிடம் இருந்து விலகிச் சென்று கொண்டிருக்கும் நிலையில் தமிழ் மக்கள் தமக்கான மாற்றுத் தலைமை ஒன்றை எதிர்பார்க்கத் தொடங்கிவிட்டனர், அதன் விளைவாகவே மக்கள் தம்மை அறியாமலேயே அநுரகுமார திசாநாயக்கவின் பக்கம் ஈர்க்கப் பட்டு பாராளுமன்றத்தேர்தலில் அவரின் தேசிய மக்கள் சக்திக்கு வடக்கு மாகாணத்தில் யாழ் மாவட்டத்தில் உள்ள 6 பாராளுமன்ற ஆசனங்களில் 3 ஆசனங்களையும் வன்னி மாவட்டத்திலுள்ள 6 ஆசனங்களில் 2 ஆசனங்களையும் வழங்கி பேராதரவளித்தனர்.

தமிழர் தாயகமான கிழக்கு மாகாணம் சிங்கள, முஸ்லிம் அரசியல்கட்சிகளிடமும் வடக்கு மாகாணம் தேசிய மக்கள் சக்தியிடமும் பறிபோகக் கூடிய ஆபத்து இருந்தும் தமிழர்களுக்குத் தலைமையே இல்லாமல் போகக்கூடிய நிலைமை இருந்தும் இதன் பாரதூரமான ஆபத்து புரியாமல் தமிழ்கட்சிகள் செயற்பட்டு வருகின்றன. தமிழ் கட்சிகள் முதலில் மக்கள் மனதில் இடம் பிடிக்க வேண்டும். மக்களுடன் இறங்கி வந்து பழக வேண்டும், ஆனால் நாட்டின் ஜனாதிபதியை இலகுவாக சந்திக்கும் வாய்ப்பு தமிழ் மக்களுக்கு இருந்தும் தமது தமிழ் அரசியல் தலைமைகளை அவர்களினால் இலகுவில் நெருங்க முடியாதுள்ளது. தமது துன்ப, துயரங்களை, விருப்பு. வெறுப்புக்களை, தேவைகளை தமது தலைமைகளுக்கு வெளிப்படுத்த முடியாதுள்ளது.


இன்றைய தலைமுறையினர் முன்னையவர்கள் போல் இல்லாமல் புதிய கண்ணோட்டத்தில் மக்களுடன் சகஜமாகப் பழகும் ஒரு தலைவனை எதிர்பார்க்கிறார்கள். அந்தவகையில் தம்முடன் இறங்கி, நெருங்கி பழகும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் கைகளைப் பற்றி மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறார்கள். தோளில் கைபோட்டு படம் எடுக்கின்றார்கள், ஆண், பெண் வித்தியாசமின்றி செல்பி எடுக்க முண்டியடிக்கிறார்கள். தமது கவலைகளைகூறி கண்ணீர் வடிக்கின்றார்கள். அவரும் அரவணைத்து ஆறுதல் கூறுகின்றார். சிரித்த முகத்துடன் அத்தனைபேருடனும் செல்பி எடுக்கின்றார். தாய், தந்தையரிடமிருந்து குழந்தைகளை வாங்கி கொஞ்சி மகிழ்கின்றார். தனது கவர்ச்சிகரமான் பேச்சால் தமிழ் மக்களைக் கட்டிப் போடுகின்றார்.

ஆனால் இவ்வாறான ஜனாதிபதியின் வடக்கிற்கான - யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தின்போது ஏற்பாடு செய்யப்பட்டு ஜனாதிபதியினால் அழைப்பு விடுக்கப்பட்ட கூட்டங்களை, தமிழ் கட்சிகள் புறக்கணிக்கின்றன. அவரின் அழைப்பை நிராகரிப்பதாக அறிக்கை விடுகின்றன. பின்னர் தம்மை ஜனாதிபதி கூட்டங்களுக்கு அழைக்கவில்லை என ஒப்பாரி வைக்கின்றன. அந்தளவுக்கு தமிழ் கட்சிகள் குழம்பிப் போயுள்ளன.

"நாடும் மக்களும் அநுரவோடு" என்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் கோஷம் தென்னிலங்கையில் மட்டுமல்ல தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் நிதர்சனமாகி வருகின்றது ஜனாதிபதி அநுரகுமாரவுடனான மக்களின் நெருக்கம் தனிப்பட்ட ஈர்ப்பு அல்ல. இது ஒரு அரசியல் மாற்றம். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அரசாங்கத்தினால் தமிழ் மக்களின் முக்கிய பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருந்தும் பௌத்த, சிங்கள பேரினவாதம் கட்டுப்படுத்தப்படாமல் இருந்தும் கூட தமிழ் மக்கள், வடக்குத் தமிழ் மக்கள் முண்டியடித்துக் கொண்டு ஜனாதிபதியை வரவேற்கின்றார்கள் என்றால் எம்மில் என்ன தவறு உள்ளதென்பது தொடர்பில் தமிழ் கட்சிகள் சுயபரிசோதனை செய்ய வேண்டும். அதற்கான இறுதி வாய்ப்பாகவே ஜனாதிபதியின் அண்மைய வடக்கு மாகாணத்திற்கான விஜயம் அமைந்துள்ளது. இதிலிருந்தும் தமிழ் கட்சிகள் பாடம் கற்கத் தவறினால் ராஜபக்சக்களின் ஆட்சிக்காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் காணாமல் போனதுபோல் அநுரகுமாரவின் ஆட்சியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் கட்சிகள் காணாமல்போகும். தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கும் பறிபோகும்.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும் 1179

## சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலயம்

### குப்பிளான், யாழ்ப்பாணம்

சொக்கவளவு சோதிவிநாயகர்மீது நம்பிக்கைவைத்து, மேலும் பல்வேறு பணிகளை இச்சபையினர் முன்னெடுத்துள்ளனர். இவர்கள் எண்ணத்தில் மேலும் பல திருப்பணிகளை ஆற்றவேண்டும் என்ற ஆர்வம் ஏற்றபட்டது. தென்னங்கிற்றுக்கூரையோடு காட்சியளித்த இவ்வாலயத்தைக் கற்கோவிலாக மாற்றும் எண்ணம் ஏற்பட்டபொழுது, ஆலயத் திருப்பணிகள் சிறப்புறத்தொடரப் பலர் முன்வந்தனர். ஆலயத்தின் கருவறை, அர்த்தமண்டபம் ஆகியன ஆசிரியரும் வைத்தியருமான திரு. சுப்பையா அவர்கள் அளித்த நிதி உதவியினால் பொழிகற்களால் கட்டியெழுப்பப்பட்டது. திரு.சுவாமிநாதர் சுப்பையா அவர்களால் ஆலயத்தின் திருமஞ்சனக் கிணறு அமைக்கப்பட்டது. திரு. வைத்திலிங்கம் பொன்னம்பலம் அவர்களால் பிள்ளையாரின் எழுந்தருளி மூர்த்தி செய்து கொடுக்கப்பட்டது.

ஆரம்பகால ஈழவரலாற்றிலே எந்தத்துறையை எடுத்தாலும் அங்கு பெண்களுடைய பங்களிப்பு மிக அருகியதாகவும், அவ்வாறு பணியாற்றிய பெண்களுடைய பணிகள் சுட்டப்படாமையும் வரலாற்றின் பின்னடைவாகக் காணப்படுகின்றது. சமுதாயக்கட்டுப்பாடுகளின் பிடியிலிருந்து மீண்டு, சமூகப்பணியாற்றவரும் பெண்ணகளும் சிலராகவே காணப்பட்டுள்ளனர். குறிப்பாக, ஆலயத் திருப்பணிவேலைகளில் பெண்கள் விரும்பினாலும் அக்கால சமுதாயநிலை, அவர்கள் ஈடுபாட்டுணர்வைத் தடை செய்துள்ளது. ஆயினும் இவற்றையெல்லாம் மீறி, சில பெண்கள் ஆலயவளர்ச்சியில் அரும்பணியாற்றியுள்ளனர். குப்பிளான் கிராமம் அறிவும் அன்பும் கொண்ட பெருமக்களையுடைய காரணத்தினால்போலும், குப்பிளான் சொக்கவளவு சோதிவிநாயகா ஆலயத் திருப்பணிகளிலும் பெண்மணியொருவர் ஈடுபட்டுப் பணியாற்றியுள்ளார்.

ஆரம்பகால தர்மகர்த்தாவாக விளங்கிய ஆசிரியர் வைத்தியர் சுப்பையா அவர்களுடைய அன்னையாராகிய அம்மையார் சின்னாச்சிப்பிள்ளை அவர்களே, குப்பிளான் சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலயத் திருப்பணிகளில் பணியாற்றிய பெண்மணியாவார். இவர், தர்மகர்த்தாவாக விளங்கிய ஆசிரியர் வைத்தியர், சுப்பையா அவர்கள் இறைவனடி சேர்ந்தபின் அவர் விட்டுச்சென்ற பணிகளை, தர்மகர்த்தா சபையுடன் இணைந்து செயற்படுத்த உதவியுள்ளார்.

இவர்களின் அயரா முயற்சியினாலும், சோதிவிநாயகப் பெருமானின் அருளாலும் ஆலயம் ஆகம முறைக்கு மாற்றம்பெற்ற பின்னர், பெருஞ்சாந்தி எனப்படும் குடமுழுக்குப் பெருவிழா 1940 ஆம் ஆண்டு, சிறப்பாக நிறைவேறியது. இப்பெருவிழா ஆலய அர்ச்சகராக விளங்கிய பொன்னையா சுந்தரசர்மா அவர்கள் தலைமையில், ஊரெழுவைச் சேர்ந்த சிவஸ்ரீ ச. சோமசுந்தரக்குருக்களால் சிறப்பாக நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறான மாற்றங்களைத் தொடர்ந்து இதே ஆண்டில் தர்மகர்த்தாசபை மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டு பரிபாலனசபையாக மாற்றம்பெற்றது. இப்பரிபாலனசபையின் தலைவராக வைத்திலிங்கம் தம்பிராசா அவர்களும், செயலாளராக அம்பலவாணர் சம்பந்தர் அவர்களும் பெரும்பணியாற்றியுள்ளனர் ஆலயவளர்ச்சி மற்றும் பரிபாலனம் இவற்றைக் கருத்தில்கொண்டு தர்மகர்தாசபை, பரிபாலன சபை என்பன நிறுவப்பட்டாலும், அந்தந்த ஊர்களிலே எழுந்தருளியுள்ள தெய்வங்களின் அருளினால், தாம் அடைந்த பேறுகளை எண்ணி ஊரவர்கள் அனைவரும் ஆலயவளர்ச்சியில் பங்குகொண்டு உழைப்பதும், பணியாற்றுவதும் தொன்றுதொட்டு அனைத்து இந்து ஆலயங்களிலும் காணப்படும் உயர்நிலையாகக் காணப்படுகின்றது. சொக்கவளவு சோதிவிநாயகப்பெருமான் ஆலயவளர்ச்சியிலும், இவ்வூர் மக்களின் பங்களிப்பு அளவிடற்கரியது.

இவ்வாலயதர்மகர்த்தாக்களின் அயராத முயற்சியினால் இவர்களது உற்றார் உறவினர்களும் ஆலயத்திருப்பணிகளிலும், திருவிழாக்களிலும் பங்குகொண்டு, இவ்வாலய வளர்ச்சிக்கு உதவியுள்ளனர். குப்பிளான் கிராமத்தின் அயல் கிராமங்களாக விளங்கிய ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், ஊரங்குணை, கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வறுத்தலை விளான் ஆகிய கிராமங்களில் வாழ்ந்தவர்களும் சொக்கவளவு சோதிவிநாயகப்பெருமான் ஆலயத்தோடு தொடர்புடையவர்களாகக் காணப்பட்டுள்ளனர்.

இதன்வெளிப்பாடாக, விசேட உபயங்கள், அலங்காரத்திருவிழாக்கள் ஆகியன நடைபெறும். இவ்வாலயத்தின் அர்ச்சகாகளாக அயல்கிராமங்களைச் சோந்தவர்களும் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தையிட்டியைச் சேர்ந்த விஸ்வநாத ஐயர் மற்றும், சுப்ரமணிய ஐயர் ஆகியோர் 1947 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டுவரை சொக்கவளவு சோதிவிநாயகப்பெருமான் ஆலயத்தின் பூசை கருமங்களில்ஞ் உதவியாக இருந்துள்ளனர்.

1953 ஆம் ஆண்டிலிருந்து 1956 ஆம் ஆண்டுவரை தையிட்டியைச் சேர்ந்த பொன்னையர் சிவசாமிக்குருக்கள் என்பவர், இவ்வாலயத்தின் பூசகராகக் கடமையாற்றியுள்ளார். இக்காலப்பகுதியில் 1940 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து இவ்வாலய பூசகராக இருந்த அர்ச்சகர் சுந்தரசர்மா அவர்கள் இறைவனடி சேர்ந்தபின்னர், இவரது துணைவியார் திருமதி. அ. சுந்தரசர்மா மற்றும் இவர்களின் மகனாகிய பிரேமசர்மா ஆகியோரின் மேற்பார்வையில் விஸ்வநாதஐயர், சுப்ரமணிஐயர் ஆகியோர் சொக்கவளவு சோதிவிநாயகப்பெருமான் ஆலய பூசகர்களாக நியமிக்கப்பட்டனர்.

**வளரும்..**

20/20 CA$H RU$$H

- Western Union- Money Transfer, Payout, Bill Payments
- Buying Used Gold-Top Dollar paid
- Pawning
- Small Loans

நகைகள் திருத்தம் செய்து கொடுக்கப்படும்

இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ள இலக்கங்களை கொண்ட வாடிக்கையாளர்கள் தயவுசெய்து எம்முடன் தொடர்பு கொண்டு அடவுகளை மீட்கவும்.
Kindly redeem the following pawn ticket number immediately
Cr551, Cr650, #5799, Cr166,Cr671, Cr163, Cr277, Cr594, Cr608, Cr585, Cr588, #1955,#1386,Cr582, Cr663, Cr554, #5718

இலங்கையில் உள்ள உங்கள் உறவுகளுடன் குறைந்த கட்டணத்தில் தொடர்பு கொள்வதற்கான Pre-paid Top up ஐ எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு :
Tel : 416-291-CASH (2274)
Fax : 416-291-2276
E-mail : 2020cashrusshcorp@gmail.com | www.2020cashrussh.ca



4049 Sheppard Ave., East Scarborough. ON. M1S 1S8



# நான்கு வருடங்களுக்கு முன்னர் கனடா வாழ் லோகேந்திரலிங்கம், ஐரோப்பா வாழ் ஒலிபரப்பாளர் எஸ்.கே. ராஜனோடு நடத்திய நேர்காணல்!

## அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீட் அவர்களின் "வானலைகளில் ஒரு வழிப்போக்கன்" நூல். 12-08-2022 அன்று கனடாவில் வெளியிடபெற்ற தினத்திற்கு சில நாட்கள் முன்பாக...

உலகெங்கும் உள்ள தமிழ் பேசும் மக்களால் விரும்பப்பெறும் அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீட் எழுதிய "வானலைகளில் ஒரு வழிப்போக்கன்" எதிர்வரும் 12-08-2022 அன்று வெள்ளிக்கிழமை கனடாவில் வெளியிடப் பெறுகிறது.

அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற வட அமெரிக்க தமிழர் சங்கங்களின் சம்மேளனம் நடத்திய "பெட்னா" விழாவில் முதற் தடவையாக வெளியிடப் பெற்ற இந்த நூல், கனடாவைத் தொடர்ந்து உலகின் பல நாடுகளிலும் வெளியிடப் பெறும்.

நூல் வெளியிடப்பெறும் நிகழ்வில் தொகுப்பாளராக விளங்கவுள்ள எஸ்.கே. ராஜன் அவர்கள் லண்டன் ஐபிசி தமிழ் தொலைக்காட்சி நிலையத்தில் பணியாற்றி வருகின்றார்.

**அவரைச் சந்தித்து உரையாடினோம்: அவர் சொல்கிறார்...**

இலங்கை வானொலியின் தொடக்கம், வானொலியின் ஆளுமையாளர்கள், அவர்களின் ஒலிபரப்புத் துறைப் பணிகள் என, நாம் அறிந்திராத பல தகவல்கள் இந்த நூலில் உள்ளன.

ஒலிபரப்புத்துறையில் ஈடுபட்டுள்ள இன்றைய இளைய தலைமுறையினருக்கு மட்டும் அல்ல நாளைய புதிய தலைமுறைக்கும் உகந்த ஒரு நூல்.

**லோகேந்திரலிங்கம் அவரிடம் பகிர்ந்த முதற் கேள்வி**

"யாழ்ப்பாணத்தில் ஒரு விளம்பர ஒலிபரப்பாளராகப் பயணத்தைத் தொடங்கி, தமிழ்நாட்டுத் தமிழர்களையும் வான்அலைகள் ஊடாக இணைத்துக் கொள்ளும் "இலங்கை வானொலியோடு தங்களை இணைத்துக் கொண்டீர்கள். அந்தப் பயணம் பற்றிச் சொல்லுங்களேன்.

**எஸ்.கே. ராஜன்**

"பாடசாலையில் மாணவனாக இருக்கும் பொழுதே ஒலி வாங்கியுடன் உறவாடல் ஏற்பட்டது. கலை விழாக்கள், ஆலயத் திரு விழாக்களில் ஒலி வாங்கியில் அறிவிப்புகளை மேற்கொண்டேன்.

பின்னர் வட இலங்கையில் வாகன விளம்பர ஒலிபரப்பின் முன்னோடியான சி.சு. புனிதலிங்கன் அவர்களின் "மக்கள் குரல்" விளம்பர சேவையில் சேர்ந்தேன்.

யாழ்.நவீன சந்தையில் "மணிக்குரல்" விளம்பரசேவை ஒலிபரப்பாகியதை அடுத்து "மக்கள் குரல்" விளம்பரசேவை இயங்கியது.

அதனை அடுத்து "விக்ரர் அன்ட் சன்" விளம்பரசேவை ஒலிபரப்பானது. நானும், மணிக்குரல் மேஜர் சண்ணும் பணியாற்றினோம்.

யாழ் பேருந்து நிலையத்தில் பெஸ்ரோன் ஒலிபரப்பைத் (1978) தொடங்கினோம். பல அறிவிப்பாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்தேன்.


1982 தொடக்கம் , கொழும்பில் வாழ்க்கை தொடர்ந்தது. 1983 டிசம்பரில் இலங்கை வானொலியில் பணியாற்ற. வாய்ப்புகள் கிடைத்தன.

1983 ஜுலை கலவரம், கொழும்பு வாழ்க்கையில் வெறுப்பை ஏற்படுத்திய நிலையில் 1984ம் ஆண்டில் புலம் பெயர்ந்து ஃபிரான்ஸ் நாட்டில் அடைக்கலம் பெற்றேன்.

1988ஆம் ஆண்டு "தமிழமுதம்" என வாரத்தில் ஒரு மணி நேரம் வானொலி ஒலிபரப்பை நடத்தி வந்தேன்.

1997ஆம் ஆண்டு லண்டனில் நாடகப் பேரசான் ஏ.சி.தாசீசியஸ் அவர்கள் ஐபிசி தமிழ் வானொலியைத் தொடங்கும் பொழுது அடியேனுக்கும் அழைப்பு விடுத்து இணைத்துக்கொண்டார்.

ஐரோப்பாவில் வானொலிக் கலைப்பயணம் வெள்ளி விழாவைக் கடந்து செல்கின்றது.




**லோகேந்திரலிங்கம் அடுத்த கேள்வியுடன் தொடர்கின்றார்**

"வானொலிக்கலை தங்களை ஈர்த்தது எப்படி? காரணமாக இருந்தவர்கள் யார்?

**எஸ்.கே. ராஜன்**

அறிவிப்பாளர்களின் குரல்கள் தான் என்னை வானொலியின் பக்கம் ஈர்த்தன.

எஸ்.பி. மயில்வாகனன், எஸ்.கே. பரராஜசிங்கம், ராஜகுரு சேனாதிபதி கனகரட்ணம், பி.எச். அப்துல் ஹமீத், ராஜேஸ்வரி சண்முகம், நடராஜ சிவம், ஜோக்கிம் பெர்னாண்டோ, விமல் சொக்கநாதன், சரா இம்மானுவேல், கே.எஸ். ராஜா, கோகிலா சிவராஜா, புவனலோஜனி போன்ற பல அறிவிப்பாளர்களின் குரல்களும், வி.ஏ. கபூர், எஸ். புண்ணியமூர்த்தி, சுந்தரலிங்கம், சற்சொரூபவதிநாதன், வி.பி. தியாகராஜா, என். சிவராஜா, நடேச சர்மா, சில்வஸ்ரர் பாலசுப்ரமணியம், வி.என். மதி அழகன் போன்ற செய்தி வாசிப்பாளர்களின் குரல்களும், வானொலிக் கலை ஈடுபாட்டுக்குத் தூண்டுதலாக அமைந்தன.

**லோகேந்திரலிங்கம் - மூன்றாவது கேள்வியாக:**

வானொலித் துறையில் வெறுமனே செய்திகள் மாத்திரம் அடங்குவதில்லைதானே? கலை - இலக்கியம் தொடர்பான விடயங்களும் இடம்பெறுகின்றன. தமிழ்ப் படைப்பாளிகள் மற்றும் கவிஞர்களோடு எவ்வாறான தொடர்பைப் பேணி வந்தீர்கள்?

**எஸ்.கே. ராஜன்**

ஈழத்துக் எழுத்தாளர்கள் கவிஞர்கள் மற்றும் கலைஞர்களுடன் எனது தொடர்பாடல் மிக நீண்டது. வானொலி, மேடை, திரைப்படம், தொலைக்காட்சிக் கலைஞர்கள் என வலம் வருவோருடன் தொடர்புகள் கொண்டேன்.


கலைப்பெருமகன் ஏ. ரகுநாதன் போன்ற மூத்தவர்கள் முதல், இன்றைய இளைய தலைமுறையினர் வரை கலைஞர்கள் தொடர்பு நிறைவாகவே உள்ளது.

இலக்கியத் துறை சார்ந்தவர்களும் அவ்வாறே.

முதுபெரும் எழுத்தாளர் எஸ். அகஸ்தியர் முதல், இன்றைய இளைய தலைமுறையினர் வரை தொடர்புகள் நீண்டு செல்கின்றன".

**தொடர்ந்து லோகேந்திரலிங்கம்:**

கனடா பயணத்தில் எவ்வாறான நிகழ்ச்சிகளில் பங்கெடுக்க உள்ளீர்கள்?



**எஸ்.கே. ராஜன்**

"தமிழோசை - சினி மீடியா சிறிகாந்தா அவர்களின் அழைப்பு.

அவர் நடத்தும் கோடை கொண்டாட்டம் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வருகை தந்திருக்கின்றேன்.

2020ல் கனடாவுக்கு வருகைதந்த பொழுதிலும், சிறிகாந்தா அவர்களின் நிகழ்ச்சியிலேதான் பங்கேற்றேன்.

**லோகேந்திரலிங்கம்:**

அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீத் அவர்களுடன் எவ்வாறு தொடர்பு ஏற்பட்டது?

**எஸ்.கே. ராஜன்**

"எனது முதல் மரியாதைக்குரிய மூத்த ஒலிபரப்பாளர், அன்புச் சகோதரர் பி.எச். அப்துல் ஹமீத் அவர்களுடன் தொடர்பு நான்கு தசாப்தங்களுக்கு மேலானது.

அவர், ஒலிபரப்புக் கலையின் பல்கலைக் கழகம்.

அங்கே அவரிடத்தில் நான் ஒரு மாணவனாக, ஒலிபரப்புக் கலை நுணுக்கங்களைத் தொடர்ந்து கற்று வருகின்றேன்.

அவரை முதன் முதலில் கலை நிகழ்ச்சி நடத்த பரிஸ் நகருக்கு 1988ஆம் ஆண்டு அழைத்தேன். அடுத்தடுத்த ஆண்டுகளில், கலைக்குழுவாகவே ஐரோப்பிய நாடுகளுக்கான பயணங்கள் அமைந்தன.

31.07.2004ல் லண்டன் மாநகரில் அவருக்கு ஒரு பாராட்டு விழாவை மிகப் பிரமாண்டமாக நடத்துவதற்கு வாய்ப்புக் கிடைத்தது.

நாடகர் ஏடகர் ஊடகர் ஏ.சி.தாசீசியஸ் அவர்கள் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது. இவ்வாறு எமது கலைப்பயணம் தொடர்கின்றது"

எஸ்.கே. ராஜன் அவர்களுக்கு வாழ்த்துகளைக் கூறி அவரை வழியனுப்பி வைத்தோம்.

**அன்புடன் லோகேந்திரலிங்கம்**

**நன்றி: "உலகப் பயணி" தமிழ்நாடு அருணகிரி**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் மோட்டார் சைக்கிள் வீதியில் வேகமாக வந்ததால் நிலை குலைந்து விழுந்த முதியவர் பலி!

பு. கஜிந்தன்

வீதியில் மோட்டார் சைக்கிள் வேகமாக வந்ததால் நிலைகுலைந்து கீழே விழுந்த முதியவர் ஒருவர் 21ம் திகதி புதன்கிழமை அன்றையதினம் உயிரிழந்துள்ளார். தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை பகுதியை சேர்ந்த கதிரன் ஐயாத்துரை (வயது 73) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், இவர் கடந்த 19ஆம் திகதி வீட்டிலிருந்து புறப்பட்டு, துவிச்சக்கர வண்டியுடன் வீதிக்குள் நுழைய முயற்சித்தார். இதன்போது காங்கேசன்துறை பக்கத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிள் ஒன்று வேகமாக வந்தபோது அவர் நிலைதடுமாறி கீழே விழுந்துள்ளார்.

அவர் உடனேயே அந்த இடத்தில் மயங்கிய நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி 21ம் திகதி அன்றையதினம் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.



# வடக்கில் முதலிட முதலீட்டாளர்கள் ஆர்வம் என்கிறார் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன்!



முதலீட்டாளர்கள் வடக்கு மாகாணத்தில் முதலீடு செய்வதற்கு ஆர்வமாக உள்ள நிலையில், அதற்கான அடிப்படை உட்கட்டுமானங்களை மேம்படுத்தி, முதலீட்டுக்கு ஏற்ற சூழலை உருவாக்க வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

நிதி அமைச்சின் கீழான தேசிய திட்டமிடல் திணைக்களம், தேசிய வரவு - செலவுத் திட்டத் திணைக்களம், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ஆகியவற்றின் பணிப்பாளர் நாயகங்கள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழான உலக வங்கியின் திட்டங்களுக்கான பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட உயர்மட்டக் குழுவினருக்கும், வடக்கு மாகாண ஆளுநர் தலைமையிலான அதிகாரிகளுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல், ஆளுநர் செயலகத்தில் 19ம் திகதி அன்று திங்கட்கிழமை (19.01.2026) மாலை நடைபெற்றது.

நிதி அமைச்சின் உயர் அதிகாரிகள் குழுவினர் வடக்கு மாகாணத்துக்கு உத்தியோகபூர்வமாக மேற்கொண்ட முதலாவது விஜயம் இதுவாகும்.

இக்கலந்துரையாடலில் உரையாற்றிய ஆளுநர் தெரிவித்ததாவது, போர் முடிவடைந்து 16 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும், வடக்கு மாகாணம் மீளக்கட்டியெழுப்பப்படுவதில் பல சவால்களை எதிர்கொண்டுள்ளது. பிரதான வீதிகள் புனரமைக்கப்பட்டிருந்தாலும், கிராமப்புற வீதிகள் மற்றும் தீவகப் பிரதேசங்களுக்கான போக்குவரத்து வசதிகள் மிகவும் பின்தங்கியுள்ளன. கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான நீண்ட பயண நேரம் சுற்றுலாவிகளுக்குச் சவாலாக உள்ளது.

எனினும், இந்தியாவுடனான நேரடி வான் மற்றும் கடல்வழித் தொடர்புகள் சுற்றுலாவிகளின் வருகையை அதிகரிக்கச் செய்துள்ளது. எனவே, எதிர்காலத்தில் அதிகரிக்கவுள்ள சுற்றுலாவிகளைக் கருத்தில் கொண்டும், எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள முதலீட்டாளர் மாநாட்டைக் கருத்தில் கொண்டும் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும்.

எமது மாகாணத்தின் மூலப்பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டு, மீண்டும் முடிவுப் பொருட்களாக இங்கேயே விற்பனைக்கு வரும் நிலை மாற்றப்பட வேண்டும். இங்கேயே அவற்றைப் பெறுமதிசேர் பொருட்களாக மாற்றுவதற்குரிய பொறிமுறைகள் அவசியம்.

உலக வங்கியின் "புத்துயிர்" (REVIVE) திட்டத்தின் முதல் கட்டத்தில் யாழ். மாவட்டம் மட்டுமே உள்வாங்கப்பட்டுள்ளது. ஆனால், வடக்கின் ஏனைய நான்கு மாவட்டங்களும் அபிவிருத்தியில் பின்தங்கியுள்ளன. எனவே, ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கி எமது பொருளாதார மேம்பாட்டை உறுதிப்படுத்த நாம் விரும்புகின்றோம், என ஆளுநர் வலியுறுத்தினார்.

இதன்போது மாவட்டச் செயலாளர்களால் பின்வரும் முக்கிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன:

முல்லைத்தீவு: கொக்கிளாய் பாலம் அமைத்தல்.
கிளிநொச்சி: நீர் விநியோகத் திட்டம் மற்றும் பூநகரி கௌதாரிமுனைச் சுற்றுலா வீதிப் புனரமைப்பு.
மன்னார்: வீதிப் புனரமைப்பு மற்றும் மன்னார் தீவின் வடிகாலமைப்பு மேம்பாடு.
வவுனியா: வடக்கின் நுழைவாயிலான வவுனியாவின் வன்னேரிக்குளம் சுற்றுலாத் திட்டத்தை உள்வாங்குதல்.
யாழ்ப்பாணம்: தெரிவு செய்யப்பட்ட திட்டங்களை விரைவுபடுத்தல்.

இதற்குப் பதிலளித்த நிதி அமைச்சின் உயர் அதிகாரிகள், "வடக்கு மாகாணத்திலிருந்து நியாயப்பாடுகளுடன் கூடிய சிறந்த திட்டங்கள் முன்வைக்கப்படும் பட்சத்தில், முன்னுரிமை அடிப்படையில் உலக வங்கித் திட்டங்களை மாற்றியமைக்க முடியும். எனினும், இவை கடன் நிதிகள் என்பதால், முதலீட்டுக்குரிய நற்பேறுகள் கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும். தேவைப்பாடுகளை சரியாக அடையாளம் கண்டு மிகச் சிறந்த திட்டங்களை முன்வைக்கும்போது அரசாங்கத்தால் கூட நிதி வழங்க முடியும், எனக் குறிப்பிட்டனர்.

மேலும், கிராமிய மற்றும் நகர்ப்புறங்களை இணைக்கும் "ரூபன்" (RURBAN) திட்டம் மற்றும் விவசாயத் துறைசார் திட்டமிடல்கள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. கடந்த கால வெளிநாட்டு நிதித் திட்டங்களின் அனுபவங்களைக் கொண்டு, இனிவரும் திட்டங்கள் மாகாணத் தேவைகளைச் சரியாக அடையாளப்படுத்தி முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இக்கலந்துரையாடலில் நிதி அமைச்சின் பணிப்பாளர் நாயகங்களான இந்திக பிரேமரத்ன (தேசிய திட்டமிடல்), ஜூட் நிலுக்ஷ (தேசிய வரவு-செலவு), சமந்த பண்டார (வெளிநாட்டு வளங்கள்) மற்றும் வடக்கு மாகாணப் பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், ஆளுநரின் ஆலோசனைக் குழுவின் தலைவர் கலாநிதி அகிலன் கதிர்காமர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.



# இரணைமடு குளமும் அதை சார்ந்த அரசியலும்! அந்த நீர்ப்பாசனக் குளத்தின் நீர் யாழ் மண்ணுக்குத் தேவையா?

**- ஒரு விரிவான ஓர் பார்வை -**



இரணைமடு குளமும் அது சம்பந்தமான அரசியலும் அதன் பின்னணியும் என்ன? அதனுடைய வாத பிரதிவாதங்கள் என்பன அடிக்கடி பேசு பொருளாக மாறுகின்றன. இரணைமடு குளம் நீரினை யாழ்ப்பாண மக்கள் பயன்பாட்டிற்கு பகிர்ந்தளிக்க வேண்டும். இக்குள நீர் வீணாக கடலிற்குள் சென்றடைகிறது. என்று அதனை சூழ்ந்துள்ள அரசியல் தடுத்து நிறுத்துகின்ற நடவடிக்கைகள் மற்றும் நீரினை வழங்க வேண்டும் என்ற துறை சார் வல்லுனர்களுடைய வாதங்கள், புத்திஜீவிகளுடைய கருத்துக்கள் என்று அனுதினமும் இரணைமடுக்குளம் வான்கதவு திறந்த உடனேயே ஆரம்பிக்கின்றன. இதனை சார்ந்து இதனை சுற்றி இருக்கின்ற அரசியல் மற்றும் நீரினை மக்கள் பயன்பாட்டிற்கு வழங்க வேண்டுமா? இல்லையா? என்பது பற்றி இதனூடாக ஒரு விரிவான விளக்கத்தை பார்க்கலாம்.

இரணைமடு குளம் என்பது வட மாகாணத்தில், கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள இலங்கையின் முக்கியமான நீர்த்தேக்கங்களில் ஒன்றாகும். 1921ம் ஆண்டு இக் குளம் நிர்மாணிக்கப்பட்டது. இது யாழ்ப்பாணக் குடாநாட்டின் நீர்வள தேவைகளை பூர்த்தி செய்யும் முக்கிய ஆதாரமாக விளங்குகிறது. இந்தக் குளம் பெரும்பாலும் விவசாய தேவைகளுக்காக, குறிப்பாக நெல் சாகுபடிக்கான பாசன நீரை வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இதன் மூலம் வட பகுதியின் விவசாய பொருளாதாரம் நிலைநிறுத்தப்படுகிறது.

இரணைமடு குளம் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பகுதிகளின் விவசாயம், குடிநீர் வழங்கல் மற்றும் சுற்றுச் சூழல் சமநிலைக்கு மிகுந்த உதவியாக உள்ளது. மழைக்காலங்களில் சேகரிக்கப்படும் நீர், வறட்சிக் காலங்களில் விவசாயிகளுக்கும், மக்களுக்கும் பெறும் ஆதரவாக பயன்படுகிறது. இரணைமடு குளம் அளவுகளில் நீளம் சுமார் 10கி.மீ (6மைல்), அகலம் 1.6கி.மீ (1மைல்), ஆழம் சுமார் 34அடி (10மீ), சுற்றளவு சுமார் 26 கி.மீ பரப்பளவு சுமார் 19 சதுர கி.மீ களாக காணப்படுகிறது.

ஆகவே இரணைமடு நீரினை கடலோடு கலக்க விடாமல் யாழ்ப்பாண மக்களுக்கு வழங்க வேண்டுமா? என ஆராய்வதற்கு முதல் தற்போது 2025 டிசம்பர் பெய்த மழையால் நீரின் உயர அளவு 36 அடிகளாக உயர்த்தப்பட்டிருந்தது. 2025 இறுதியாக பெய்த மழையிலும் சரி ஒவ்வொரு வருடமும் பெய்கின்ற மழையிலும் சரி நீர் வீணாக வான் கதவினை திறப்பதன் மூலம் கடலுக்குள் சென்று கலக்கிறது. இதனை கண்ட சமூகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொறியியலாளர்கள், புத்திஜீவிகள், நீரினை வீணடிக்காமல் யாழ்ப்பாணத்திற்கு வழங்கலாம் என வாதங்களை முன்வைக்கிறார்கள். அதாவது யாழ்ப்பாணத்தில் நீர் மேலாண்மையில் என்னென்ன விடயங்களை, திட்டங்களை செய்திருக்கிறார்கள். தவறவிட்டிருக்கிறார்கள். என்பதை ஆராய்ந்து பார்த்த பிறகு நீரினை வழங்கலாமா இல்லையா என்று முடிவுக்கு வருவோம்.

கடந்த காலங்களை பார்ப்போமேயானால் யாழ்ப்பாணம் ஒரு குடா நாடு, நிலத்திற்கு அடியில் நீரினை சேமிக்க கூடிய ஒரு தேசம், அதனை விட பல கிணறுகள், மற்றும் ஆறுகள், குளங்கள், மழைகால நீர், குட்டைகள், சதுப்பு நிலங்கள் என்றெல்லாம் நீர்வளங்கள் காணப்பட்டது. நன்றாகவே நிலத்தடி நீர் அளவாக இருந்தது. தற்போதும் காணப்படுகிறது. ஆனால் காலப்போக்கில் மக்கள் பொது கேணிகளை புனரமைப்பு செய்தார்களா? குளங்களை பாராமரித்து பேணினார்களா? வருடந்தோறும் விழுகின்ற மழைநீரினை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தார்களா? பல குளங்கள் காணாமலே போய்விட்டன. பல கட்டடங்கள் அதற்கு மேல் எழுப்பப்பட்டிருக்கின்றன. புதிய குளங்களை அமைப்பதற்கான எந்தவித நீண்ட கால திட்டங்கள் இல்லை, நீர் மேலாண்மை மற்றும் நிலத்தடி நீர் சார்ந்த திட்டங்கள் சரியாக செயற்படவில்லை. நீர் மேலாண்மைத்துவத்தை பற்றி யாருமே சிந்திக்காமல் உள்ளனர். இதனால் குளங்கள் நிரம்பாமல் நீர் ஆறுகள் வழியாக கடலில் கலந்துவிடுகிறது. இது ஒரு பெரிய இயற்கை வள வீணாக்கம் ஆகும். அவற்றை முறையாக சேமிக்காமலும் சரியாக பயன்படுத்தாமலும் இருப்பதே இதற்கான முக்கிய காரணமாகும். இதன் விளைவாக மக்கள் இன்று இரணைமடு குளத்தின் நீரை கோரி குரல் எழுப்பு கின்றனர்.

தற்பொழுது யாழ்ப்பாணத்தில் மக்கள் சொந்தமாக வீட்டு கிணற்றில் உள்ள தண்ணீரினை அருந்துவதில்லை. இது ஒரு புதிய கலாச்சாரமாக மாறியிருக்கிறது. ஏன் இவ்வாறான நிலைமை ஏற்பட்டது. யாழ்ப்பாணப் பகுதியில் கிணறுகளில் நீர் இருந்தாலும் அது சில பிரதேசங்களில் உவர்நீராகவும் மாசடைந்ததாகவும் உள்ளது. மழைநீர் நிலத்தடியில் சென்று கிணறு நீரை புதுப்பிக்காததால் கடல் நீர் நிலத்தடியில் உப்பு, நைட்ரேட் கலந்து கிணறு நீர் குடிக்க ஏற்றதல்லாததாக மாறியுள்ளது. இதனால் மக்கள் கட்டாயமாக போத்தல் நீரை வாங்கி குடிக்கின்றனர்.



அத்துடன் சில இடங்களில் விவசாய இரசாயனங்கள் மற்றும் கழிவுநீரும் கிணறு நீரை பாதிக்கின்றன. இந்த காரணங்களால் கிணற்றில் நீர் இருந்தாலும் அதை குடிப்பது பாதுகாப்பற்றதாக மாறியுள்ளது.

யாழ்ப்பாணப் பகுதியில் நிலத்தடி நீர் உவர்நீராக மாறும் அபாயம் அதிகமாக உள்ளது. அதற்கு முக்கிய காரணம் மழைநீர் சேமிப்பு குறைவு. இந்த காரணங்களால் கிணற்றில் நீர் இருந்தாலும் அதை குடிப்பது பாதுகாப்பற்றதாக மாறியுள்ளது. அதனால் மக்கள் தற்போது விற்பனை செய்யப்படுகின்ற தண்ணீரினை வாங்கி குடிக்கின்றார்கள்.

விளக்கமாக கூற வேண்டும் என்றால் முன்பொரு காலத்தில் நம் மூதாதையர்கள், நம் வம்சவழியினர் அப்பு ஆச்சிகள் இக் கிணற்று நீரினையே அருந்தி அதிக வயது வரை ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள். என்பதை நாம் மறத்தல் கூடாது. ஆனால் தற்போது அவ்வாறில்லை, சிறு சிறு வயதிலேயே அதிக நோய்கள் ஏற்படுகிறது.

நீர் மாசுபாடு காரணமாக குறிப்பாக தற்போது அதிகமானோருக்கு சிறுநீரக செயலிழப் புக்கள், உயர் இரத்த அழுத்தம், சிறுநீர் தொற்று, வயிற்று நோய்கள், சரும நோய்கள் அதிகமாக உருவாகின்றன. அதிகமான மரணங்களும் பதிவாகின்றன. இவை மிக வருத்தத்திற்கு உரியதாகவே உள்ளது.

இரணைமடு நீரை கேட்பதற்கும், குடிநீரினை போத்தல்களில் வாங்கிக் குடிப்பதற்கும் முன், மக்கள் தங்களிடம் ஏற்கனவே உள்ள கிணற்று நீரை சரியாகப் பயன்படுத்த கற்றுக் கொள்ள வேண்டும். கிணற்று நீரை முறையாக சோதித்து, கொதிக்க வைத்து அல்லது வடிகட்டிகள் மூலம் சுத்திகரித்தால், அதையே பாதுகாப்பான குடிநீராக மாற்ற முடியும். தங்கள் வீட்டில் உள்ள கிணற்று நீரையே இவ்வாறு வடிகட்டி குடிநீராக பயன்படுத்தலாம். ஆனால் அவ்வாறு செய்யாமல் அருகில் அதே பிரதேசத்தில் சதி முடக்கில் இயங்கும் நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் உள்ள கிணற்றில் வடிகட்டி விற்கப்படும் நீரினை வாங்கி குடித்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் அதிகமான வடிகட்டி நிலையங்களும் உருவாகியுள்ளது. அது அவர்களின் கிணற்று நீர் போன்ற இன்னொரு கிணற்றின் நீரையே வடிகட்டுகிறார்கள்.

மேலும் மழை நீரை சேகரித்து கிணற்றில் சேர்ப்பதன் மூலம் நிலத்தடி நீர் மீண்டும் நிரம்பி, உப்பு கலப்பு குறையும். ஆனால் இன்றைய நிலைமையில் கிணறுகள் பராமரிப்பின்றி விடப்பட்டு, மழைநீர் சேமிக்கப்படாமல், இருக்கின்ற நீரையே பயன்படுத்தாமல், குடிநீரை வாங்கி குடிக்க எதிர்பார்க்கும் மனப்போக்கு அதிகரித்துள்ளது. இந்த நிலை மாற்றப் படாவிட்டால், நீர் பற்றாக்குறை இயற்கையால் அல்ல, மனித அலட்சியத்தால் தொடர்ந்தும் உருவாகும்.

தற்போது யாழ்ப்பாணத்தில் அதிகமாக படித்த சமூகம் இருந்தும், பல தொழிநுட்பங்கள் வளர்ந்தும் இயற்கை தருகின்ற மழை வீழ்ச்சியை சேகரிப்பதற்கு முடியாமல் இருக்கிறோம். யாழ்ப்பாணத்தை சேர்ந்த பல புத்திஜீவிகள் உலகத்தில் வெவ்வேறு பிரதேசத்தில் பல நீர்ப்பாசன பொறியியளாளர் திட்டங்களையும், அணை கட்டுமானங்கள் போன்ற அதற்குரிய திட்டங்களையும், கட்டுமானங்கள் சம்பந்தமாகவும் வேலை செய்கின்றனர். பல நீர் மேலாண்மைத்துவம் கற்ற புத்திஜீவிகள் காணப்படுகின்றர். ஆனால் யாழ்ப்பாணத்தில் எவ்வித நீர் மேலாண்மைத்துவ திட்டங்களும் இல்லை. ஆனால் தற்போது இரணைமடு குளம் நீர் தேவைபடுகிறது. பலருடைய கோரிக்கையாக மாறிவருகிறது.

யுத்த காலங்களில் கூட இரணைமடு குளம் வட பகுதி மக்களுக்கு உயிர் ஆதாரமாக விளங்கியது. அதாவது யுத்த காலங்களில் யுத்தம் முடிவடைந்து முள்ளிவாய்க்கால் ஊடாக வரும் போது இராணுவம் 50,000 தொடக்கம் 75,000 வரை மக்கள் தொகை வருவார்கள் என நினைத்து அரசாங்கம் முகாம்கள், உலர் உணவுப் பொருட்கள், மருத்துவம் உட்பட அவர்களுக்கு தேவையானவை ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனால் அங்கோ லட்சக் கணக்கான மக்கள் இடம் பெயர்ந்து வருகை தந்தவண்ணம் இருந்தார்கள். அவர்களையே ஆச்சரியத்தில் தள்ளியது. எப்படி இவர்கள் அங்கிருந்து வாழ்ந்தார்கள் என்று. இதற்கு காரணம் இரணைமடு குளம் ஆகும். வன்னி பெருநிலப்பரப்பு மூடப்பட்டு பொருளாதார இறுக்கங்கள் வந்த்த நிலையிலும் அங்கில்கு அரிசி உற்பத்தியிலும் விவசாய உற்பத்தியிலும் தன்னிறைவடையச்செய்தது இந்த இரணைமடு மாதா! இரணைமடு என்ற உயிர் ஆயிதமே மக்களை பசியிலிருந்தும் போராளிகளை பசியிலிருந்தும் விடுபட செய்து போராட்டம் வீரியம் கொள்ள காரணமாக இருந்தது.

ஆம் யுத்தம் தீவிரமடைந்த காலங்களில், வன்னி பகுதி மக்கள், போராளிகள் பெரும் குடிநீர் மற்றும் உணவு தட்டுப்பாட்டை எதிர்கொண்டனர். அந்த நேரத்தில் இரணைமடு குளம் வன்னி பகுதியின் முக்கியமான நீராதாரமாக இருந்தது.

யுத்தம் தீவிரமடைந்த காலங்களில் வன்னி மற்றும் முள்ளிவாய்க்கால் பகுதிகளில் வாழ்ந்த மக்கள், போராளிகள் உணவு, குடிநீர் ஆகிய அடிப்படைத் தேவைகளுக்கே பெரும் சிரமத்தை எதிர்கொண்டார்கள். அந்த கடினமான சூழலில் பசியை அடக்க கஞ்சி காய்ச்சி வழங்குவது முக்கிய மனிதாபிமான உதவியாக இருந்தது.

இறுதி போர்முனைகளில் உணவற்ற மக்களுக்கு ஒரு நேர கஞ்சியை காய்ச்சி குடிக்க கூடியதாக இருந்ததென்றால் அது இரணைமடுவாள் விளைந்த அரிசியினால் ஆகும்.

யுத்தகாலங்களில் இலங்கை அரசாங்கத்திற்கே அரிசி தட்டுப்பாடு நிலவியது அக் காலப்பகுதில், அரிசி வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நிலையில், பல பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டு ஓர் மூடிய இறுக்கமான வலயமாக கிளிநொச்சி, வன்னி நிலப்பரப்பு இருந்த போது இரணைமடு குளமே ஓர் நீர் ஆதாரமாக விளங்கியது. இவ்வாறு விவசாய உற்பத்தியிலும் தன்னிறைவு அடைந்தமைக்கான பிரதான காரணமும் யுத்த சூழலில் புதிய நீர்த்திட்டங்கள் அமைக்க முடியாத நிலை இருந்தபோதும், பழைய நீர்ப்பாசன அமைப் புக்களான இரணைமடுகுளமும் முள்ளிவாய்க்காலும் மக்களின் உயிர்வாழ்வை பாதுகாக்க முக்கிய பங்காற்றின.

தற்போது எந்தவித நீர் மேலாண்மைத் துவத்தையும் செய்யாமல், மழை நீரினை சேமிக்காமல், குளங்களை பராமரிக்காமல், நீர் வளங்களை பாதுகாப்பு செய்யாமல், எவ்வித திட்டங்களையும் செயற்படுத்தாமல் இருது விட்டு இரணைமடு குழத்தை யாழ்பாணத்துக்கு கேட்பது முறையா என மனச்சாட்சியுடன் சொல்லுங்கள்!

அவ்வாறு இரணைமடு குள நீரிணை ஒருவேளௌ யாழ்ப்பாண மக்களுக்கு வழங்கினால் என்ன நடக்கும்?

(தொடர்ச்சி 21 பக்கம்)

# இவ்வார ராசிபலன்

## 23-01-2026 வெள்ளி தொடக்கம் 29-01-2026 வியாழன் வரையும்




**மேஷம்:** பெண்களால் ஆதாயம் கிடைக்கும் வாரம். பொருளாதாரம் உயரும். நண்பகலில் நல்ல தகவல் வரும். தான தர்மங்கள் பலன் தரும். வழக்குகள் தள்ளிப்போகும். உற்சாகம் அதிகரிக்கும். உடல்பொலிவு கூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். திருமணம் கைக்கூடி வரும். பொருளாதார நிலை உயரும். உடல்நலனில் அக்கறை தேவை. உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். ஆரோக்கியம் சீராக இருக்கும். உடன்பிறப்புக்களால் ஆதாயம் உண்டு. மற்றவர்களால் தொல்லை உண்டு. முன்கோபத்தை குறைக்க வேண்டும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். நீண்ட நாளைய நோய் விலகும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். வெளிவட்டார பழக்க வழக்கங்கள் அதிகமாகும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பண நடமாட்டம் கூடும். உல்லாசப் பயணம் இனிக்கும். சுதந்திரமாக செயல்படும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். மனக்கசப்பு நீங்கும். நல்லோர்கள் பாராட்டு கிட்டும். பெண்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். பயணங்களால் பணம் கரையும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். அலைச்சல் ஆதாயம் தரும். கர்ம வினைகள் அகலும். பயணங்கள் பலன் தரும். விரயங்கள் கூடும். பேச்சில் நிதானம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: திரௌபதி அம்மன், அதிர்ஷ்ட எண்: *4,1,3,9*

அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,U




**ரிஷபம்:** சாமார்த்தியமாக செயல்படும் வாரம். எதிர்ப்புக்கள் தவிடுப் பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பணியில் இடமாற்றம் ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. வாழ்க்கைத் தரம் உயரும். உதவிகள் குவியும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். அத்தியாவசிய தேவைகள் பூர்த்தியாகும். போதிய தனவரவு இருக்கும். கிருபைகள் சேரும். பெண்களுக்கு ஆபரணங்கள் சேரும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். குழப்பங்கள் அகலும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். எதிர்ப்புக்கள் மாயமாய் மறையும். கருத்து வேறுபாடுகள் விலகும். பகைவர் பணிந்து நிற்பர். மதிப்பும், மரியாதையும் உயரும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். பணவரவு திருப்தி தரும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். புதிய நாட்டம் ஏற்படும். உறவினர் வருகை உண்டு. புதுமையை விரும்புவீர்கள். வரவுகள் பெருகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். கடன் வசூலாகும். கல்வியில் மேன்மை உண்டு. விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. வீண் வம்பு விலகும். ஆபரணத்தொழில் கவனம் தேவை. உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். பங்குத்தொழில் லாபம் தரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. வாயில் தேடி வாய்ப்பு வரும். இனிய தகவல் உண்டு. வீண் வம்பு விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அஷ்டதேவதை, அதிர்ஷ்ட எண்: *5,4,1,3*

அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,X




**மிதுனம்:** மனதில் மகிழ்ச்சி கிட்டும் வாரம். எண்ணங்கள் பலிதமாகும். திருமண பேச்சு முடிவிற்கு வரும். கடன் விஷயத்தில் கவனம் தேவை. விவேகம் கைக்கொடுக்கும். செல்வச் செழிப்பு உயரும். திருஷ்டிகள் விலகும். உடல்சோர்வு ஏற்படும். பெற்றோர் நலனில் அக்கறைத் தேவை. வரவுகள் மிகுதியாகும். உடல்நலம் சீராகும். மாற்று மருத்துவம் பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். தேவைகள் பூர்த்தியாகும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். ஆபரணப் பொருள் களவுப்போகும். சுபச்செய்திகள் தேடி வரும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். வணிகத்தொழில் விரிவடையும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. உற்சாகம் மேலோங்கும். தொழில்போட்டி மறையும். வாகனத்தால் செலவு ஏற்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். நல்ல செய்திகள் நாடி வரும். பதவி உயர்வு ஏற்படும். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். இடையூறு அகலும். மனக்கட்டுப்பாடு அவசியம். பயணங்களால் அனுகூலம் உண்டு. பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உழைப்பு கடுமையாக இருக்கும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். சகோதர ஒற்றுமை அதிகரிக்கும். வளமான சிந்தனை உருவாகும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். வியாபாரம் திருப்தி தரும். வம்புதும்புகள் ஒழியும். அடுத்தவர் தலையீடு அமைதியைக் கெடுக்கும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். போதாத காலம் விலகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: திருமுருகர், அதிர்ஷ்ட எண்: *6,4,3,1*

அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,U




**கடகம்:** விரக்திகள் மறையும் வாரம். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். பயணம் அனுகூலம் தரும். பாராட்டுக்கள் உயரும். திட்டங்கள் எளிதாகும். உணவுத்தொழில் உயர்வு பெறும். பிள்ளைகள் நலனில் அக்கறைத் தேவை. இசை ஆர்வம் கூடும். குடும்ப பாசம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். ஆடை, அணிகலன் சேரும். வயிறு உபாதைகள் வந்து போகும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். காரியங்கள் கை கூடும். வார்த்தைகளில் கவனம் தேவை. பதவி உயர்வு தாமதமாகும். கருத்து வேறுபாடுகள் விலகும். வியாபாரம் மந்தமாக இருக்கும். விவசாயம் லாபம் தரும். புதிய வாய்ப்புக்கள் வரும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. ஆக்கப்பூர்வமான காலம். ஆழமான மேன்மைகள் அமையும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வேண்டாத நபர்கள் விலகுவர். விவாதம் வாக்குவாதங்களாக மாறும். உயர் பதவி யோகமுண்டு. உற்சாகம் களைகட்டும். மாற்றங்களை சந்திப்பீர்கள். அரசியல் ஆர்வம் ஏற்படும். தெய்வத் திருப்பணியில் ஆர்வம் கூடும். முன்கோபத்தை குறைக்க வேண்டும். சாதனையை சந்திப்பீர்கள். பொருள் வரவு ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். புதிய தொழில் வாய்ப்பு ஏற்படும். பெற்றோர்களால் பெருமை சேரும். ஆடம்பர சுகங்கள் கூடும். வழக்குகள் தள்ளிப்போகும். தான தர்மங்கள் பலன் தரும். அத்தியாவசிய செலவுகள் ஏற்படும். நண்பகலில் நல்ல தகவல் வரும். தனச் சேர்க்கையுண்டு. புதிய முயற்சியில் ஈடுபடலாம். வாகனச்செலவு ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சரஸ்வதி தேவி, அதிர்ஷ்ட எண்: *5,1,4,3*

அதிர்ஷ்ட நிறம்: அரக்குநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,I



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**சிம்மம்:** போட்டி, பொறாமைகள் விலகும் வாரம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கடன்சுமை குறையும். தாய்வழி தகராறுகள் குறையும். கனவுகள் பலிதமாகும். கனிவான பேச்சு அவசியம். பேச்சில் நிதானம் தேவை. உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். ஆலய தரிசனம் அமைதி தரும். இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். பிள்ளைகளால் தனவரவு உண்டு. வெளியூர் பிரயாணம் வெற்றி தரும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. வெகுமானம் கிடைக்கக்கூடிய காலம். குடும்ப அன்யோன்யம் திருப்தி தரும். அவமானங்கள் அகலும். ஆண்களின் அதிகாரம் உயரும். பெண்களால் பெருமை சேரும். எதிர்ப்புக்கள் உருவாகி மறையும். வறுமையின் வாட்டம் குறையும். பதவி உயர்வு கிட்டும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. பயணங்களால் பணம் கரையும். அரசு வழி ஆதாயம் உண்டு. தொழில் அபிவிருத்தி அடையும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். தாய் வழி உறவில் விரிசல் ஏற்படும். பூமியால் லாபம் உண்டு. கலவரமான சூழ்நிலை காணப்படும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். வாழ்க்கைப் பிடிப்பு ஏற்படும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. தொழில் இரகசியம் காப்பாற்றப்படும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விக்ரஹ விநாயகர, அதிர்ஷ்ட எண்: *3,5,9,1*

அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,O




**கன்னி:** எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும் வாரம். வீண் வம்புகள் அகலும். கூட்டுத்தொழில் லாபம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. செயல்பாட்டில் தீவிரம் தேவை. உறவினர் வருகையால் கலகலப்புக் குறையும். கடன் விஷயத்தில் கவனம் தேவை. புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். பாராட்டுக்கள் கூடும். விலகி சென்றவர் விரும்பி வருவர். வரன் வாயில் தேடி வரும். அந்நிய தேச பயணம் உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். புத்தி சாதுர்யம் பெருகும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. பணவரவு சுமாராக இருக்கும். உபயோகமான காலம். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். இல்லத்தில் மனமகிழ்ச்சி கிட்டும். கணவன், மனைவி உறவில் களிப்புறவு உண்டாகும். பணப்புழக்கம் சரளமாகும். கடன்சுமை குறையும். செய்த்தொழில் வியாபாரம் செழிக்கும். இல்வாழ்வில் இனிமை கூடும். பாராட்டுக்கள் கூடும். வேண்டும் வரம் கிட்டும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். புதிய வாகனங்களால் முதலீடு உண்டாகும். பங்குச்சந்தை லாபம் தரும். நீண்டதூரப் பயணம் லாபம் தரும். கலை ஆர்வம் பெருகும். ஆதாயம் பெருகும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். பொருளாதாரம் ஏற்றம் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வேலவப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: *3,9,4,1*

அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,E




**துலாம்:** ஆடம்பர செலவு அதிகரிக்கும் வாரம். மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். வியாபாரம் வெற்றித்தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். மாணவர்களுக்கு சாதகமான காலம். கலைஞர்களுக்கு புகழ் கூடும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. சேமிப்பு உயரும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. பயணத்தால் அனுகூலம் உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். பணவரவு சுமாராக இருக்கும். பால் தானம் செய்வதால் பாவங்கள் விலகும். வம்பு தும்புகள் ஒழியும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பிள்ளைகளின் தொல்லை அகலும். புதிய கடன் வாங்க நேரிடும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உறவுகளால் செலவு அதிகரிக்கும். மருத்துவச் செலவு குறையும். மனநிம்மதி அதிகரிக்கும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டு பயணம் உண்டு. கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். பழைய பாக்கி வசூலாகும். தேக ஆரோக்கியம் திருப்தி தரும். கோரிக்கைகள் நிறைவேறும். பெரியோர்களின் பாராட்டு கிடைக்கும். வியாபாரம் விருத்தியாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தொலைதூரப் பயணம் ஏற்படும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். விளையாட்டில் கவனம் தேவை. புதிய முயற்சிகளை தள்ளிப்போடவும். தொட்டது துலங்கும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். கலவரமான சூழ்நிலை காணப்படும். கல்விச்செலவு கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விஷ்ணு, அதிர்ஷ்ட எண்: *7,5,4,3*

அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,G

***(தொடர்ச்சி 22 பக்கம்)***

# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும்
**1180**



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலயம்
### குப்பிளான், யாழ்ப்பாணம்

ஒரு ஆலய வளர்ச்சிக்குப் பரிபாலனசபை அல்லது தர்மகர்த்தாசபை ஆணிவேராகக் காணப்படுகின்றது. இவ்வாலயத்திலே காலத்திற்குக் காலம் பல திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டமைக்கு இவ்வாலயத்தின் பரிபாலன சபை முக்கிய ஆதாரமாக விளங்கியுள்ளது. திரு. நன்னித்தம்பி வேலுப்பிள்ளை அவர்களைத் தலைவராகக் கொண்டு விளங்கிய பரிபாலனசபை பல்வேறு பணிகளை நிறைவேற்றியுள்ளது. இப்பரிபாலனசபையின் மனேஜராக திரு. சின்னத்தம்பி சொக்கலிங்கம் அவர்களும், திரு. சம்பந்தர் தம்பிராஜா அவர்களும் ஆலோசகர்களாகச் சிறப்புடன் செயற்பட்டுள்ளனர். இவர்களுடையகாலத்திலே பூசைவழிபாடுகளும், அலங்கார உற்சவங்களும் காலந்தவறாமல் சிறப்பாக நடைபெற்றுள்ளது. அத்தோடு ஆலயத்திருப்பணிகள் பலவும் இக்காலப்பகுதியில் நிறைவேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. மடாலயமாக இருந்து ஆகமமுறை தழுவிய கோவிலாக மாற்றம்பெற்றபின்னர், அதற்கமையக் காலத்திற்குக் காலம் பல்வேறு பணிகளும் சிறப்பாக நிறைவேறியுள்ளது.

இவ்வாலயத்திற்குரிய மணிக்கோபுரம் திரு. சுப்பையா கனகரத்தினம் குடும்பத்தினரால் நிர்மாணிக்கப்பட்டது. இவ்வாறே, திரு. சின்னத்தம்பி சொக்கலிங்கம், திரு. சின்னத்தம்பி சிவஞானம் ஆகியோருடன் திரு. சுப்பையா சிவலிங்கம் அவர்களும் இணைந்து சொக்கவளவு சோதிவிநாயகப்பெருமான் ஆலயத்தின் பூசகர்கர் வசிப்பதற்குரிய வீட்டையும், ஆலயத்திற்குரிய வெளிமண்டபத்தினையும் அமைத்துக்கொடுத்தனர். இதேகாலப்பகுதியில் திரு. சுப்பையா பொன்னம்பலம் என்பவர், சபாமண்டபத்தின் முகப்புச்சுவரிலும், தரிசன மண்டபத்தின் முகப்புச் சுவரிலும் இரு பிள்ளையார் பதுமைகளை அமைத்து வர்ணந்தீட்டிக்கொடுத்துள்ளார். சிங்கப்பூர் அப்புக்குட்டியர் கந்தையா அவர்கள் நவக்கிரகத்தினையும், டாக்டர் சின்னப்பு செல்வநாயகம் குடும்பத்தினர் முருகன் படிமத்தினையும் பரிவார மூர்த்தியாகச் செய்து கொடுத்துள்ளனர். அத்தோடு இவ்வாலயத்தின் ஓதுவாராக விளங்கிய திரு. அப்பாப்பிள்ளை காசிப்பிள்ளை அவர்கள் பஞ்சமுக விநாயகர் சிலையை அன்பளிப்பாகச் செய்து கொடுத்துள்ளார்.

ஆரம்பகாலத்தில் சொக்கவளவு சோதி விநாயகப்பெருமானின் அருளை உணர்ந்து கொண்ட பல குடும்பங்கள், ஆலயத்தின் அருகாமையில் குடியமர்ந்து விநாயகரைப் பூசித்து வந்துள்ளனர். இவர்களுள் மாந்திரீக வைத்தியர் சிதம்பரநாத ஐயர் (தடிஐயர்) குடும்பத்தினர் குறிப்பிடத்தக்கவர்கள். இக்குடும்பத்தினர் பல்வேறுநிலையில் ஆலயப் பணியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டவர்களாக விளங்குகின்றனர். சிதம்பரநாத ஐயருடைய புதல்வர் பிரம்மஸ்ரீ சோமசுந்தர சர்மா அவர்கள் பெருநோக்குடையவர். சொக்கவளவு சோதிவிநாயகப்பெருமான் எழுந்தருளியுள்ள ஆலயத்திலே முருகப்பெருமானும் எழுந்தருளி அருள்பாலிக்க வேண்டும் என்ற சீரிய எண்ணத்தின் பயனாக, வள்ளி தெய்வானை சமேதரராகத் தோன்றும் முருகமூர்த்தி படிமத்தைத் தம்முடைய செலவிலேயே செய்து வழங்கியுள்ளார். இவ்வாறான திருப்பணி ஆலய வரலாற்றின் ஒரு முக்கிய நிலைப்பாடாகக் காணப்படுகின்றது. தாயகத்திலே அந்தணப்பெருமக்களைப் போற்றிப் பராமரிக்கும் பொறுப்பினை ஆலயங்களும், மக்களுமே பெரிதும் பேணி வந்துள்ளனர். மாறாக ஆலயத் திருப்பணியிலே ஈடுபாடு கொண்டு அந்தணப்பெருமகனும் உதவியமை குறிப்பிடத்தக்க செயலாகக் காணப்படுகின்றது.

இவ்வாறாக, பலரும் மனமுவந்து ஆலயத்திருப்பணியிலே பங்கு கொண்ட காரணத்தினால், 1962 ஆம் ஆண்டு சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலயத்தின் குடமுழுக்குப் பெருவிழா மிகச் சிறப்பாக நடந்தேறியது. இவ்விழா இணுவிலைச் சேர்ந்த இராமநாதக்குருக்கள் தலைமையில் இடம்பெற்றது. இக்காலப்பகுதியில் தையிட்டியைச் சேர்ந்த விஸ்வநாத ஐயர் அவர்களும், சுப்ரமணிய ஐயர் அவாகளும் இவ்வாலயத்தின் பூசகர்களாகக் கடமையாற்றியுள்ளனர். 1964 ஆம் ஆண்டிலிருந்து 1974 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ ந. சபாரத்தினக் குருக்கள், கீரிமலை நடேசசர்மா அவர்கள், கைதடி அரியாலையைச் சேர்ந்த சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் ஆகியோர் இவ்வாலயத்தின் பூசகர்களாகக் கடமையாற்றியுள்ளனர்.

இவ்வாறான வளர்ச்சிகள் ஆலயத்தில் காலத்திற்குக் காலம் இடம்பெற்று வந்துள்ளது. 1974 ஆம் ஆண்டு காலப்பகுதியின் பின்னர், மேலும் பல திருப்பணிகள் ஆலயத்தில் இடம்பெற்றுள்ளது. திரு. கந்தையா நடேசபிள்ளை அவர்களைத் தலைவராகக் கொண்டு இயங்கிய பரிபாலனசபையில், திருவாளர்கள் கதிரித்தம்பி ஆனந்தன், சம்பந்தர் தம்பிராசா ஆகியோர் உதவியுடன் சிறப்பாக இயங்கியுள்ளது. இவர்கள் காலத்திலேயே இவ்வாலயத்தின் ஆதிமூலபண்டிகை மூன்று தளமாகக் கட்டப்பட்டது. அத்தோடு யாகசாலை, தரிசன மண்டபம் முன்பக்கவாசல், சுற்றுக்கொட்டகைத் தூண்கள் என்பனவும் நிறுவப்பட்டதோடு, கூரைகளின் முன்பகுதிகளும் சீர்செய்யப்பட்டது.

**வளரும்..**

---

# கண்ணீர் அஞ்சலி #81

மலர்வு:
11-04-1928

உதிர்வு:
18-01-2026



## ஆன் கிரேஸ் சூசைப்பிள்ளை

எங்கள் OSTBA உறுப்பினர் #19
January 18, 2026 **அன்று இறைவனடி சேர்ந்தர்.**
**அவரது ஆத்மா அமைதியும் இறைவனின் பாதத்தை அடைய பிரார்த்திப்போம்.**

**Ontario Senior Tamils Benevolent Association**
**info@ostba.ca www.ostba.ca**
**416-473-6880**

---

*(19 பக்கத் தொடர்ச்சி)*

## *இரணைமடு குளமும் அதை சார்ந்த அரசியலும்! அந்த நீர்ப்பாசனக் குளத்தின் நீர் யாழ் மண்ணுக்குத் தேவையா?*

**- ஒரு விரிவான ஓர் பார்வை -**

---

*வருடா வருடம் பெய்கின்ற மழை குறைவாக இருந்தால் கூட இரணைமடு குளத்திற்கு நீர் வரத்து குறைகின்ற நிலையில் நீர் சேமிப்பு குறையும். அந்நிலையில் யாழ்பாணத்தார் குடிக்க நீர் வழங்கினால் கிளிநொச்சி வன்னியின் விவசாயத்திற்கு நீரின்றி படுக்கும். விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். உணவு உற்பத்தியில் குறைவு ஏற்படும். மீண்டும் குடி நீர் பிரச்சனைகள் எழலாம்.*

*ஏனெனில் இப்போது இரணைமடு குள தண்ணிய யாழ்பாணத்து தா என வாதிடுவோரின் சில்லறைத்தனமான வாதம் என்னவென்றால் “மனிதன் உணவில்லாமல் கூட சில நாட்கள் உயிர்வாழலாம் ஆனால் நீரின்றி உயிர்வாழமுடியாது” ஆகவே நீர் தான் முதன்மை எனவே அரிசி உறொஅத்தி இல்லாவிட்டாலும் பரவாயில்லை இரணைமடு தண்ணியை யாழ்பாணத்திற்கு குடிக்க தா! என்கிறது எப்பேற்ப்பட்ட வாதம்!*

*யாழில் விழும் மழைநீரை தேக்க தெரியாமல், இருக்கும் குளம், கேணி, குட்டைகளை தூர்வாரி பேண தெரியாமலும், புதிய குளங்களை அமைக்க தெரியாமலும், நிலத்தடி நீரை பாதுகாக்க தெரியாமலும் இருக்கின்ற ஓர் சமூகத்தின் வாதம் எப்படி இருக்கின்றது பார்த்தீர்களா!*

*பல நூற்றாண்டுகளுக்கு முன் பராக்கிரமபாகு மன்னன் கூறினான் “ஆகாயத்திலிருந்து விழும் ஒரு துளி நீர் கூட கடலுக்குச் செல்லக் கூடாது” என்று பெரும் சமுத்திரம் போன்ற நீர்தேக்கத்தை அன்றே கட்டி வைத்தான்.*

*அனால் வடக்கிலோ யாழ்பாணத்தில் மழை நீர் மூலம் கிடைக்கும் நீரை சேமிக்கும் ஏதுக்கள் இல்லை, இருக்கும் நிலத்தடி நீரை பாதுகாக்ஜ்ம் திட்டம் இல்லை, புதிய நீர்பாசண குளங்களை உருவாக்கும் தூர நோக்கு இல்லை, ஆனால் எங்களுக்கு இரணைமடு நீர் வேண்டும்.*

*ஒன்றை பளார் என்று ஆணித்தனமாக கூற வேண்டுமென்றால் வருடம் தோறும் மழைபெய்து இரணைமடு நிரம்பி வான் திறந்து கடலோடு கலந்தாலும் பறவாயில்லை ஒரு சொட்டு நீரும் நீர் மேலாண்மை இல்லா யாழ்பாணத்திற்கு கொடுக்க கூடாது.*

*எனவே ஒழுங்கான நீர் மேலாண்மைத்திட்டம் அமைத்து, மழைநீர் சேகரிப்பு முறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு பழைய குளங்கள், கால்வாய்கள், ஓடைகள் போன்ற பல நீர் வளங்களை சீரமைத்து நீர் பாதுகாப்பு குறித்த விடயங்களில் அரசியல் மற்றும் சமூகம் பாரிய கவனம் செலுத்தி “இருக்கும் நீரை முதலில் சேமிப்பதே முதல் தீர்வு” ஆகும். இது மக்கள் வாழ்வாதாரத்தையும் எதிர்கால நீர் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும். இதுவே எதிர் கால தலைமுறைக்கு நாம் செய்யும் உதவியும் காலத்தின் அவசியமும் ஆகும்.*

**- கு.மதுசுதன் B.Sc(Hons), M.Sc**

# இவ்வார ராசிபலன்

(20 பக்கத் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** மனக்கசப்பு நீங்கும் வாரம். பதவி உயர்வு கிட்டும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. சகோதரியினால் நன்மை உண்டு. உடல்நலம் மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். கணவன், மனைவி உறவு மேம்படும். ஏற்றமான தருணம். தொழில் அபிவிருத்தி அடையும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். நினைத்த காரியம் நிறைவேறும். பயணங்களால் பணம் கரையும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. வயிறு சம்மந்தமான நோய் வந்து நீங்கும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பழைய பாக்கி வசூலாகும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். திருமண முயற்சி பலன் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழிலில் ஏற்றம் கிடைக்கும். அன்னதானம் செய்து ஆனந்தம் அடையலாம். தனவரவுகள் பெருகும். நிர்வாக பொறுப்புக்கள் கூடும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. நீண்ட நாள் பிரச்சினை முடிவுக்கு வரும். நல்லோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். பங்குச்சந்தையில் லாபம் கூடும். சேமிப்பு பெருகும். திறமைகள் வெளிப்படும். பழையக்கடன் அடையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். வீண் செலவுகள் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதித்ய பகவான், அதிர்ஷ்ட எண்: 5,3,2,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,J




**தனுசு:** வருமானம் அதிகரிக்கும் வாரம். எதிரிகள் உதிரியாகும் காலம். செல்வாக்கு கூடும். சொல்வாக்கு மேம்படும். பங்குச்சந்தையில் பணம் புரளும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். தர்மச்சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் சகாயம் தேவை. "ஆலய தரிசனம் பாவ விமோசனம்" "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" மாற்றங்கள் ஏற்படும். புதுமையை விரும்புவீர்கள். அரசுதுறையில் ஆதாயம் உண்டு. வாழ்த்துச் செய்திகள் வரும். மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். புதிய நட்பு ஏற்படும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் உண்டு. இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் போக்கும். வெற்றி எட்டும் காலம். மகிழ்ச்சியான செய்தி வரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். மனதில் மகிழ்ச்சியும் சிந்தனையில் முதிர்ச்சியும் பெருகக்கூடிய காலம். புதிய முயற்சிகளில் கவனம் தேவை. உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். உற்சாகம் அதிகரிக்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். பேச்சில் துணிவு தேவை. மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டுப் பயணம் உண்டு. நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும். மருத்துவச் செலவுகள் குறையும். நிம்மதி அதிகரிக்கும். கடன் வாங்க நேரிடும். பங்குச்சந்தையில் கவனம் தேவை. பிரார்த்தனையால் பலன் உண்டு. புதிய வேலை வாய்ப்பு கிட்டும். கோரிக்கைகள் நிறைவேறும். பெரியோர்களின் பாராட்டு கிடைக்கும். வியாபாரம் விருத்தியாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 2,9,6,4
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,M




**மகரம்:** வீண் விரயங்கள் குறையும் வாரம். போட்டி, பொறாமைகள் விலகும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பணவரவு பெருகும். பாகப்பிரிவினை ஏற்படும். தாய்ப்பாசம் அதிகரிக்கும். மனை வாங்கும் யோகம் உண்டு. கல்வியில் கவனம் தேவை. மாங்கல்ய நமஸ்காரம் மனோ தைரியம் கொடுக்கும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். அலைபேசியால் அலைச்சல் அதிகமாகும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். மன நெருக்கடிகள் தீரும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். வெளியூர் பயணம் வெற்றி தரும். ஆரோக்கியம் சீராகும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. வங்கி சேமிப்பு உயரும். விருந்தினர் வருகை உண்டு. பயணம் வெற்றி தரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். கமிஷன் தொழில் லாபம் தரும். வாழ்வில் வசந்தம் கூடும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். சூழ்நிலைகள் சாதகமாகும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. அந்நிய தேச பயணம் உண்டு. இரும்புத் தொழில் ஏற்றம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. புண்ணியம் சேரும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். பிரச்சனைகள் அகலும். மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும். பணமும், பாராட்டும் கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சபூதக்கடவுள், அதிர்ஷ்ட எண்: 5,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,K




**கும்பம்:** வெற்றிச் செய்தியை தொட்டு ரசிக்கும் வாரம். இடமாற்றம் நன்மை தரும். எண்ணங்கள் பலிதமாகும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். பிள்ளைகளால் தொல்லைகள் அதிகமாகும். வாகனத்தால் செலவு ஏற்படும். தாய்வழி தகராறு குறையும். கௌரவம் உயரும். கனவுகள் பலிதமாகும். கடன் சுமை குறையும். காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். கடுமையான காலம். செயல்களில் கவனம் தேவை. பேச்சில் நிதானம் தேவை. மருத்துவச் செலவுக் குறையும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கலைகளில் ஆர்வம் கூடும். கனிவான பேச்சு அவசியம். எதிர்பார்த்த உதவி தாமதம் ஆகும். விரக்திகள் மறையும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உத்தியோக உயர்வு உண்டு. பழையக்கடன் வசூலாகும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். மறைமுக எதிர்ப்புக்கள் உருவாகும். விரயங்கள் கூடும். தேக ஆரோக்கியம் கூடும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். தாராளமான தனவரவு உண்டு. கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். நட்பு வட்டம் விரிவடையும். காரிய வெற்றி கிடைக்கும். மதிநுட்பம் மாபெரும் வெற்றித் தரும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். எதிர்காலச் சிந்தனை ஏற்றம் பெறும். உத்தியோக மாற்றம் உறுதியாகும். வீண் வம்புகள் அகலும். குடும்ப வி'யத்தில் கவனம் தேவை. பிள்ளைகளின் கல்வியால் பெருமை சேரும். வெற்றியும், வெகுமதியும் கூடும்.
நூதன பொருள் சேர்க்கை ஏற்படும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 9,1.4,3
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,P




**மீனம்:** தன்னடக்கத்தோடு செயல்படும் வாரம். வாயில் தேடி வாய்ப்பு வரும். ஆரோக்கியம் அதிகரிக்கும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பங்குத்தொழில் லாபம் தரும். ஆபரண தொழில் கவனம் தேவை. வழக்குகளில் திருப்பம் ஏற்படும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். தொழில் வளம் கூடும். வரவுகள் அதிகரிக்கும். உடல்நலம் சீராகும். மாற்று மருத்துவம் பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். ஆபரணப் பொருள் களவு போகும். சுபச்செய்தி தேடி வரும். ஊதிய உயர்வு கிட்டும். வியாபாரம் சுமாராக இருக்கும். புதிய முயற்சி பலிதமாகும். செயல்களில் நிதானம் தேவை. கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். வாகன மாற்றம் ஏற்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். பெற்றோர்களின் பாராட்டு கிடைக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். எண்ணங்கள் பூர்த்தியாகும். வளமான சிந்தனை உருவாகும். அலைச்சல் ஆதாயம் தரும். திட்டம் வெற்றி பெறும். பணத்தேவை அதிகரிக்கும். பயணங்களால் வெகுமதி கூடும். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். இடையூறு அகலும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். நல்ல செய்திகள் நாடி வரும். பதவி உயர்வு ஏற்படும். கவனமுடன் செயல்பட வேண்டும். பெண்களுக்கு பெருமை சேரும். புது முயற்சிகள் பலன் அளிக்கும். திண்டாட்டங்கள் மறையும். கொண்டாட்டங்கள் கூடும். வேதனைகள் சாதனையாகும். பிள்ளைகள் வழியில் கவனம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். பெண்களுக்கு யோகம் கூடும். பெருமைமிக்க காலமாகும். வறுமையின் வாட்டம் குறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காமாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 1,4,7,5
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,J

# இலங்கையின் 79வது சுதந்திர தினத்தையொட்டி மன்னாரில் இருந்து சக்கர நாற்காலியில் மாற்றுத்திறனாளியான இளைஞனின் சுற்றுப்பயணம் ஆரம்பம்

**- எஸ்.ஆர்.லெம்பேட் (20-01-2026)**



மன்னாரில் இருந்து சக்கர நாற்காலியின் உதவியுடன் மாற்றாற்றல் கொண்ட இளைஞரான வவுனியா சூடுவந்த குளம் பகுதியை சேர்ந்த மக்கின் முகமது அலி என்பவர் 20ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை (20-01-2026) காலை 8.45 மணி அளவில் தனது பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

19ம் திகதி புதன்கிழமை அன்றைய தினம் திங்கட்கிழமை மன்னார் வந்த குறித்த இளைஞன் தனது பயணம் தொடர்பான விளக்கத்தை மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனை சந்தித்து தெரியப் படுத்திக் கொண்டார்.

இந்த நிலையில் 20ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.45 மணி அளவில் மன்னார் பஜார் பகுதியில் உள்ள தந்தை செல்வாவின் சிலைக்கு முன்பாக இருந்து தனது பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

இலங்கை நாட்டின் 79 ஆவது சுதந்திர தினத்தை யொட்டியும் சில கோரிக்கைகளை முன் வைத்து மாற்றாற்றல் கொண்ட இளைஞரான மக்கின் முகமது அலி மன்னாரில் இருந்து சக்கர நாற்காலியூடான இலங்கை முழுவதும் சுற்றுப்பயணம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

வடமாகாண சக்கர நாற்காலி கிரிக்கெட் அணியின் தலைவரான மக்கின் முகமது அலி தொடர்ச்சியாக கடந்த காலங்களில் பல்வேறு செயல்பாடுகளில் ஈடு பட்டுள்ளார்.

இந்த நிலையில் இலங்கை நாட்டின் 79 ஆவது ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு சக்கர நாற்காலியூடாக இலங்கை பூராகவும் தனது பயணத்தை ஆரம்பித்துள்ள தோடு, குறிப்பாக, இலங்கை நாட்டில் ஏற்பட்ட அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்காக பல்வேறு நாடுகள் மனிதாபினான உதவிகளை மேற்கொண்டுள்ளனர்.



அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் வகையிலும் புலம் பெயர் உறவுகளும் உதவிகளை மேற்கொண்டுள்ளனர். அவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்ளும் வகையிலும் குறித்த பயணம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் இலங்கை மக்கள் அனைவரும் அனர்த்தத்தின் போது எவ்வித வேறுபாடுகள் இன்றி ஒருவருக்கு ஒருவர் உதவிகளை மேற்கொண்டுள்ளனர். இந்த நிலையில் இலங்கை நாட்டு மக்களிடையே உள்ள ஒற்றுமையையும், சமூக நல்லெண்ணத்தையும் நோக்காக கொண்டு குறித்த பயணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

மேலும் படித்த மாற்றுத்திறனாளிகள் வேலை வாய்ப்புகள் இன்றி முடங்கியுள்ளனர். அவர்களுக்கான வேலை வாய்ப்புகளையும் அரசாங்கம் பெற்றுக் கொடுக்க வேண்டும். என்ற கோரிக்கைகளை முன் வைத்து குறித்த பயணம் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை முழுவதும் சுமார் 1500 கிலோ மீற்றருக்கும் அதிகமான கடற்கரையோரமாக குறித்த பயணம் முன்னெடுக்கப்படுகின்றது.

எனவே மக்கள் தமது ஆதரவை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து செவ்வாய்க்கிழமை அன்றைய தினம் காலை 8.45 மணி அளவில் தனது பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND · INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE



- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

**NESAN**

**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · NATIONAL BANK · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · Manulife · Desjardins · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8








26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எங்களுடன்
தொட்புு கொள்ளவும்.
416 752 1524

உதயம் 1555 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 23, 2026

# கனடாவைத் தலைமையகமாகக் கொண்ட "உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் தாயகம் சென்றுள்ளார்.



எமது யாழ் மண்ணில் 1974ம் நிறுவப்பெற்ற பின்னர் 50 ஆண்டுகளைக் கடந்தும் தொடர்ச்சியாக இயங்கிவரும் தமிழ்ப் பண்பாட்டு அமைப்பு என்ற நற்பெயர் பெற்றதும், தற்போது கனடாவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கிவருவதுமான "உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் அகிலச் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் சில நாட்களுக்கு முன்னர் தாயகம் சென்றுள்ளார்.

அவருக்கு கொழும்பு விமான நிலையத்தில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளையின் முக்கிய உறுப்பினர்களால் சிறப்பு வரவேற்பு அளிக்கப்பெற்றது.

# கனடாவில் நிதித்துறை சார்ந்த ஆலோசனைகள் வழங்கும் நிறுவனத்தை நடத்திவரும் வெற்றியாளரான திருமதி ஷர்மிலி தங்கராஜா



இவ் உலகத்தில் பல விதமான பரிணாமங்களை ஒரு பெண் அடைகிறாள். வாழ்க்கையில் சவால்களையும் இன்னல்களையும் எதிர்த்து சாதனைகள் பல படைத்து கொண்டிருக்கும் உறுதியான மனமும் உயர்வான எண்ணமும் கொண்ட பல பெண்கள் இருக்கிறார்கள்.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரின் பெண்கள் நடத்த வந்தோம்"என்ற பாரதியின் வரிக்கேற்ற ஒரு புதுமைப் பெண் பற்றிய தகவல்களை இவ்வாரத்தின் "கனடா உதயன்" பத்திரிகை வாயிலாக உங்களோடு நாங்கள் பகிர்ந்து கொள்கின்றோம்.

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

# ரொறன்ரொவில் கலையகத்தைக் கொண்டு இயங்கிவரும் "யுகம்" வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊடகம் நடத்திய சிறப்பாக "பொங்கல் விழா — 2026







கடந்த பல வருடங்களாக பன்முகக் கலைஞர்களான கணபதி ரவீந்திரன் மற்றும் ரூபி யோகதாசன் ஆகியோர் தலைமையில் ரொறன்ரொவில் கலையகத்தைக் கொண்டு இயங்கிவரும் "யுகம்" வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊடகம் நடத்திய சிறப்பாக "பொங்கல் விழா-2026 கடந்த 17ம் திகதி சனிக்கிழமையன்று மாலை ஸ்காபுறோ **Burrows Hall Community Centre** மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி பொங்கல் விழா-தமிழர் மரபுரிமை மாதம் வைபவங்களுக்கு ஸ்காபுறோ வடக்கு ரொறன்ரோ நகர சபை உறுப்பினர் ஜமால் மையர்ஸ் அவர்கள் ஆதரவு வழங்கியிருந்தார். பல்சுவை கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இங்கு காணப்பெறும் படங்களில் கலந்து கொண்ட கலைஞர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்களுடன் கணபதி ரவீந்திரன் மற்றும் ரூபி யோகதாசன்

மற்றும் ஸ்காபுறோ வடக்கு ரொறன்ரோ நகர சபை உறுப்பினர் ஜமால் மையர்ஸ் உட்பட பலர் நிற்பதையும் கலைஞர்கள் கௌரவம் பெறுவதையும் காணலாம்.

# வடக்கில் அனுர: தேசிய மக்கள் சக்தியின் வியூகம் என்ன?

**— யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் —**

தமிழ்த் தேசிய தரப்புகள் குறிப்பாக மேற்கண்ட மீம்ஸ்களை உருவாக்கும் தரப்புகளும் உட்பட பெரும்பாலானவர்கள், ஒருவர் மற்றவரை அல்லது ஒரு கட்சி மற்ற கட்சியை வில்லன் ஆக்கி துரோகி ஆக்கி ஒருவர் மற்றவர் மீது மலத்தை அள்ளி வீசும் போது. இரண்டு தரப்பிலும் மலம்படுகிறது. இரண்டு தரப்புமே நாறுகின்றது. இதனால் தமிழ்த் தேசியப் பரப்பில் யாருமே கதாநாயகராக எழ முடியவில்லை.இந்த வெற்றிடத்திற்குள் அனுர ஒரு கதாநாயகராக இறக்கப்படுகிறார்.

(தொடர்ச்சி 10ம் பக்கம்)



